50வது ஆண்டை நோக்கி...

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா



## மக்களை மனமார நேசிக்கத் தெரிந்தவர்!

ஜூன் 2012

விலை 40/-




**நீங்கள் தரமான இலக்கியச் சுவைஞரா?**

'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளைத் தொடர்ந்து படியுங்கள்.

கடந்த 46 ஆண்டுகளுக்கு மேலாக நமது மண்ணைச் சார்ந்த படைப்பாளிகளின் பல்துறைப்பட்ட நூல்களை வெளியிட்டு வருகின்றது, மல்லிகைப் பந்தல் நிறுவனம்.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகளை நீங்கள் வாங்கும் போது, அதனது ஆதரவு மல்லிகை மாத இதழுக்கும் சுவறுகின்றது என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்

மல்லிகைப் பந்தல்
தொலைபேசி: 2320721

# மல்லிகை


'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெருமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது- அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

## 50 – ஆவது ஆண்டை நோக்கி...

ஜூன் - 397


'Mallikai' Progressive Monthly Magazine


மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல- அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.
மல்லிகையில் வெளியாகும் எழுத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பானவர்கள்!


201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com


# ஒன்றைத் தெளிவாகவே நம்புங்கள் – நாளை நமது இலக்கியம் உலகெங்கும் பேசப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் வந்து வந்து போகப் போக, முன்னெப்போதும் இல்லாத ஒரு மனப்பயம் அல்லது மனக்கிலேசம் மெல்ல மெல்ல எனது நெஞ்சத்தையும் எட்டிப் பார்க்கின்றது.

- மல்லிகையின் அடுத்த காலகட்டம் என்ன?

இலக்கியச் சுவைஞர்களோடு, நான் பரஸ்பரம் மனந்திறந்து கதைக்க வேண்டிய சங்கதிகள் பல உண்டு. இவை அனைத்தும் என் நெஞ்சு நிறைந்தளவு மண்டிப் போய்க் கிடக்கின்றன.

எனது சகல மன உணர்வுகளையும் வாழ்க்கை அநுபவங்களையும் ஏற்கனவே நூல்கள் வடிவில் எழுதி வெளியிட்டு ஆவணப்படுத்தி வைத்துள்ளேன்.

இதில் வரலாற்றுத் தகவல் என்னவென்றால், எனது சுயவரலாற்றில் பெரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY' என்ற தலைப்பில் 27.06.2004 அன்று எனது பிறந்தநாள் ஞாபகார்த்தமாக வெளியிட்டிருந்தேன்.

இது இலங்கை இலக்கிய வரலாற்றில் புதுப் பாய்ச்சலொன்று.

நான் எனது இளமைப் பருவ காலத்தில் இருந்தே என்னை ஈழத்து இலக்கியத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஒப்புக் கொடுத்து, இயங்கி வருகின்றேன் என்ற எதார்த்த உண்மை, உங்கள் சகலருக்குமே தெரிந்த உண்மையாகும்.

எனது இளம் பராயத்திலிருந்தே எனக்கென்றொரு அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்ட கொள்கையைக் கடைப்பிடித்து வந்துள்ளேன்.

இதனால் இலக்கிய உலகிலும், பொதுவாகப் பொது அரசியல் வட்டாரத்திலுமே நான் பல கோணங்களில் விமரிசிக்கப்பட்டும், வார்த்தைகளால் தாக்கப்பட்டும் வந்துள்ளதைப் பொது வாழ்க்கையின் மேடு பள்ளங்களைத் தெரிந்து வைத்துள்ளவர்கள் ஏற்கனவே அறிந்து புரிந்து வைத்துள்ளார்கள்.

எனது இளமைக்காலம் முதல் நான் பின்பற்றிக்கொண்டு வரும் கொள்கைகளை நான் யாருக்காகவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுத்ததில்லை. சமரசம் செய்து கொண்டதுமில்லை.

எனக்கெனத் தனித்துவமான ஒரு கொள்கை அல்லது கோட்பாடு கொண்டியங்க எனக்கு எத்தனை சுதந்திரமும் தீவிர நம்பிக்கையும் உள்ளதோ, அதைப் போலவே ஏனையோருக்கும் தத்தமது கொள்கைகளை, கோட்பாடுகளைப் பின்பற்றி இயங்கப் பரிபூரண உரிமை உண்டு என மெய்யாகவே அறிவுப்பூர்வமாக நம்பி, கடந்த காலங்களில் இயங்கி வந்துள்ளேன்.

அதன் அடிப்படைக் காரணமாகவே தான் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலங்களாக என்னால் இத்தனை ஆரோக்கிய மனநிதானத்துடன் இயங்கி வர முடிந்துள்ளது. அதற்கு மல்லிகையின் தொடர் வரவே சாட்சி சொல்லும்!

எனது இலக்கியப் பொது வாழ்க்கையில் நான் எவரையுமே விரோதித்ததில்லை. எவரையுமே பகைத்ததுமில்லை.

எனது அடிப்படைக் கருத்துக்களுக்காக உறுதியாக நின்று போராடியிருக்கின்றேன்.

இலக்கிய உலகில் மாற்றுக் கருத்துக்களை நமக்கு விருப்பமில்லாததாக இருந்தாலுங்கூட, சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இல்லாது போனால், மனித சமுதாயத்தின் ஆரோக்கியமான சிந்தனைகள் மட்டுப்படுத்தப்பட்டுவிடும். தேங்கிப் போய்விடவும் கூடும்.

எனவே, மனதை விசாலப்படுத்தி வாழப் பழகிக் கொள்வோம். இலக்கிய உலகில் கருத்தைப் பேணிப் பாதுகாப்பதைவிட, உண்மை நட்பைத் தொடர்ந்து பேணி வருவதே மிக மிகச் சிரமமான காரியமாகும். - அதிலும் உணர்ச்சி வயப்பட்ட கலைஞர்களுடன், எழுத்தாளர்களுடன் விட்டுக்கொடுத்துப் பழகி வருவதே ஒரு புதுவித மனத்தத்துவ முறையாகும்.

ஓர் இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து இவைகள் அனைத்தையும் சமாளித்து, வெற்றி கொள்வதற்கே தனித் திறமையும் தனிப்பட்ட பயிற்சியும் அவசியத் தேவையாகும்.



# நாம் இன்று வாழும் இந்தப் பூமி – அடுத்த தலைமுறையினருக்கும் சொந்தம்!

**ந**மது பிரதேசங்களில் தொடராகவும் ஆக்கபூர்வமாகவும் நடந்தேறி வரும் கலை, இலக்கியக் கலாசார நிகழ்வுகளைச் செய்தித் தாள்களில் படித்தறியும் போது, மெய்யாகவே நெஞ்சம் சிலிர்ப்படைந்து பூரித்துப் புழகாங்கிதம் கொள்ளுகின்றது.

சுமார் மூன்று தஸாப்த காலகட்டமாக உள்நாட்டு யுத்த நெருக்கடியில் சிக்கிச் சீரழிந்து கிடந்த நமது தாய்த் திருநாடு, இன்று பல உள்நாட்டுச் இனச் சிக்கல்களில் இருந்து மெல்ல மெல்ல விடுபட்டு, இன்று இங்கு வாழும் தேசிய இனங்கள், ஓர் இடைக்காலச் சுமுக முடிவுக்கு வரத் தயார் நிலைப்படுத்தி, தம்மைத் தாமே சுதாகரித்து வரும் ஆரோக்கியமான ஒரு சூழ்நிலையை நாம் நேரில் கண்டு வருவது மனதிற்குச் சற்று ஆறுதல் தருவதாகவே உள்ளது.

உலகத்தில் தீர்க்கப்படாத பிரச்சினை என்று ஒன்றுமேயில்லை.

அந்த மண்ணில் வாழும் சகல இன மக்களும் அடிப்படையாகவும், தீர்க்க திருஷ்டியாகவும் தாம் பிறந்த மண்ணை மனமார நேசிக்கத் தொடங்கினாலே பாதிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும்.

நாம் வாழும் இந்த மண் நமக்கு மட்டுந்தான் சொந்தம் என நாம் வாழும் இந்தக் காலகட்டத்தில் சிந்தித்துச் செயலாற்றிக்கொண்டு உரிமை பாராட்டி வருகின்றோம். இதை நிலைநாட்ட நமது காலத்திலேயே பல உலக மகா யுத்தங்கள் நடந்தேறி முடிந்துள்ளன.

ஆனால், நாளை வரப்போகும் புதிய சந்ததியினருக்கும் இந்தப் பூமி சொந்தம் என்பதை நாம் இன்று நமது வசதிக்காகத் தற்காலிகமாக மறந்துபோய்ச் செயற்பட்டு வருகின்றோம். நமக்குள்ளேயே சகோதரச் சண்டை போடுகின்றோம்.

ஆனால், அடிப்படை உண்மை என்னவென்றால், இன்று தற்காலிகமாகச் சொந்தம் கொண்டாடிவரும் இன்றைய தலைமுறையினரைத் தவிர, நாளை மலரப் போகும் எதிர்காலத் தலைமுறையினருக்கே இந்த நிலம் சொந்தமாகி விடப் போகின்றது. இதுதான் எதார்த்தம். அடிப்படை உண்மை!

- இறுதியாக ஒன்று. இன்று சகல துறைகளிலும் உலகம் நெருங்கி நெருங்கி வருகின்றது. இந்த மானுட நெருக்கத்தை நாம் ஆக்க வழிகளில் பயன்படுத்திப் பயனடைவோம்!

அட்டைப்படம் :

# மனிதநேயச் செம்பல்

# மு.கதிர்காமநாதன்

- த.சிவநித்திலன்

**ம**னித சமுதாயம் பல ஆற்றல் படைத்தோரைத் தரணிக்குத் தந்து பெருமை பெற்று நிற்கின்றது. அவர்களாற்றிய சமூக, சமயப் பணிகள் மூலம் மக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தாம் பிறந்த நாட்டுக்கும், மக்களுக்கும் பயன்தரும் வகையில் பணியாற்றுபவர்கள் என்றும் மதிக்கப்படுவார்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டு தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கின்றது. முன் வந்தோர் செய்த தன்னலங்கருதா அர்ப்பணிப்பு, தியாகம் என்பவற்றால் இந்நிறுவனம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதன் தற்போதைய தலைவராக இருந்து செயலாற்றிவரும் மு.கதிர்காமநாதன் அவர்கள் தமிழ்ச் சங்க வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகின்றார். அவருடைய காலத்தில் சங்கம் பௌதீக வள வளர்ச்சியில் மட்டுமன்றி, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகிய துறைகளிலும் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டு நிற்கின்றது.

நயினாதீவைச் சேர்ந்த முத்தையா - பூரணம் தம்பதியினரின் மகனாக 21.03.1944இல் பிறந்த கதிர்காமநாதன், தமது ஆரம்பக் கல்வியைச் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் கற்றார். தொடர்ந்து தமது கல்வியைச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மேற்கொண்டார். கல்லூரிப் படிப்பை நிறைவு செய்து தொழில் நிமிர்த்தம் கொழும்புக்கு வந்தவர், தமது உறவினர்கள் வர்த்தகத் துறையில் பிரகாசிப்பதைக் கண்டு எதிர்கால முன்னேற்றத்திற்கு வர்த்தகத்துறையே சிறந்தது எனக் கொண்டு அதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். வர்த்தகத்துறையில் வெற்றி வாகை சூடிய இவர், அதன் வளர்ச்சியால் பலரின் மதிப்புக்குள்ளானார். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற வாக்கியத்திற்கு அமைவாக வர்த்தகத்துறையிலிருந்து விடுபட்டு பொதுப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மேல் வகுப்பில் கல்வி கற்கும் காலத்தில் எழுத்துத் துறையில் நாட்டம் கொண்டவராக இருந்தார். தினகரன், ஈழநாடு, தமிழன் ஆகிய

பத்திரிகைகளில் அவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன. மாணவப் பருவத்தி லிருந்தே சமத்துவச் சிந்தனை கொண்டவ ராகிய கதிர்காமநாதன் அவர்கள் தமிழ்ப் பணி, சமயப்பணி, சமூகப்பணி என்று தமது பணிகளைத் தொடரலானார். இத்தகைய சேவைகள் காரணமாகச் சமுதாயத்தின் கண் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டார்.

இவரது பொதுநலப் பணிகளுக்கெல் லாம் உந்துசக்தியாக அவர் தம் துணைவி யார் பரமேஸ்வரி இருந்து செயற்பட்டு வரு கின்றமை அவருக்குப் பேருதவியாக அமைந்துள்ளது. சமூகத் தொண்டு நிறு வனங்களுக்கெல்லாம் தாராளமாக உதவு தல் மூலம் இருவரும் மனநிறைவு கண்டு வருகின்றனர்.

திரு. மு.கதிர்காமநாதன் அவர்கள் சர்வதேச மாநாடுகள் பலவற்றில் பங்கு கொண்டு தமது ஆற்றலை மேம்படுத்தி வந்ததுடன் கனடா, அமெரிக்கா, லண்டன், ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்ச லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடு களுடன் மேலும் மலேசியா, இந்தோ னேசியா, யாவா, மொறிசியஸ், இந்தியா, சிங்கப்பூர், மாலைதீவு ஆகிய நாடுகளுக் கும் சென்று வந்துள்ளார். தமது வாழ்நாளில் இத்தகைய நாடுகளையெல்லாம் சென்று பார்த்து வந்தமையினால், அனுபவங்கள் பலவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்தமையை, அவர் பலரிடம் அவ்வப் போது தெரிவித்தும் வந்துள்ளார்.

இவருடைய சமூகப்பணியின் உச்ச மாகப் பல கௌரவப்பட்டங்கள் இவரை நாடி வந்துள்ளமை சிறப்பு அம்சமாகும். கலாநிதி, மனிதநேயச் செம்மல், சைவச் செம்மல், சைவச் சான்றோன், சமூகச் செம்மல், சைவத் தமிழ்ச் செம்மல், சிவநெறிக் காவலன், செந்தமிழ்க் காவலன் என்று பல பட்டங்கள் இந்தியா, கனடா, லண்டன், மொறிசியஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் கிடைத்தமை பெருமைக் குரிய விடயமாகும்.

இலங்கையில், 1998இல் அகில இலங்கைச் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட இவர், 'தேசமானியப் பிரேமி' என்னும் பட்டத்தை யும் பெற்றுக் கொண்டார்.

இலங்கையிலுள்ள மிகப் பிரபலம் வாய்ந்த நிறுவனங்களில் தம்மை இணைத் துக் கொண்டு சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டு வருகின்றமை அவரைச் 'சமு தாய அந்தஸ்து' உள்ளவராக ஆக்கி யுள்ளது. உலகச் சைவப் பேரவையின் செயலாளராக 1999இல் இருந்து இன்று வரை பதவிவழி தன் கடமைகளை நிறை வேற்றி வருகின்றார். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதிச் செயலாளராக 2006இல் இருந்து செயலாற்றி வருகின்றார். மேலும் கொழும்பு விவேகானந்த சபையின் உபதலைவராகவும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் துணைத்தலைவராகவும் (2001-2006), 2006 தொடக்கம் 2008 வரை இரண்டு வருடங்கள் தலைவராகவும் இருந்துள்ளார். தாம் கல்வி கற்ற கல்லூரிக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் தமது சொந்தச் செல வில் அலங்கார நுழைவாயிலை அமைத்

துக் கொடுத்துள்ளார். அது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுவதாக அமைந் துள்ளது.

மேலும், இலங்கை இந்திய நட்புறவுச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக இருக்கும் இவர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள நிதிக்குழு உறுப் பினராகவும் கடமையாற்றுகின்றார். திருக் கேதீஸ்வரத் திருப்பணிச்சபையின் உறுப் பினராகிய இவர், நயினாதீவு அபிவிருத்தி ஒன்றியத்தின் துணைத்தலைவருமாவார். இத்தகைய பல நிறுவனங்களில் பதவிவழி கடமைகளை ஆற்றி வருவதன் மூலம் பலராலும் அறியப்பட்ட மக்கள் சேவகனாக தம்மை இனங்காட்டிக் கொண்டுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 1998இல் உறுப்புரிமை பெற்ற இவர் 2000 ஆம் ஆண்டு ஆட்சிக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 2001இல் துணை நிதிச்செயலாளராகவும், 2002 தொடக்கம் துணைத் தலைவர்களில் ஒருவராகவும் பதவி வகித்த இவர் 2010ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவ ராகவும், 2011ஆம் ஆண்டும் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டார்.

இவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தலைமை வகித்த இரண்டாண்டு காலப் பகுதியில் பல பணிகளை முன்னெடுத்துத் திறம்படச் செய்து முடித்துள்ளார். வள்ளுவர் விழா, 70ஆவது ஆண்டு நிறைவு எழுச்சி விழா ஆகிய விழாக்களைத் தலைமை வகித்து நடத்தியது மட்டுமல்லாமல், 'முப்பால்', 'நடந்தாய் வாழி' ஆகிய விழாச் சிறப்பு மலர்கள் வெளிவர தமது பூரணத்துவமான பங்களிப்பை வழங்கி யுள்ளார்.

'அறிஞர்கள் சொன்ன அனுபவ மொழிகள்' என்னும் நூலை மணி மேகலைப் பிரசுரமாக வெளிக்கொணர்ந் துள்ளார். இந்நூல் 4 பதிப்புகளாக 4000 பிரதிகள் வெளிவந்துள்ளது. கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடான சங்கத்தமிழ் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து கனதி யான இதழாக அதை வெளியிட்டு வைத்துள்ளார். சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்து வரும் இவர் சங்க விருந்தினர் விடுதி, அலங்கார நுழை வாயில் அமைப்பதில் தனவந்தர்களின் உதவியைப் பெற்று, அவற்றைச் சிறப்பாக அமைத்துள்ளார். அது அவரின் பெருமைக் குச் சான்றாகும்.

அரசியல் என்பது ஒரு சூதாட்டம் போன்றது என்றதினால் அதில் ஈடுபட மனமின்றிப் பொதுப் பணிகளிலேயே காலத்தைக் கழிக்கின்றேன் என்று கூறும் இவர் பல பொது நிறுவனங்களுக்குத் தன்னாலான உதவிகளை விளம்பரமின்றி அடக்கமாகச் செய்து வருவதாகவும் அறி கிறோம். மனிதநேயப் பணிகளில் முழுமை யாகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டு வரும் இவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தவுள்ள உலகத் தமிழ் இலக்கிய விழா விற்கான வெற்றிக்காகவும் உழைத்து வருகின்றார்.

அவருடைய ஆன்மீகப் பணி, சமூகப் பணி, தமிழ்ப் பணி, இலக்கியப் பணி என்பன தொடர எமது நல்வாழ்த்துக்கள்.

# எனது பதிவேட்டிலிருந்து...

- கே.எஸ்.சிவகுமாரன்

## Colonial Cousins

கொலோனியல் கசின்ஸ் என்ற இரட்டையரின் இசையை நீங்கள் கேட்டிருக்கக் கூடும். மகிழ்ந்தும் போயிருக்கலாம். இவர்களில் ஒருவரின் பெயர் ஹரிஹரன். இவர் தமிழ்ப் படங்களிலும் பின்னணிப் பாடகராய் இருந்து வருகிறார். தமிழ்நாட்டுத் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மேல்நாட்டுச் சங்கீதப் பாணியில், கர்நாடக இசையையும் சேர்த்துப் பாடல் இசைத்திருப்பது எனப்படும் கலப்பிசையில் பாராட்டும்படியாக இருக்கிறது. இலங்கையில் பிறந்து உலகப் புகழ்பெற்ற கலாநிதி எல்.சுப்பிரமணியம், இளையராஜா என்ற இசையமைப்பாளர் போன்றோரும் இத்துறையில் அதிக கவனத்தை ஏற்கெனவே பெற்றிருக்கின்றனர். (Times of Oman, April 13, 1999)

## Leonard Wolf

வி்ர்ஜினியா ஊல்ப் என்ற ஆங்கில இலக்கியப் பெண்மணி தனது பிரசித்தி பெற்ற நாவல்களில், 'நனவோடை உத்தி' (Stream of Consciousness) என்ற முறைமையைப் பயன்படுத்தி வெற்றி கண்டவர்களில் ஒருவர். அவருடைய கணவர் லெனாட் ஊல்ப், இலங்கையில் பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் உதவி அரசாங்க உத்தியோகத்தராகப் பணி புரிந்தவர். அவர் எழுதிய நாவல் 'கானகத்தேயொரு கிராமம்' (Village in the Jungle) இலங்கையின் முன்னோடி ஆங்கில நாவலாகக் கருதப்படுகிறது. இதனைத் தழுவி சிங்களத்தில் 'பத்தேகம' (Baddeagama) என்ற படமும் வெளிவந்தது. இதனை நெறிப்படுத்தியவர் உலகிலேயே தலைசிறந்த பத்து நெறியாளர்களில் ஒருவராகக் கருதப்படும் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் ஆவார்.

## பஞ்ஜாப் (Punjab)

இந்தியாவின் வடமேற்கில் பஞ்ஜாப் என்றொரு மாநிலம் உண்டு. அதன் தலைநகர் சந்திகார் (Chandigarh). அதேபோல பாக்கிஸ்தானின் வடகிழக்கில் மற்றுமொரு பஞ்ஜாப் உண்டு. அங்குள்ள மக்கள் முஸ்லிம்கள். அவர்கள் பேசும் மொழிகள் பஞ்ஜாபியும் உருதும் ஆகும். பஞ்சாபி மொழி இந்தோ - ஈரானிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இந்திய உப கண்டத்திலுள்ள பஞ்ஜாப் மாநிலம் இந்துவெளி நாகரிகத்தின் இருப்பிடமென்பர். இங்குள்ள பெரும்பாலான மக்கள் சீக்கியராவர். இவர்களுள் சிலர் இந்துக்களுமாவர்.

பஞ்ஜாபியர்களுள் பல பெண்களும், ஆண்களும் அழகானவர்கள். அவர்களுடைய Kebal சுவையான உணவு. முல்க்ராஜ் அனந்த், குஷ்வான் சிங் போன்ற பிரபல எழுத்தாளர்கள் பஞ்சாபியர்கள் என அறிகிறோம்.

தமீம் ஹாஜியார் சில தினங்களாகத் தனித்து இருப்பதையே விரும்பினார். ஒன்றன் பின் ஒன்றாய் நடந்து கொண்டிருந்த சில சம்பவங்கள், அவரை அவ்வாறு தனித்து இருக்க வைத்ததுடன், நன்றாகச் சிந்திக்கவும் வைத்துவிட்டன. தனது அயராத முயற்சி, தான் சம்பாதித்த சொத்துச் சுகங்கள், தனக்கு சமூகத்தில் இருந்த நன்மதிப்பு என்பவை, நடந்து கொண்டிருந்த அந்தச் சம்பவங்களால் தமீம் ஹாஜியாருக்கு ஒரு காற்தூசாக் கூட இருக்கவில்லை.

"என்னத்தென் மகன்ட வாப்பா, எந்த நேரம் பார்த்தாலும் நீங்க ஒரு மூலயில உக்காந்து யோசிச்சுக் கொண்டே ஈக்கிற? அசருக்கு பாங்கு செல்லியும் அர மணி நேரமாகுது. நேர காலத்துக்கு பள்ளி வாசலுக்குப் பெய்த்துத் தொழுதிட்டு வராம, இப்பிடி பாத்த பொறத்த பாத்துக்கொண்டே ஈந்தா எப்பிடியென்? இந் தாங்கோ, நீங்க ஆசயோடு தின்னுற அலியதரமும் கோலிக்கூட்டு வாழப்பழமும். அதுகளால ரெண்ட எடுத்துத் தின்னுங்கோ. நான் ஓடிப் பெய்த்து கோப்பி ஒரு கோப்ப ஊத்தி எடுத்துக் கொண்டு ஓடி வாரேன்."

தமீம் ஹாஜியாரின் மனைவி தூபா உம்மா, கையில் வைத்திருந்த பலகாரத் தட்டை, அவருக்கு முன்னால் இருந்த மேசையில் வைத்துவிட்டு, மாடியில் இருந்து இறங்கி வந்து மீண்டும் சமையலறைக்குள் நுழைந்தாள்.

# தன்வினை

- உ. நிஷார்

தான் விரும்பி உண்ணும் அலிய தரமும் கோலிக்கூட்டு வாழைப்பழமும் தட்டு நிறைய இருப்பதைக் கண்ணுற்ற தமீம் ஹாஜியாருக்கு ஒரு புத்தூக்கம் ஏற்பட்டது. உடனே அவர் கோலிக் கூட்டு வாழைப்பழம் ஒன்றை எடுத்து, அதன் தோலை உரித்து, ஒரு கையில் வைத்துக்கொண்டு, மறுகையால் அலியதரம் ஒன்றை எடுத்துச் சுவைத்த வண்ணம் யன்னலுக்கு ஊடே தன் பார்வையை வெளியே அலைய விட்டார். அங்கே அவரது தொழிற்சாலையில் பகல் நேர வேலையை முடித்துக் கொண்ட தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருக்க, இன்னுமொரு சாரார் இரவு நேர வேலைக்காக தொழிற்சாலைக்குள் நுழைந்த வண்ணம் இருந்தனர். அவர் முன்பெல்லாம் இந்தக் காட்சியைக் கண்ணாரக் கண்டு ரசித்தது மட்டு மல்லாமல் தனக்குள்ளே தன்னை வியந்துகொண்டும் இருந்தார்.

"இந்த ஊரில ஏன்ட தரத்துக்கு, ஏன்ட அந்தஸ்த்துக்கு எவன்தான் ஈக்குரான். இத்தன பேருக்கு எவன்தான் வேல வசதிகள் செஞ்சி குடுத்தான். இதெல்லாம் ஏன்ட உம்மாட்ட நான் மூனு வருஷமா தாய்ப்பால் குடிச்சதுட மகிமதான்..."

அந்த யன்னல் ஊடே வெளியே பார்த்த வண்ணம் தன்னைப் பற்றியும், தனது தாயாரைப் பற்றியும் பெருமிதம் கொண்ட அவரிடம், சில நாட்களாக அந்தக் காட்சிகளைக் காண குற்ற மிழைத்த ஒருவரின் அகமுக பாவனை களே தென்பட்டன. அப்பொழுது, தூபா உம்மா மீண்டும் அவர் முன்னே பிரசன்னமானாள். அவளுடைய கையில் நிரம்பி வழிந்த வண்ணம் ஒரு கோப்பிக் கோப்பை இருந்தது. அவள் அதைப் பலகாரத் தட்டுக்குப் பக்கத்தில் வைத்து விட்டு, தமீம் ஹாஜியாரின் பாதங்களுக் குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

"இந்தாங்கோ, இன்னுமொரு கோலிக்கூட்டு வாழப்பழம்." அவள் கோலிக்கூட்டு வாழைப்பழம் ஒன்றைப் பறித்து அதன் தோலை அரைவாசி உரித்து, அலியதரம் ஒன்றுடன் அவரின் கைகளில் வைத்து பலவந்தமாகத் திணித்து விட்டாள்.

"தூபா, அலியதரம் நல்ல டேஸ்ட்டா ஈக்கு. இது ஆர் செய்த அலியதரமென்?"

"ஒகளுக்கு தீவணங்கள் செஞ்சு தாரத்துக்கு இந்த ஊரில என்ன உட்டா வேற ஆரென் ஈக்கிற?"

"மாஷா அல்லா, தீவணம் செய் யிறத்தில மட்டுமல்ல நீ செய்யிற எல்லா வேலவெட்டிகளிலயும் கைவண்ணம் ஒன்டு ஈக்கு. முப்பது வருஷத்துக்கு முந்தி, ஒன்ன நான் கலியாணம் முடிச்சிக் கொண்டதே, நீ பீடி சுத்தி அனுப்புற கைவண்ணத்துக்குத்தான்."

"சும்மா, போங்கோ போறதுக்கு. அந்தக் காலத்துக் கதயெல்லாத்தயும் இப்ப என்னத்துக்குத்தான் கதச்சிறோ எனக்குத் தெரியா? சின்ன மகனும் அங்கல காமரேல புத்தகம் வாசிச்சிக் கொண்டு ஈக்கிறான் போல."

நாணத்தால் முகம் சிவந்த தூபா உம்மா, தமீம் ஹாஜியாரை ஓரக்கண் ணால் பார்த்துவிட்டு, எழுந்து சென்று பக்கத்து அறைக்குள்ளும் எட்டிப் பார்த்தாள்.

"நல்ல நேரம், மகன் காமரேல இல்ல. இன்னமும் எங்க, எதப் பேச வேணுமென்டு தெரியாத சின்னப் புள்ள போல நீங்க. இந்தாங்கோ, சூட்டோட இந்தக் கோப்பியக் குடிச்சிட்டு இரீங்கோ."

தூபா உம்மா, அவ்வாறு செல்ல மாகச் சிணுங்கிய வண்ணம் கோப்பிக் கோப்பையை மேசையில் இருந்து எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டு, மீண்டும் அவரின் காலடியில் உட்கார்ந்து கொண்டாள்.

"நானும் இப்ப கொஞ்ச நாளா ஒகட நடவடிக்ககளப் பாத்துக்கொண்டு தான் வாரேன். நீங்க என்னமோ லட்சத் துக்கு வாங்கி ஆயிரத்துக்கு வித்த யாவாரியொன்டா எந்த நேரமும் கவல யோட மொகத்த வச்சிக் கொண்டு ஈக் கிறத்த. அது ஏனென்டு இன்டெய்க்கு எனக்கிட்டச் செல்லத்தான் வேணும். அதச் செல்லும் வரக்கிம் இந்தப் தூபா இந்த எடத்துல ஈந்து ஒரு அடி அசய மாட்டாள்."

தான் விரும்பும் பலகாரங்களில் ஒன்றான அலியதரத்தை மணம், குணம்

இருக்கச் சுட்டெடுத்துக் கொண்டு வந்து, தனக்கு அதைத் தந்துவிட்டு, தனது மனதில் புதைந்திருக்கும் விடயங் களை அறிந்து கொள்வதற்காகத் தூபா உம்மா எடுத்த முயற்சியை, தமீம் ஹாஜி யார் மிக மிக மெச்சினார். அத்துடன், சில நாட்களாகத் தன் மனதை உறுத்திய விடயங்களை அவளிடமாவது சொல்லி வைத்தால், அது தனது மனதுக்காவது ஆறுதலாக இருக்கும் என அவர் எண்ணினார்.

"தூபா, நான் பாவத்துக்கு மேலால பாவம் செஞ்சிட்டேன். அதிலிருந்து விடுபடுறது எப்பிடியென்டுதான் நான் எந்த நேரமும் யோசிச்சுக்கொண்டு ஈக்கிறேன்."

"நீங்க பாவம் செஞ்சிட்டீங்களா? நெலத்துல நடக்கக்குள்ள புல்லொன்டா வது சாகாம நடக்கிற நீங்க பாவம் செஞ்சிட்டீங்களா? நல்ல கததான் கதக் கிறீங்க? நாங்க செய்யிற பாவம் எல்லாத்தயும் அல்லா மன்னிச்சிறான். நானும் நீங்களும் ஒரு மொற, ரெண்டு மொறயல்ல, மூனு மொற ஹஜ்ஜூ செஞ்சிட்டு வந்தவங்க. அந்தப் புனித மான கவ்பத்துல்லாவுக்கு முன்னால நிண்டு கொண்டு, கை ரெண்டையும் ஏந்தி, யா அல்லா, நான் செஞ்ச பாவ மெல்லாத்தையும் மன்னிச்சிக்கோ நாயனே எண்டு துவாக் கேட்டா, நாங்க செஞ்ச பாவமெல்லாம் மன்னிக்கப் பட்டு அன்டு பொறந்த பாலகனப் போல ஆகிவிடுகிறோம். மூனாவது ஹஜ்ஜூக்குப் பெய்த்திட்டு வந்தத்துக் குப் பொறகு, நீங்க ஏதாவது பாவம் செஞ்சிருந்தா வாங்கோ, நானும் வாரேன் மக்காவுக்குப் பெய்த்து நாலாவது ஹஜ்ஜையும் செஞ்சிட்டு வருவோம்."

"தூபா ஒரு மொற ஹஜ்ஜூ செஞ் சிட்டு வந்தாலேயே நாங்க செஞ்ச பாவம் எல்லாம் மன்னிக்கப்படுவது உண்ம. அன்டு பொறந்த பாலகனப் போல ஆவதும் உண்ம. ஈந்தாலும் ஹஜ்ஜூ செஞ்சிட்டு வந்து, நாங்க அதே பாவத்த திரும்பத் திரும்பச் செய் யிறதாக ஈந்தா, அது அல்லா ரசூலுக்குப் பொருத்தமாக ஈக்காது. அதநீ மொதல்ல வெளங்கிக் கொள்ள வேணும்."

"நானும் ஒகளுக்கு வாழ்க்கப்பட்டு வந்து முப்பது வருஷமாகுது. நான் ஊட்டுக்குள்ளேயே அடங்கிற பொம் புள. அதனால நீங்க செய்யிற பாவ புண்ணியமெல்லாம் எனக்குத் தெரி யாது. சரி, சரி மூனாவது ஹஜ்ஜூக்குப் பெய்த்திட்டு வந்தத்துக்குப் பொறகு நீங்க செஞ்ச பாவங்களுல ஒன்டு ரெண் டச் செல்லுங்கோ. நானும் அதுகள அறிஞ்சி கொள்ள வேணும். அதுகள அறிஞ்சி கொள்றதுக்கு எனக்கு உரிம யும் ஈக்கு."

"சரி, சரி. ஒனக்கு மட்டுமல்ல, இந்த ஊருக்குக் கேக்க, இந்த உலகத் துக்குக் கேக்க, நான் செஞ்ச பாவமெல் லாத்தயும் செல்லி, அதெல்லாம் பாவ மென்டத்த ஒத்துக்கொண்டு திரும்ப ஒரு மொற அல்லாட்ட மன்னிப்புக் கேக்க வேணும். அதுக்குப் பொறகு அந்தப் பாவங்களச் செய்யாம ஈந்தாத் தான் ஏன்ட மனம் நிம்மதி அடையும். தூபா நீ கேட்டதினால நான் செஞ்ச

பாவமெல்லாத்தயும் இப்ப செல்லப் போறன். நான் பீடி சுத்தப் பழகினது, பீடி சுத்தினது, பீடிக் கொம்பனி வச்சது, பீடி சுத்தற ஆக்களுக்குத் தொழில் குடுத்தது, பீடி வித்தது, பீடி புகைத்தது, பீடி புகைக்கிற ஆக்களுக்கு ஒடந்தயா ஈந்தது, இதெல்லாம்தான் நான் செஞ்ச பாவங்கள்.''

இதைக் கேட்ட தூபா உம்மாவின் முகத்தில் எள்ளல் ஒன்று ஏற்பட்டது. அவள் ஏளனத்துடன் சிரித்து விட்டாள்.

"இதெல்லாம் எப்பிடியென் பாவங் களாகிற? நீங்க பீடி சுத்தி என்னயும் புள்ளகளயும் காப்பாத்தினீங்க. பீடிக் கொம்பனி வச்சி எத்தனையோ பேருக் குத் தொழில் குடுத்தீங்க. எத்தனையோ சமூக சேவைகள் செஞ்சீங்க. ஸதகாக் குடுத்தீங்க, ஸக்காத்துக் குடுத்தீங்க, தான தர்மம் செஞ்சீங்க, பள்ளிவாசல் களக் கட்டிக் குடுத்தீங்க.''

"தூபா, அதெல்லாம் சரி. நான் ஒத்துக்கொள்றேன். அந்த நன்மகள் எல் லாத்தயும் விட, பீடிக் கைத்தொழிலாள நடக்கிற தீமகள் அதிகமென்டு, தொடர்ச்சியா நடக்கிய செல விஷயங் கள் ஏன்ட மனச உறுத்துது. அந்த விஷ யங்களுள ஒன்டு ரெண்டப் பத்தி இப்ப நான் ஒனக்கிட்டச் செல்லப் போறேன். மத்த விஷயங்களயும் நேரகாலம் வரக் குள்ள செல்லி வக்கிறேன்.''

"சரி, சரி ஒன்டு ரெண்டு விசயங் களப் பத்திச் சரி இப்ப செல்லுங்கோ, ஒகட கவலய நானும் பங்கு வச்சிக் கொள்றேன்.''

"அன்டொரு நாள், இஷாத் தொழு கைக்குப் பொறகு, பள்ளிவாசலில் வச்சி, மத்திசம்மாருட கூட்டம் நடந் திச்சி, ஊர் மனிசர் சேர்ந்து கட்டப் போற மத்ரஸாக் கட்டடத்துக்கான பண வசூலப் பத்தியும் அதில பேசினாங்க. அது சம்பந்தமா பல பேரும் பல மாதிரி கதச்சாங்க. அதனால சரியான முடி வொன்டு எடுக்க முடியாமல் போக, அதுக்கான முழுச் செலவையும் ஏத்துக் கொள்ள நான் ரெடியானேன்.''

"அல்ஹம்துலில்லா, படிச்சிறவ னாய் இரு. இல்ல படிப்பிச்சிறவனாய் இரு. அதுவும் இல்ல படிச்சிறவனுக்கு ஒதவி செய்றவனாய் இரு என்டு கண் மணி ரசூல் நாயகம் செல்லீக்குறாங்க.''

"தூபா, எல்லாத்துலயும் நீ பாஞ்சி குடுக்குறாய். நான் செல்ல வந்தத்த நீ செல்ல உட இல்ல. மத்ரஸாட முழுச் செலவையும் நான் பொறுப்பெடுக்கிற தாகச் சென்னதும் ரவூப் மத்திசம் எழும் பிட்டாரு. பீடி வித்துக் கெடச்ச ஹரா மான பணத்த, நன்மயான விஷயமொன் டுக்குச் செலவழிக்கிறத்தத் தவிர்த்துக் கொண்டால், அது அல்லா ரசூலுக்குப் பொருத்தமாய் ஈக்கும் என்டு செல்லி, மத்திசம்மார்களுட ஆதரவையும் எடுத்து ஏன்ட் வாய மூட வச்சிட்டாரு.''

"ரவூப் மத்திசத்துக்கு எகளோட பழய கோபதாபமொன்டும் ஈக்கல்லேன். சரி, சரி அதெல்லாத்தயும் உடுங்கோ. நடக்கிறதெல்லாம் நன்மக்கி என்டு நெனச்சிக் கொள்வோம்.''

"வாப்பம்மா, அப்பா நானும் வந்திட்டேன்.'' அப்போது அவர்களின்

பேரன் இஷ்றி ஓடிவந்து, தனது பாட்டி யின் மடியில் மிக உரிமையோடு உட்கார்ந்து கொண்டான்.

''இஷ்றி தொர, இந்தாங்கோ வாழப்பழமொன்டும், அலியதரமொன் டும். அதுகளத் தின்டுட்டு இரீங்கோ ராஜா.'' அவள் வாழைப்பழமொன்றை எடுத்து, அதன் தோலை உரித்து, இஷ்ரியின் ஒரு கையில் வைத்துவிட்டு, மறுகையில் அலியதரமொன்றை எடுத்து வைத்தாள். அவன் தூபா உம்மாவின் மடியில் உட்கார்ந்த வண்ணம் அவற் றைச் சாப்பிடத் தொடங்கினான்.

''இஷ்றி தொரேட கண்டி ஸ்கூல் விஷயமென்டாச் சரி. டொனேஷனத் தான் கொஞ்சம் கூட்டிக் கேக்குறாங்க.''

''எகளுக்குத்தான் படிச்சக் கெடச்ச இல்ல. எகட புள்ளகளும் மேல்படிப்புப் படிச்ச இல்ல. அதனால பேரப்புள்ளயச் சரி படிப்பிச்சி ஒரு டொக்டராக்கிப் பாப் போமே. கோடி கோடியாக நீங்க எத் தனையோ தலமொறக்கி காசு பணம் சம் பாரிச்சு வச்சீக்குரீங்க. அடுத்து வார தல மொறகள் புத்திசாலிகளாக ஈந்தாத்தான் அதுகள பாதுகாப்பாங்க. அதனால நீங்க டொனேஷனப் பத்தி யோசிக்கவாணாம். இஷ்றி தொரய கட்டாயமா கண்டி ஸ்கூலுக்கு உடத்தான் வேணும்.''

''வாப்பம்மா, அப்பா கண்டி ஸ்கூலுக்கு என்ன உடுவார்தானே?''

''இஷ்றி தொரய நாங்க கட்டாயமாக் கண்டி ஸ்கூலுக்கு உடுவோம், இப்ப நீங்க வெளியில பெய்த்து வெளயாடிட்டு வாங்கோ தொர.'' இஷ்றி அங்கிருந்து அகன்று சென்றான்.

''தூபா, இதையும் கேட்டுக்கோ. உம்மாவும் வாப்பாவும் சேந்துதான் புள்ள யொன்ட வழக்க வேணும். அதுக்கு எகட இஷ்றி தொர. வாப்பா இங்க, உம்மா அங்க. வளந்து வார புள்ள யொன்டுக்கு அது அவளவு ஆரோக்கிய மான விஷயமொன்டல்ல. விஷயம் வந்த தனால செல்லுறேன். மருமகள் அவங் கட ஊட்டுள பெய்த்து ஈறதும் ஏன்ட மனச உறுத்துற விஷயமொன்டுதான்.''

''அந்த விஷயம் எப்பிடியென் ஒகட மனச உறுத்துற?''

''மருமகள் இந்த ஊட்டுக்கு வந்த நாளில ஈந்தே அவ இங்க ஈக்கிறத்துக்கு விரும்ப இல்ல. இந்த ஊட்டுக்குள்ளயும் ஊட்டச் சுத்தியும் பீடித்தூள் வாசன பரவியீறதுதான் அதுக்கான காரணம் என்டு நான் நெனச்சிறேன்.''

''இது நல்ல கதயல்லென்? நூத்துக் கணக்கான மனிசர் இங்க வந்து பீடி சுத்துறாங்க. பீடிக்கு லேபல் ஒட்டுறாங்க. பீடிகள எண்ணி பெக் பண்ணுறாங்க. கட வழியே கொண்டத்து வித்துக் காசாக்குறாங்க. அப்பிடி ஈக்க மரு மகளுக்கு மட்டும் எப்படியென் பீடித் தூள் வாசன புடிச்சாமப் போன.''

''தூபா, எனக்கு ஒனக்குப் போல அல்ல. இந்தக் காலத்துப் புள்ளகளுக்கு உலக அறிவு மிச்சமா ஈக்கு. பீடி, சிகரட் மனிசருட சுகாதாரத்துக்குக் கேடு செய் யும் என்டத்த அவங்க எல்லாரும் வெளங்கித்தான் வச்சீறாங்க.''

மருமகளின் கதை வந்தது அவ ளுக்கு எரிச்சலாக இருந்தது. ''அது சரி, இப்ப நீங்க பெய்த்து அஸர்

தொழுகயத் தொழுதிட்டு வாங்கோ.''

தமீம் ஹாஜியார் வுழூ எடுக்க குழாய் அருகே செல்ல, சில நாட்களாக வீட்டை விட்டு வெளியேறி ஊர் சுற்றித் திரிந்த நுஷாட் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். "உம்மா, இஷ்றி தொர எங்க?''

"மகன், இஷ்றி தொர அங்கால வெளயாடிக் கொண்டீக்குறாரு போல. அவருக்கு ரெண்டு மூனு மாசமா தொடர்ந்து ஈக்கிற இருமல் இன்னும் கொணமானபாடில்ல. நீயும் ஊட்டில ஈக் காம ஊர் சுத்தித் திரியுறாய். அதனால எதுக்கும் நல்லம் என்டு செல்லி, வாப்பா ஸ்பெஷலிஸ்ட் டொக்டர் ஒத்தருட்ட இஷ்றி தொரயக் காட்டி மருந்து எடுத் துக் கொண்டு வந்தீக்குறாரு. அது சரி, மருமகள் திரும்ப இந்த ஊட்டுக்கு வர மாட்டாவா? வாப்பாவும் அதப்பத்தி மிச்சம் கவலப்படுறார்.''

"வருவா, வருவா. வராம அவ எங்கே போக? அது சரி தங்கச்சீட கலி யாணப் பேச்சுவாத்த எந்த அளவுல ஈக்கு?''

"உம்மா, அது சரி... வாப்பா இப்ப எந்த நேரமும் ஒரு எடத்துல உக்காந்து என்னத்தப் பத்தியென் அது யோசிச்சிக் கொண்டு ஈக்கிற?''

"வாப்பாட மனசில ஈக்கிற விஷய மொன்ட வெளியில எடுக்கிறதென்டா மிச்சம் கஷ்டம். அப்பிடியீந்தாலும் நான் அவர உடுவானே? இன்டெய்க்கு மெதுவா அணுகி, அவருட மனச உறுத் துற காரணங்கள நான் அறிஞ்சி கொண்டுட்டேன்.''

"உம்மா என்டா, ஏன்ட உம்மாதான் உம்மா. வாப்பா அதுக்கு என்ன காரணத்தச் சென்னார்?''

"நான் பாவம் செஞ்சிட்டேன்... நான் பாவம் செஞ்சிட்டேன் என்டு வாப்பா எந்த நேரமும் கவலப்படுறாரு.''

"வாப்பா பாவம் செஞ்சிட்டாரா? நாங்களும் இந்த ஊட்டுளதான் ஈக்கி றோம். எகளுக்குத் தெரியாம வாப்பா என்ன பாவம் செஞ்சிட்டார்.''

"பீடிக் கொம்பனி வச்சி ஆக்களுக் குத் தொழில் குடுத்தது, அது மூலமா பணம் சம்பாதிச்சது எல்லாம் பாவம் என்டு வாப்பா நெனச்சிறாரு போல.''

"ஐயோ உம்மா, அதெப்படி பாவ மாகுற? எத்தனையோ பேருக்கு வாப்பா தொழில் குடுத்தீறாரு. அது மூலமா எத்தனையோ குடும்பங்கள் பொழச்சித் தின்னுது. பீடிப்புக மட்டுமல்ல சிகரட் புகயும் மனிசனுக்குக் கேடுதான். அத னால மனிசனுக்குப் பொல்லாத நோய் நொம்பலங்கள் வருகுதுதான். இதக் காரணமாகக் காட்டி வாப்பா பீடிக் கொம்பனிய மூடிப் போட்டா வேற ஆரு சரி அதச் செய்வாங்கதானே? புகை புடிச்சிறது எவளவோ கெடுதி என்டு எத்தனையோ சமூக நல அமைப்புகள் சத்தம் போட்டாலும், பீடி, சிகரட் புக புடிச்சிறவன் அதப் புடிச்சத்தான் செய் யிறான். அத உற்பத்தி செய்யிறவன் உற் பத்தி செய்யத்தான் செய்யிறான். இந்தக் கைத்தொழில் மூலமா எத்தின லட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாக வும் தொழில் கெடச்சி ஈக்கு. எத்தன

கோடிப் பணம் அரசாங்கத்துக்கு வரியாகக் கெடச்சிக் கொண்டு ஈக்கு.''

"கிட்டடியில் நடந்த செல விஷயங்களால அவருட மனசு நொந்துப்போன கதயொன்டும் கதச்சிறாரு. அதனால வாப்பா பீடிக் கொம்பனிய மூடிப் போடுவாறோ தெரியாது?''

"வாப்பா பீடிக் கொம்பனிய மூடிப் போடுறதாக ஈந்தா, அத பொறுப் பெடுத்துச் செய்ய நான் ரெடி என்டு செல்லுங்கோ. அது சரி உம்மா, வாப்பாட மனசு நொந்துபோன விஷயங்கள் என்ன என்டு அறிஞ்சி கொள்ள, நீங்க என்ன சரி முயற்சி எடுத்தீங்களா?''

"இந்த உம்மாவ நீ ரெண்ட துட்டுக்குக் கணக்கெடுக்காதே. வாப்பாட்ட ஈந்து செல விஷயங்கள மெதுவா கழற்றி எடுத்துட்டேன். தருணம் வரக்குள்ள அதுகள ஒனக்கிட்ட செல்லுறேன். மத்த விஷயங்களயும் அவருட்ட ஈந்து கழற்றுற மாதிரி எனக்குத் தெரியும்.''

தூபா உம்மா அவ்வாறு தனது மகனிடம் சொன்னாலும் அதற்குச் சில தினங்களுக்குப் பிறகு தமீம் ஹாஜியாரே தனது மனதை உறுத்தும் இன்னுமொரு விடயத்தையும் அவளிடம் சொல்லி வைத்தார்.

"தூபா, மகளுக்குப் பேசின கலியாணமும் தவுந்து பெய்த்திட்டுது.

"யா அல்லா! மாப்புள ஊட்டாரு எகளுட்ட என்ன கொறய கண்டாங்களோ தெரியா? எகட கூட்டம் குடும்பம் சரியில்லயா? பொண்தான் அழகு வடிவு இல்லியா? குடுக்கப் போன சீதனத்துல தான் கொற நெறயா? போடப்போன நகநட்டுத்தான் போதாதென்டா?

"தூபா, இதொன்டுமல்ல காரணம். நாங்க பீடிக் கொம்பனி வச்சிக்கிறதத் தான் மாப்புள கொறயா எடுத்தீக்குறாரு. மாப்புள டொக்டர் என்டதால, கொழும்புல பங்களா, நுவரெலியாவுல அம்பது ஏக்கர் எஸ்டேட், நூறு பவுணுக்கு நக நட்டு, ஒரு கோடி ரூபா பணம் என்டெல்லாம் நாங்க சீதனம் தாரதாகச் சென்னாலும், மாப்புள இதொன்டுக்கும் விருப்பப்பட்டு இல்ல. அதுல ஈந்து படிச்ச தலமொற, பீடி, சிகரட் புக புடிச்சிறத்துக்கு மட்டுமல்ல, அத உற்பத்தி செய்றவங்களுக்கும் விருப்பம் இல்ல என்டத்த நாங்க வெளங்கிக் கொள்ள வேணும்.

"நடக்கிறதெல்லாம் நன்மக்கித்தான் என்டு நாங்க எடுத்துக் கொள்வோம். அல்லாட நாட்டம் எதுவோ அதுதான் உலகத்துல நடக்கும். சரி, சரி மனச உறுத்துற செல விஷயங்கள கேட்டுத் தெரிஞ்சி கொண்டேன். மத்த விஷயங்கள எப்ப இனிச் செல்லப் போறீங்க.

அப்போது, தமீம் ஹாஜியார் வீட்டுச் சிற்றூழியன் காதர் அங்கே வந்தான்.

"ஹாஜியார், மன்சூர் காக்கா மவ்தா கிட்டாராம்.''

"இன்னாலில்லாஹி...''

"பாவம் மன்சூர் காக்கா.''

"சரி, இப்ப நீ பெய்த்து ட்ரை

வருக்கு கார எடுக்கச் செல்லு. இப்பவே நாங்க மய்யத்தூட்டுக்குப் போகவேணும்.'' காதர் அங்கிருந்து அகன்று சென்றான்.

தமீம் ஹாஜியார், தூபா உம்மாவுடன் ஜனாஸா வீட்டுக்குச் சென்றார். ஜனாஸாவுக்கான சகல ஏற்பாடுகளும் அவரின் தலைமையிலேயே நடைபெற்றது. ஜனாஸா நல்லடக்கத்தின் பின் வீடு திரும்பிய அவர், மீண்டும் மிகக் கவலையுடனேயே காணப்பட்டார். புற்றுநோயைப் பூரணமாகக் குணப்படுத்த மருந்துகள் இல்லையென்பதை அவர் அறிந்து வைத்திருந்தார். அத்துடன் அவர் அறிந்து தெரிந்து வைத்திருந்தவர்களுள் பாரூக், ஹனிபா, அஸ்லம் என எத்தனையோ பேர் நுரையீரல் புற்றுநோயால் இறந்து போயுள்ளனர். அந்த வரிசையில் இப்போது மன்சூர் காக்காவும் சேர்ந்து விட்டார். இவர்கள் அனைவரும் அநேகமாக பீடிக் கைத்தொழிலில் ஈடுபட்டதனாலும், பீடி புகைத்ததனாலும்தான் இக்கதிக்கு ஆளானார்கள் என்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் மன்சூர் காக்காவின் மரணத்துடன் அவரின் உள்ளம் அவரை மேலும் உறுத்த ஆரம்பித்தது.

அப்போது, தூபா உம்மா அவர் இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

''நீங்க கவலப்படுதறத்தப் பாக்கக்குள்ள எனக்கும் கவலயாத்தான் ஈக்கு.''

''தூபா, ஏன்ட மனச வாட்டின இன்னுமொரு விஷயம் மன்சூர் காக்காவுக்கு ஈந்த நோய்தான். அவரும் நானும் சின்ன வயசில ஈந்தே நல்ல கூட்டாளிகள். நான் பீடிக்கொம்பனி போட்டு கொடி கட்டிப் பறக்கக் காரணமாயீந்த ஆக்களுள் அவரும் ஒத்தர்தான். பீடிக் கொம்பனில மொதலாவது வேலக்கி வந்த சேர்ந்த ஆளும் அவர்தான். பீடியோட சம்பந்தப்பட்ட எத்தனையோ பேருக்கு வந்த நுரையீரல் புற்றுநோய் அவரயும் உட இல்ல போல.''

''ஹயாத்தும் மவ்தும் அல்லாட நாட்டம் என்டு செல்லி நாங்க மனசச் சமாதானப்படுத்திக் கொள்வோம்.''

''தூபா மனச்சாட்சிக்கு விரோதமா நாங்க பிழயொன்டச் செஞ்சி போட்டு, அதனால வார விளைவு அல்லாட நாட்டம் என்டு எடுத்துக் கொள்ள நான் விரும்ப இல்ல. அதனால நான் ரெண்டு தீர்மானங்களுக்கு வந்தீக்குறேன்.''

''நீங்க எடுக்கிற தீர்மானமெல்லாம் சரியாத்தான் ஈக்கும். இப்ப செல்லுங்கோ, அதுகள நானும் அறிஞ்சு கொள்ளோனும்.''

''நுரையீரல் புற்றுநோயால பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒதவி செய்யிறத்துக்கும், அந்த நோயால மவ்தாப் போன வங்கட குடும்பங்களுக்கு ஒதவி செய்யிறத்துக்கும் நான் நிதியொன்டு ஆரம்பிக்கப் போறேன். அதுதான் நான் எடுத்த மொதலாவது தீர்மானம். பீடிக் கைத்தொழில உட்டுப்போட்ட அதுக்குப் பதிலாக ஹலாலான கைத்தொழிலொன்ட ஆரம்பிக்கிறது நான் எடுத்த ரெண்டாவது தீர்மானம்.''

"மொதலாவது தீர்மானம் நல்லொரு தீர்மானமெண்டு எனக்கும் படுது. ரெண்டாவது தீர்மானத்தப் பத்தி, நான் அறியாமத் தெரியாம இந்த விஷயத்தக் கேக்குறேன். நான் பிழ என்டா என்ன மன்னிச்சுக்கோங்கோ."

"தூபா, இதுல என்னெத்தென் மன்னிச்சிறத்துக்கு ஈக்கு. நீ செல்ல வந்த விஷயத்த இப்ப இனிச் செல்லு."

"மனிசருக்குத் தீம செய்யிற ஹராமான பீடிக் கைத்தொழிலாள சம்பாரிச்ச கோடிக்கணக்கான பணத்தத்தான், நீங்க செல்ற ஹலாலான கைத்தொழிலுள மொதலீடு செய்யப் போறீங்க. அதனால கெடச்சிற வருமானம் எகளுக்கு ஹலாலா ஈக்குமா மகன்ட வாப்பா?"

தமீம் ஹாஜியாரின் உள்ளம் மீண்டும் அவரை உறுத்த ஆரம்பித்தது.

## மல்லிகை ஆண்டுச் சந்தாதாரராகச் சேருபவர்கள் கவனத்திற்கு....



**ஆண்டுச் சந்தா 600/-**
**தனிப்பிரதி 40/-**
**ஆண்டு மலர் 200/-**

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

வங்கித் தொடர்புகளுக்கு:

Dominic Jeeva 07201000 4231,- Hatton National Bank. Sea Street, Colombo - 11.

காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும். காசோலை அனுப்பு வோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, Dominic Jeeva என எழுதுவோர் இந்தப் பெயருக்கு முன்னாலோ பின்னாலோ வேறெதுவும் கண்டிப்பாக எழுதக் கூடாது. காசுக்கட்டளை அனுப்புபவர்கள் **Dominic Jeeva. Kotahena, P.O.** எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனித்தனி இதழ்களைப் பெற விரும்புவோர் 5 பத்து ரூபா தபாற் தலைகளை யனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

- செல்வத்தம்பி மாணிக்கவாசகர்

**கொ**ழும்புத் தமிழ்ச் சங்கம் 1942ஆம் ஆண்டு அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களின் நல் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் 1992ஆம் ஆண்டு பொன் விழாக் கொண்டாடியது. மேலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர்களாக விளங்கியவர்கள் பெரும் சாதனையாளர்கள். இவர்கள் தமிழ்ச் சமூகத்தால் தன்னிக ரில்லாத ஒளிச்சுடர்கள். இத்தமிழ்ச் சான்றோர்களினாலும், பெருமதிப்புக்குரிய தமிழ் அறிஞர்களினாலும் இச்சங்கத்தின் தகமை ஓங்கி ஒளிர்ந்தது. இவர்கள் அனைவரும் சங்கத்தின் சேவையைப் போற்றியும், விஸ்தரித்தும் உள்ளார்கள். மேலும் இந்நாட்டின் சரித்திரத்தில் மங்காப் புகழ் பெற்று விளங்கிய சேர். கந்தையா வைத்தியநாதன், வைத்தியக் கலாநிதி. பேராசிரியர் அ.சின்னத்தம்பி, பேராசிரியர் ஏ.டபிள்யூ.மயில்வாகனம், கல்விப் பேராளர் அருள்நந்தி, சட்டமேதை டாக்டர். எச்.டபிள்யூ.தம்பையா, சிவில் சேவையாளர்களான கே.ஆழ்வாப்பிள்ளை, கு.பாலசிங்கம், பொன்னம்பல முதலியார், திரு. மாணிக்க இடைக்காடர், தமிழ்ப் பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, வி.செல்வ நாயகம், சு.வித்தியானந்தன் போன்றவர்கள் சிறப்பான பணிகள் பல புரிந்து, தமிழ் வளர்த்துச் சங்கத்திற்கு அழியாப் புகழை ஏற்படுத்தியுள்ளனர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா 1992ஆம் ஆண்டு இலக்கியச் செம்மல் செல்லத்துரை குணரத்தினம் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இவர் ஒரு தலைசிறந்த நிர்வாகியாகவும், கவிஞராகவும் விளங்கியவர். இத்துடன் முன்னாள் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சின் செயலாளராக விளங்கி, மகத்தான சேவையாற்றியவர்.

மேலும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் மே சனி, ஞாயிறு 28, 29ம் திகதிகளில் அதன் 70ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஓர் எழுச்சி ஊர்வலத்தையும், அலங்கார வாயில் திறப்பு விழாவையும், நிறுவுனர் தினத்தையும், சங்கச் சான்றோர் விருது வழங்கலையும் இச்சங்கத்தின் தலைவர் திரு. மு.கதிர்காமநாதன் தலைமையில் நடாத்தியது. பேராசிரியர் சபா.ஜெயராசா அகவை எழுவதில் கொழும்புத் தமிழ்ச்சங்கம் என்ற தலைப்பில் தொடக்க

வுரையை வழங்கினார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் அன்றைய தினம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் திருமதி. பத்மா சோமகாந்தன் வரவேற்புரையை வழங்கினார். பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். இவ்விரண்டு நாள் நிகழ்ச்சி களிலும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும் முடியுடை மூவேந்தர் ஆட்சி யிலும், குறுநில மன்னர்களின் ஆளுமை யிலும், கடையேழு வள்ளல்களின் கருணை யிலும், அகத்தும் புறத்தும் மாறுபாடில்லாத பாவலரின் பண்பிலும் தமிழகம் சிறப்புற்றி ருந்த காலம் சங்ககாலம். பண்டையத் தமி ழகச் சங்கம் தமிழ்மொழி வளம் பெற உதவி யமையால் தமிழ்ச்சங்கம் எனவும், சங்கத் தினர் தமிழ்மொழி வளம் பெற்றதினாற் சங் கத் தமிழ் எனவும், தமிழ்ச்சங்கம் சிறப்புற விளங்கிய அக்காலம் சங்க காலம் எனவும் பெயர் பெற்றது. பண்டை காலத்தில் தமிழ கத்தில் தமிழ்ச்சங்கம் இருந்ததை தமிழ் நூல்களும், வடமொழி இதிகாச, புராண நூல்களும், பேரறிஞர்களின் தமிழாய்வு நூல்களும் வலியுறுத்துகின்றன.

பண்டைக் காலத்தில் தமிழ்ச் சங்கங் கள் மூன்று இருந்தன. அவைகளுள் முதற் சங்கமும் இடைச் சங்கமும் முறையே கடல் கொண்ட தென் மதுரையிலும், கபாடபுரத் திலும், கடைச் சங்கம் இன்றைய மதுரை யிலும் இருந்தன. அகத்தியர், தொல்காப் பியர், நக்கீரர் போன்ற பெரும் புலவர்கள் இச் சங்கங்களின் உறுப்பினர்களாக விளங் கினர்.

இத்துடன் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஈழத்தின் வடபாற் சுதந்திர தமிழரசை நிறுவி யாழ்ப்பாண அரசர்கள் சமயப் பற்றும் தமிழ்ப் பற்றும் உள்ளவர்களாக விளங்கி னார்கள். ஆதலின் அவர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்றை நல்லூரில் நிறுவி தமிழ் வளர்த்தனர்.

மேலும் இலங்கை தமிழ் அறிஞர்கள் இலங்கை அரசின் ஆதரவோடு 1921ஆம் ஆண்டு ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை நிறுவி தமிழ் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் ஊக்கமளித்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் கரந்தை, கோயமுத்தூர் ஆகிய நகரங்களில் தமிழ் அறிஞர்கள் தமிழ் சங்கங்கள் அமைத்துத் தமிழ்ப் பணியாற் றினர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பல கல்விமான்களும், அறிஞர்களும், தலைவர் களாக விளங்கி மகத்தான சேவையாற்றி யுள்ளனர் என்பதை நாம் மறக்க முடியாது. உண்மையிலேயே இச்சங்கத்தின் வளர்ச்சி யில் மிகவும் ஈடுபாடு கொண்டு விளங்கிய வர்கள் இலக்கியச் செம்மல் செல்லத்துரை குணரத்தினம். மற்றும் இச்சங்கத்தின் பொதுச் செயலாளராக விளங்கிய காலஞ் சென்ற தமிழ்வேள் க.இ.க.கந்தசுவாமி என் றால் மிகையாகாது. இவர்கள் அனைவரும் தமிழ் உடல், பொருள், ஆவி அனைத்தை யும் ஈந்து இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும் பெரும் தொண்டாற்றியுள்ளார்கள்.

தற்போதைய கொழும்புத் தமிழ்ச் சங் கத்தின் தலைவராக விளங்குகின்ற கலா நிதி மு.கதிர்காமநாதன் அவர்கள் இச்சங்கத் தின் உபதலைவராக ஆறு ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்துள்ளார். இவர் உலகச் சைவப் பேரவையின் இலங்கைக் கிளை யின் செயலாளராகவும், அகில இலங்கை

இந்து மாமன்றத்தின் உபதலைவராகவும், யாழ் ஸ்கந்தவரோதய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைத் தலைவராகவும் விளங்கி அரும்பணியாற்றி யவர். மேலும் இவரின் ஆர்வத்தையும், அறி வையும், ஆளுமையையும், அர்ப்பணிப்பை யும் அமைதியான பண்பையும் மனதிற் கொண்டு இவரை இச்சங்கத்தின் தலைவ ராக இரண்டு தடவை (2010-2012) ஏகமன தான தலைவராக தெரிந்துகொள்ளப்பட்டார்.

கலாநிதி கதிர்காமநாதனின் தலைமை யில் பற்பல திருத்த வேலைகளும், விழாக் களும் நடைபெற்றுள்ளன. இவரின் கால கட்டத்தில் ஐந்து அறைகளைக் கொண்ட விருந்தினர் தங்கும் விடுதி அமைக்கப் பட்டது. சங்கரப்பிள்ளை மண்டபம் விரி வாக்கப்பட்டது. முன்பக்க வாசல் அலங் காரக் கட்டிடம் திராவிட கலாசார முறையில் அமைக்கப்பட்டது. 57ஆவது வீதியை கொழும்புத் தமிழ்ச்சங்க வீதி என மாற்று வதற்குச் சகல நடவடிக்கைகளையும் மேற் கொண்டு இவர் வெற்றி கண்டார். சங்கத் தமிழ் என்னும் சஞ்சிகை (காலாண்டு இதழ்) தொடர்ந்து வெளிவருவதாகச் சகல முயற்சி களையும் கையாண்டதோடு, அதன் ஆசிரிய ராகவும் விளங்குகிறார். நாவலர், திருவள்ளு வர் விழாக்களைக் கொண்டாடுவதற்கு அரும் பெரும் சேவையாற்றினார். உண்மை யிலே இவரின் மகத்தான பணிகள் பொன் னெழுத்துக்களால் பதியப்பட வேண்டியவை.

ஆகையினால் கொழும்புத் தமிழ்ச் சங்கமானது மேன் மேலும் உயர்ச்சியுற்று, சீரும் சிறப்பும் பெற்று, தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியங்களையும், தமிழர் தம் பண் பாட்டையும் வளர்க்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.


# Happy Photo

**Excellent Photographers**
**Modern Computerized Photography For Wedding Portraits & Child Sittings**

***Photo Copies of Identity Cards (NIC), Passport & Driving Licences Within 15 Minutes***

**300, Modera Street,**
**Colombo - 15.**
**Tel : 2526345**

# கடலோர மட்டிகள்

- தாமரைச் செல்வி

உப்புநீர்த் துவாலைகளை
விசிறியடித்து - என்
உடலெங்கும் ஈரமாக்கிவிட்டு
ஒரு குழந்தையைப் போல
ஓடியொளியும் கடற்காற்று.

படம் கீறிவிட்டு நிறம்
போடத் தெரியாமல் ஆசிரியருக்குப்
பயத்தில் ஓடி ஒளியும்
பிள்ளையாய்ப் பொந்தினில்
பதுங்கும் நண்டுகள்.
அடம்பன் பூக்களுக்குக்
குடைபிடிக்கும் வண்ணத்துப்பூச்சிகள்.
போரில் விதவையான அக்கா
பூவல் நீரில் குளித்துக் கொண்டிருக்கிறாள்.
தூரத்தில் ஒரு சிறிய கழிப்பறை
பாரமில்லாது ஒரு தகரத்தை
இருகைகளாலும் பிடித்துக் கொண்டு
காலைக் கடனைக் கழித்துவரப்
போதும் போதும் என்றாகிவிடும்.
மகன் கடலுக்குப் போய்வந்ததும்
முதல் வேலையாய் இன்றைக்காவது
கக்கூசுக்குக் கதவு போடச் சொல்லோணும்!
வெள்ளைமணல் மெத்தையில்

கையணையில் தலைவைத்துப்
படுத்தபடி
முனகும் பாட்டி.
அகத்திச் சோலையில்
ஆலோலம் பாடும் குயில்கள்.
பொட்டுப் பொட்டாயிலையுடன் -
சோளம் பொரிபோலப்
பூவுடன் குலுங்கும்
முருங்கையில் ஓடும் அணில்கள்.
இருகைகளையும் தட்டித் தட்டி
அவைகளை விரட்டும்
ஐயிரண்டு வயதையுடைய
அக்காவின் மகன்.
கறந்த பால்நிறத்தில்
பறக்கும் கொக்குகளைப்
பார்த்து உரப்பையுடன்
சிறிய மட்டிக்கடலுக்குப்
புறப்படுவாள் அம்மா - இந்தக்
கருங்கடல்தான்
நீலக்கடல் கைவிட்ட
சந்தர்ப்பங்களிலெல்லாம்
பெரும்பாலும் - எம்
வயிற்றைக் காப்பாற்றும் -
ஆனாலும்
கொக்கு ஒருபுறம்
கொத்திக் கொத்தி
மட்டியைச் சாப்பிட்டு விடும் -
கடலில்
ஜப்பான் நாட்டுக்காரர் போலத்
துள்ளித்துள்ளி நடந்து
குப்புறக்கிடந்து மட்டி
பொறுக்கும்போது அம்மாவின்
சேலை பர்சூட்டாய் விரியும்.
கொக்கின் வயிற்றிலடிக்கப்
பிடிக்காமல்
கொக்கை விரட்டாது
சிலசமயம் ஏமாந்து
மட்டிக் கடலோரத்திலிருக்கும்
குட்டிக் குட்டி இலையுடன்
செந்நிறத்தில் சிறியவகைப்
பசளிக்கீரை போன்று
உப்பும் புளிப்புமாய்
சுவை காட்டும்
பச்சையாகவும் சமைத்தும்
உண்ணக்கூடிய
புளியாணிக் கீரையுடன் வருவாள்.
பெருக்கஞ்சீனியில் கவிழ்த்து
வைத்த - வெற்றுத்
தேனீர்க் கோப்பையாய்க்
கடற்கரை மணலில்
குந்தியிருக்கும் குடிலுக்குள்
அம்மாவின் மெட்டி
ஒலிக்காத குறையை
அவித்துப் பிளந்து
சதையெடுத்துப் போடும்
காலியான மட்டிச் சிப்பி தீர்க்கும்.
- அத்தோடு
சில்லறைக் காசுகளை
எண்ணவரும் ஒலி போல -
இவை
கலீர் கலீர்ரென ஒலித்துக்
காசில்லாக் குறைகளையும்
தீர்க்கும்.
மருந்துக்குக்கூட மிச்சமின்றி
இந்திய இயந்திரப்படகுகள்
இன்றும் முழுமீனையும்

வடித்துக் கொண்டு போய்விட்டது.
விடியிதில்லே நமக்கு
எங்கு சென்று முறையிட்டாலும் -
எனப்
புலம்பியபடியே தோளில் -
வெறும்
வலையுடன் வீடு திரும்புகிறார்
இன்றும்
வழக்கம் போல அப்பா
வேதனை கலந்த
விரக்தியுடன் - தினமும்
வயிற்றை நிரப்பி
மலைமலையாய் குவிந்து கிடக்கும்
காலிச்சிப்பிகளில்
பொம்மைகள் செய்து
கடற்கரையில் விளையாடும்
கண்ணனின் விம்பங்களுக்கு
விற்கும் பணத்தில்
அரிசி, வெங்காயம்,
மிளகாயோடு
தேங்காயெண்ணையும்
மண்ணெண்ணையும்
தீப்பெட்டி ஒன்றும் -
பாதி கடனில்
வாங்கி வருகிறேன் நானும்.
இரவைக் கிழித்து ஒளிரும்
மண்ணெண்ணைக்
குப்பி விளக்கில்
மலர்ந்த முகத்துடன் அம்மா -
கையில் சோறென்னும்
முத்துப் பரப்பிய
தட்டுப் பல்லாக்கில்
பொரித்த மட்டிக்கறி அரசரும்
புளியாணிக்கீரைக் கடையல்
அமைச்சரும்
கூடவே ருசிப்பாய்களாய்
மட்டி அவித்த தண்ணீரில்
மஞ்சள்தூள், உப்பு,
காரம், புளியிட்டு
மட்டி இரசம் என்ற சட்டியையும்
குடிப்பதற்கு நீர் நிரப்பிய
நெளிந்த குவளையையும்
பார்க்கும்போது,
நாளையாவது கடற்கரையில்
ஏலேலோ ஐலசா எனும்
மீனவராகம் கேட்காதோ எனக்
காதுகள் ஏங்கும். - கடல்
மண்ணில்
காலி மட்டிகளாய் வெறும்
அலையோசையுடன் மட்டும்
மீனவக் குடில்கள் தூங்கும்.

பிரபல கல்விமானும்
தேவரையாளி இந்துக் கல்லூரி
முன்னாள் அதிபருமான
**திரு. எம்.எஸ்.சீனித்தம்பி**



அவர்கள்
அமரராகி 18
**ஆண்டுகளாகி
விட்டன.**
அன்னாரை
அவரது
குடும்பத்தினரும்
அபிமானிகளும்
நினைவு
கூருகின்றனர்.

"பெயின்ட் அடிச்ச செவரெல்லாம் நாசமாகுது" என்று அவர்கள் சாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ரபாய்டீனின் மனைவி ஹாரிசா, மகள் ரிசானா, மருமகன் சீடின்.... கத்தல்கள் ஓய்வதாகத் தெரியவில்லை.

"கை முறிஞ்சி போகோனும்...." ரிசானாவின் சாபம்.

"கைக்கி சூடு போட ஓணும்...." ஹாரிசா

"செவத்துல கீத்துரத நா கண்டா கைய வெட்டிப் போடுவன்...." சீடினின் சீற்றமும் குமுறலும்.

ரபாய்டீன் மட்டும் ஓரமாக ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த விஷயத்தில் அவர் மௌனிதான் எப்பவுமே!

ஹாரிசாவின் கோபம் அடங்குவதாக இல்லை.

# ஊக்குவிப்புகள்

- ப.ஆப்டீன்

"வெள்ளென காட்டிம் எழும்பின சீருக்கு சோக்கட்டிலதான் முழிக்கிறது. செவர்ல இனி எடமில்ல கீற...."

பேரன் சப்வான் சிலையாக நின்று கொண்டிருந்தான். சுவரெல்லாம் கீறல்களும் சித்திரங்களும் அவனைப் பார்த்து நகைக்கின்றன.

சப்வானின் கைகளில் எல்லாம் மஞ்சள், சிவப்பு, நீலம் என்று வர்ணங்கள் அப்பிக் கிடக்கின்றன. உடைகளிலும் தான்! அலங்கோலமாக நின்றான்.

வரைந்து, அழித்து மீண்டும் வரைந்து மீண்டும் மீண்டும்.... சுவர் பொது மலசலகூடச் சுவராக இருந்தது.

"இதுக்கா எந்த வருஷமும் செவத்தில பெயின்ட் அடிக்கிறது.....?" கத்திக் கத்தி ரிசானாவின் தொண்டை கட்டிவிட்டது.

திடீரென்று மனைவி ஹாரிசாவின் கடுகடுப்பான குரலின் ஓங்காரக் கனல் கக்கும் வார்த்தைகள், ரபாய்டீனின் பக்கத்துக்குத் திரும்புகிறது.

அவர் எதிர்பார்த்ததுதான்! வழக்கமாக அவரது மனைவியின் எந்தவொரு கைகூடாத விடயமும் அவரை நோக்கித்தான் பாயும்.

ஹாரிசா சரமாரியாக வார்த்தை களைக் கொட்டினாள்.

"நானும் ரிசானாவும் மருமவனும் எவ்வளவோ செல்லிப் பாத்தாச்சி. பெரம் பால அடிச்சும் பாத்தாச்சி, மூலமுடுக்குல இரந்த சோக்கட்டி எல்லாம் கூட்டி மூட் டக்கட்டி குழிதோண்டி பொதைச்சு மாச்சி.... சப்வான் என்டா திருத்தமாட் டான். இஸ்கூலுக்குப் பெய்த்து திரும்பி வரப்போகக்கல, பேக்ல கலர் சோக்கட்டி நெறஞ்சிருக்கும்..... எல்லார்ட கண்லயும் மண்ணத்தூவி செவத்து மூலையில புதிசா கீத்தி வச்சிருப்பான்... கள்ளத் தனமா அவன் கீத்தாம செவர்ல மொளச்சா வருது....?"

ஹாரிசா தொடர்ந்து கத்தினாள்.

"...நானும் தெரியாமத்தான் கேக் குறன்... நாங்க எவ்வளவு கத்துறம், அடிக்கிறம், செவரெல்லாம் அநியாயமா போவுது எண்டு. நீங்க மட்டும் வாய் தொறந்து ஒரு நாளாவது பேரன புத்தி செல்லி நிப்பாட்டி இருக்கா...?"

புயல் ஓய்ந்ததும் ரபாய்டீனின் நீடித்த மௌனம் இளகியது. மிகவும் நிதானமாகப் பேசினார், நகைச்சுவை யுடன். "சுவர் இருந்தால்... சித்திரம் வரை யத்தானே வேணும்?"

"ஆ! ரிசானா இங்க பார் இவர...!"

மகள் ரிசான சிரித்துக் கொண்டே வந்தாள். "டடா.... என்ன செல்றீங்க....?"

"... இல்ல ரிசானா... சொவரில்லாத ஊட்டுக்குப் போனா என்ன எண்டுதான் கேக்கிறன்....?"

"இவருக்கு எல்லாமே பரியாசம் சிரிப்புத்தான்..."

"இது பரியாசம் இல்ல ஹாரிசா... நா ஒங்களுக்கு எப்படி வெளங்கப்படுத் துறது எண்டுதான் யோசிக்கிற...."

"இப்ப என்ன செல்ல வாரீங்க...?"

"நா... ஒருநாளும் சப்வானிடத்தில இருந்து வெளிப்படுற கலைத்திறன்கள கட்டுப்படுத்தமாட்டன். வரையும் திறமை அவனோட பிறந்த ஒன்று..... அவன் சித் திரம் வரையப் பிறந்தவன். அது இறை வன் கொடுத்த பரிசு. அத பிரம்பால அடிச்சி சாகடிக்கக் கூடாது. அநியாயம்."

"அப்ப செவரெல்லாம் வீணாப் போனா காரியமில்லயா...? யாரு வெள்ளையடிச்சி தருவாங்க... நீங்களா?"

"சரி... சரி... நா பாத்துக்கிறன்..."

அதற்குப் பிறகு அவர்கள் தர்க்கம் செய்யவில்லை.

ரபாய்டீன் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்திருந்தார். சப்வான் சுவரில் கீறு வதை எப்படி நிறுத்துவது? ஒரு முடிவு எடுத்தாயிற்று.

"சப்...வா...ன்...!" ரபாய்டீன் மிக்க அன்புடன் அழைத்தார்.

அவன் அவர் முன் வந்து நின்றான்.

"சப்வான் நீ வரைஞ்சியிருக்கும் கீறல்களையும் நா நல்லா பாத்துட்டன்.... வெரிகுட்... அருமையா இருக்கு..."

இதைக் கேட்டதும் அவனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

ஆனால் ஹாரிசாவின் முன்கோபம் மீண்டும் 'புஷ்' என்று பொத்துக் கொண்டு

சுவர்களையே எரித்துவிடுவது போல் இருந்தது.

"அவன் செவத்தில கீத்தி நாச மாக்கி வச்சிருக்கான். இவர் நல்ல மெண்டு செல்லி... இதென்ன கூத்து..."

மகள் ரிசானாவுக்கு ஏதோ ஒன்று விளங்கியது. "உம்மா... கொஞ்சம் பேசாம இருங்க. வாப்பா என்னதான் செய்யப் போறதெண்டு பாப்பமே..."

'வெறும் கிறுக்கல்கள் என்று நோக்கினால் அவை கிறுக்கல்களாகத்தான் தோன்றும். கிறுக்கல்களுக்குப் பின்னாலும் ஒரு செய்தி இருக்கு என்று நோட்டமிட்டால் அவை பேசும் சித்திரங்களாக செய்தி சொல்லும்...'

ரபாய்டீன் பேரனின் கைவண்ணத்தை ஆழ்ந்து ரசிக்கும்போது சில இடங்களில் அப்படியே ஸ்தம்பித்து நின்று சிலையாகி விடுவார். அவருக்கு ஒரே நேரத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் கலந்து திக்குமுக்காடச் செய்துவிடும்.

சுவர்ச் சித்திரங்களைச் சுற்றிப் பார்த்து, விறாந்தை வழியாக வந்து முன்கூடத்தின் சோபாக்களில் அமர்ந்தார்கள் பாட்டனும் பேரனும்.

ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"இனி நீங்க யாரும் கவலைப்படத் தேவை இல்லை... எனக்கு இரண்டுநாள் டைம் கொடுங்க. இனி சப்வான் சுவரில் கீறமாட்டான். நீங்கள் தாராளமாக கலர் வாஷ் பண்ணி சுத்தமாக வைத்திருங்கள்..."

ரபாய்டீன் உறுதியாகவும், சற்று அழுத்தமாகவும் வாக்களித்தார்.

காலை பத்து முப்பது. ரிசானா சப்வானுக்கு ஓரேஞ் ஜூசும், ரபாய்டீனுக்கு தேநீரும் பரிமாறினாள்.

அதைத் தொடர்ந்து ரபாய்டீன் இரண்டு நாட்களாகச் சப்வானை அவனுக்குத் தெரியாமல் கூர்மையாக அவதானித்தார். கூடுதலாக மேலும் ஒருநாள் அவதானம் நீடித்தது.

சுவர்களில் எந்தவிதமான புதிய கீறல்களும் பதிந்திருக்கவில்லை.

நான்காம் நாள் காலை எல்லாரும் முன்கூடத்தில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரபாய்டீன் பேரனைக் கூப்பிட்டு, ஒரு பெட்டி நிறையப் பெரிய அளவிலான சித்திரம் வரையும் கொப்பிகளையும், டியூப் கலர், பிரஷ் வகைகளையும் கையளித்தார்.

"சப்வான் இனிமேல் தாள்களில்தான் உன் திறமைகளைக் காட்டவேணும்... சரியா?"

"ரபாய் அப்பா, இதில நான் என்ன வரையவேணும்?" சப்வான் கேட்டான்.

"இவ்வளவு நாள் வீட்டுச் சுவர்களில் வரைந்தாய். இனித் தாள்களில் உன் திறமைகளைக் காட்டு, விருப்பமானதைக் கீறு."

சொட்டுச் சொட்டாகத் தண்ணீர் கலந்து நிறக்கலவை தயாரிக்கும் முறைகளை விளக்கினார் ரபாய்டீன்.

"தேவையில்லாமல் சித்திரத் தாள்

களையோ நிறங்களையோ வீணாக்கக் கூடாது" என்று ஒரு கட்டுப்பாட்டை விதிக்காமல், வேறுவிதமாகக் கேட்டார்.

"சப்வான் கிழமைக்கு எத்தனை நாளைக்கு சித்திரம் வரையலாம்?" ஒரு வினாவைத் தொடுத்தார்.

அவன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தான்.

"லீவு நாள் சனிக்கிழமை. சனிக் கிழமைநாளில் அரைநாள் மட்டும் போதும்தானே....!" அவன் கூறியபோது, ரபாய்டீனுக்கு அது மிகவும் பிடித் திருந்தது. அவரும் அப்படிததான் எதிர் பார்த்தார்.

சில நாட்களுக்குப் பிறகு சப் வானை அழைத்துத் தண்டு, காம்பு இலைகளுடன் ஒரு செவ்வரத்தைப்பூ கொண்டுவரச் சொல்லியிருந்தார்.

வாடிப் போகாமல் கொண்டு வந் திருந்த தண்டை ஒரு போத்தலில் திணித்துத் தண்ணீரை நிறைத்தார்.

ரபாய்டீன் தனது அலுவலக அறை யில் ஒரு மேசையை ஒழுங்கு செய்து போத்தலை நடுவில் வைத்து யன் னலைத் திறந்துவிட்டார். யன்னலின் ஊடாக வெளிச்சம் பூந்தண்டில் விழும் போது ஒளி நிழல் மிகத் தெளிவாகத் தெரிந்தது.

வர்ணம் தீட்டும்போது ஒளிபடும் இடங்களுக்கு மெல்லிய மஞ்சள் நிறமும், நிழலில் மறைந்து கிடக்கும் பகுதிகளுக்குக் கருமை கலந்து வர்ணம் பூசும் முறைகளையும் விளக்கமாக எடுத் துச் சொன்னார் ரபாய்டீன்.

ஏலவே வர்ணக் கலவை பற்றி விளக்கி சித்திரங்களுக்கு வர்ணம் பூசும் போது கவனிக்க வேண்டிய விதிமுறை களையும், சித்திரம் நீர்த்தன்மையுடைய தாகவும், யதார்த்தபூர்வமாகவும் மிளிர வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி யிருந்தார்.

மாதிரிக்கு ஒரு வெள்ளைத்தாளில் அந்தச் செவ்வரத்தைப் பூந்தண்டை இலேசாகப் பென்சிலால் உருவகித்து பின்னர் டியூப்களில் இருந்து தேவை யான நிறங்களை எடுத்து மிக அற்புத மாக வர்ணம் பூசிக் காட்டினது மாத்திரம் தான்! அரை மணிநேரத்திற்குள் அந்தத் தண்டை அப்படியே படம் பிடித்து வெட்டி ஒட்டினாற் போல அமைந்தது சப்வானின் படம். ஒளிநிழல் மிக யதார்த்தம்!

சப்வானின் அவதானத்தை மிகவும் மெச்சினார் ரபாய்டீன்.

இப்படியாகப் பல சந்தர்ப்பங்களில் குரோட்டன் தண்டு, கெனாஸ் பூ, மேசை மீது அடுக்கி வைக்கப்பட்ட ஒரு பொருட் கூட்டம் என்று வயதுக்கும் வகுப்புக்கும் மீறிய வரைதல் பயிற்சியைப் பேரனுக்கு வழங்கினார்.

படங்கள் என்று எடுத்துக் கொண் டால் இனிய மாலைக் காட்சி, காலைக் காட்சி, கடலோரக் காட்சி, வயலில் உழுதல், நாற்று நடுதல் அறுவடை என்று வளர்ச்சியடைந்தது.

இப்பொழுதெல்லாம் சப்வான் வீட் டின் சுவர்களை ஏறெடுத்தும் பார்ப்ப தில்லை. வீட்டின் உட்சுவர்களுக்கும்,

வெளிச்சுவர்களுக்கும் வெள்ளையடிக்கப் பட்டுச் சுத்தமாகக் காட்சி தந்தது.

மீண்டும் முன் கூடத்தில் சந்திப்பு. ராபாய்டீன் கேள்வி எழுப்பினார்.

"இப்ப என்ன எல்லாரும் ஊமையா கிட்டீங்க? சப்வான் சொவர்களில் கீறாததாலோ...?"

"ஆ...! போதும் ஒங்கட கெட்டித் தனம்..." ஹாரிசா விட்டுக்கொடுக்காமல் இளக்காரமாகப் பேசினாள். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத தோரணை.

ரபாய்டீன் கம்பீரமாகக் குரல் எழுப்பினார். "ஹாரிசா, நான் ஒண்டு சொல்ல மறந்துட்டன். என்னுடைய ஆர்ட் ரூமுக்கு மட்டும் கலர்வாஷ் அடித்து அசிங்கப்படுத்தி விடாதீங்க."

"என்ன? அசிங்கப்படுத்துறதா? அப்ப ஊட்டுக்கு கலர் அடிக்கிறது... அசிங்கப் படுத்தவா?"

"அதென்னமோ எனக்குத் தெரியாது. நீங்க ஒங்க விருப்பத்துக்கு சிலெக்ட் பண்ணும் கலர்ஸ்..... பொருத்தமில்ல.... என் பார்வைக்கு அப்படித்தான்படுது.... நா சொன்னா நீங்க கேக்கப் போறீங் களா....? என்ட ரூமை எப்படி செய் யோனும் எண்டு எனக்குத் தெரியும்.... நா பாத்துக்கிறன், ஒங்களுக்கு என்னத் துக்கு செலவு.....? ஆனா ஒன்னு..... என் ஆர்ட்ரூம், ஒங்கட கண்ணப் பறித்து வாயப் பொளக்க வைக்கும்"

"ஆ... ம்... பரவாயில்ல. மரு வனுக்கும் செலவு மிச்சந்தானே!"

அதற்குப் பிறகு அதைப் பற்றி ஒன்றும் அலட்டிக் கொள்ளாமலே ஓய்வு பெறாத காலச்சக்கரம் சப்வானை ஓர் ஓவியனாக உருவாக்கிக் கொண்டி ருந்தது.

"சப்வான் கிட்டத்தில நீ பாத்த இல் லாட்டி மனசில பதிஞ்ச, மறக்க ஏலாத ஒரு.... ஏதாவது ஒரு படத்த வரஞ்சி, கலர் பூசிக்காட்ட ஏலுமா....?" ரபாய்டீன் மிகுந்த எதிர்பார்ப்புடன் ஒரு தகுதிகாண் பரீட்சை வைத்தார்.

சப்வான் சற்று யோசித்துவிட்டுச் சொன்னான். "கிட்டத்தில நா.... டி.வியில பாத்த ஒரு சீன் என்னால மறக்க ஏலாது....."

"சரி அத வரஞ்சி காட்டு....."

"ஓகே..... அது சிம்பள்....."

யோசனையில் ஆழ்ந்தவன் அன்று மதியபோசனத்திற்குப் பிறகு ரபாய்டீனின் அலுவக அறையில் இருந்து வரையத் தொடங்கினான்.

நீல நிறத்தை வெள்ளையோடு குதப்பி அப்பிவிட்டு, ஏதோ செய்தான். தூரிகையால் நீரைச் சற்று அதிகமாகத் தொட்டுத் தொட்டு வானத்தின் குழப்ப நிலையை யதார்த்தமாகக் காட்டினான். ஆங்காங்கே சாம்பல் நிறமும் பூசப் பட்டது.

பாய்ந்து வரும் அலைகள் கோபா வேசங் கொண்டு மீண்டும் உயரத்திற்குப் பாய்ந்து கடலின் கொந்தளிப்பையும் ஆர்ப்பரிப்பையும் காட்டின.

தென்னை மரங்கள் வேருடன் பெயர்ந்து வீழ்வதும், வீட்டின் கூரைகள்

அந்தரமாய்த் தூக்கி எறியப்படுவதும், வாகனங்களும் மனிதர்களும் தலை கீழாக வீழ்வதும்.... சோகமாய்ச் சித்தரிக் கப்பட்ட காட்சி மிக அற்புதமாய், இரண் டாயிரத்து நான்கு டிசம்பர் இருப்பத் தாறைக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது.

அன்று மாலை ரபாய்டீன் அந்தப் படத்தைப் பார்த்ததும் அதிர்ந்து போய் சிலையாக நின்றுவிட்டார்.

"சப்வான்! ஆழ்கடலின் கோரத் தாண்டவம் அப்படியே கிடக்கு.... பார்த் துக்கிட்டே இருக்கலாம்.... சோகத்தைக் கிளப்புகிறது"

ரபாய்டீனின் பாராட்டு சப்வானை மென்மேலும் ஊக்குவித்தது. நாட்களின் நகர்வில் ஒரு தணியாத வேகம் எப்படி வந்தது!

சப்வான் வரையும் சித்திரங்களை எல்லாம் மிக உன்னிப்பாக விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் ரபாய்டீன், "சப்வான்... நீ எங்கேயோ போய்ட்டடா" என்று உள்ளத்தில் முகிழ்ந்த மகிழ்ச் சியை வெளிப்படுத்தினார்.

வருட முடிவில் பாடசாலையி லிருந்து ஒரு கடிதம் வந்தது.

பாடசாலைச் சித்திரப் போட்டியில் உங்கள் மகன் சப்வான் முதலாம் பரிசுக்குத் தெரிவாகியுள்ளார். பெற்றார் பரிசளிப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கு மாறு தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இது ரபாய்டீன் எதிர்பார்த்ததுதான்.

அவர் சப்வானைப் பாராட்டும் போதெல்லாம் ஹாரிசா, ரிசானா, சீடின் முதலியோரின் வாய்கள் தானாகவே தாழிட்டுக் கொள்ளும். அவர்களுக்குச் சித்திரம் ஏழாம் பொருத்தம்.

ரபாய்டீன் நின்றுவிடவில்லை தொடர்ந்தும் பயிற்சியளித்துக் கொண்டி ருந்தார்.

சப்வானின் ஓவியங்களிலிருந்து அவர் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். அவை வெறும் பொழுது போக்கு ஓவியங்கள் அல்ல. ஓவியம் என்பது சம்பவங்களைக் கலை நுட்பங் களோடு வரைந்து, வெகு யதார்த்தபூர்வ மாக வெளிப்படுத்தும் ஒரு கலை என்பதை அவன் காட்டிவிட்டான்.

வழக்கம் போல் இவ்வருடமும் நீண்ட இடைவெளிக்குப் பின் ரபாய் டீனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது!

"சேர்... இந்த வருடமும் தாங்கள் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள நவீன சித்திரப் போட்டியில் நடுவராகக் கடமையற்ற வேண்டும்..."

ரபாய்டீன் ஒரு கணம் யோசித்துக் கொண்டிருந்தார்.

"சேர்... ரபாய்டீன் சேர்..."

ரபாய்டீன் பணிவுடன் இடைமறித்து, "மன்னிக்க வேண்டும் சேர்... இந்தமுறை எனது பேரன் போட்டியில் பங்குபற்ற விருப்பதால் நான் நடுவராகக் கடமை யாற்றுவது பொருத்தமில்லை என்று அபிப்பிராயப்படுகிறேன்...!"

"ஆ...! அப்படியா... சந்தோசம்...

இருந்தாலும் நாங்கள் அரைமணி நேரத்திற்குப் பிறகு கோல் எடுப்போம்... சிரமத்திற்கு மன்னிக்கவும்..."

சப்வான் வரைந்தால் மட்டும் போதாது. ஓவியம் சார்ந்த வரலாற்றுப் பின்னணியையும் கருத்துக்களையும் ஓரளவு படித்துத் தெளிந்திருக்க வேண்டும் என்பதற்காகப் பல நூல்களைப் புரட்டி தேவையான குறிப்புக்களை எழுதிக் கொண்டிருந்தபோது மீண்டும் அழைப்புமணி...

"...ரபாய்டீன் சேர்..., உங்கள் நேர்மையான மறுதலிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நன்றி. வாழ்த்துக்கள்"

"சப்வான் ஒரே செவத்தில கீத்திக் கொண்டிருக்கான்"

"செவரெல்லாம் நாசமாகிக் கொண்டிருக்கு" போன்ற கோசங்கள் இக்கட்டத்தில் வேறுவிதமாக உருவெடுக்கத் தொடங்கியிருந்தன.

"சப்வான் ஒரு டாக்டராக வரணும்."

"சப்வான் ஒரு இஞ்சினியராக வரணும்." இப்படியான கருத்துக்கள் மேலோங்கிக் கொண்டிருந்த கட்டத்திலும், சப்வானின் சித்திரப் பாடப் பயிற்சிக்கு ரபாய்டீனின் பங்களிப்பு சலசலப்பில்லாமல் தங்குதடைகள் இல்லாமல் நடந்துகொண்டிருந்தது.

சப்வானை எப்படியும் ஒரு நுண்கலைக் கல்லூரியில் சேர்த்துவிட வேண்டும் என்பது அவரது அவா.

"என்ன நீங்க இப்படி கவனமல்லாம ஈந்தா சப்வான் டாக்டருக்குப் படிக்கிறது... எப்படி? கூப்பிட்டு தலைய தடாவி... புத்திமதி சொல்றதில்லயா?"

"ஹாரிசா அத அவன்தான் யோசிச்சி முடிவெடுக்கணும். நீங்களோ நானோ புத்திமதி சொல்றத உட்டுட்டு, அவன, கூப்பிட்டு கேளுங்க."

"சப்வான்....! சப்வான்...." ஹாரிசா உரத்துக் கூப்பிட்டாள். அவன் வந்து நின்றான்.

ரபாய்டீன் குரல் கொடுத்தார்.

"இங்கள பார் சப்வான்.... உம்மா, டடா, உம்மம்மா.... எல்லாரும் நீ பெரிய டாக்டரா வரணும்னு விரும்புறாங்க.... நீ என்ன சொல்ற? உன்ட விருப்பமென்ன....?" ரபாய்டீன் உருக்கமாகவே வினாவெழுப்பினார்.

தனது எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் இந்த மகத்தான கேள்விக்கு அவன் உடன் பதில் சொல்வது எப்படி?

"யோசிச்சி சொல்றன்" என்று மட்டும் நிதானமாகக் கூறிவிட்டு நழுவினான். அன்று மாலை அவன் தன் முடிவைச் சொன்னான்.

"உம்மம்மா.... மொதல்ல நான் ஓ.எல். சோதனை நல்லா செய்யணும். அதுக்குப் பொறகு ஏ.எல்.... இதில வார மார்க்கை வச்சித்தான் நா டொக்டரா இஞ்சினியரா எண்டு முடிவு எடுக்கணும். எல்லாம் ஏ.எல். ரிசல்ட்லதான் இருக்கு. அதுக்கு காலம் இருக்குத்தானே! ஆனா ஒன்னமட்டும் சொல்ல ஏலும். இதுவரை காலமும் என்னோடு ஒட்டிக்கொண்டு வந்த ஓவியத்தை மட்டும் கைவிட மாட்டன்."

இதைக் கேட்டதும் ரபாய்டீன் உள்ளூர மகிழ்ச்சியால் பூரித்துப் போய் நின்றார். வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

நாட்கள் நகர்ந்தன. ரபாய்டீன் திட்டமிட்டபடி தமது விசாலமான அலுவலக அறையை ஒரு சிறந்த சைத்திரிகனின் விஷேட கூடமாக மாற்றிவிட்டிருந்தார்.

அறையின் வலது பக்கச் சுவரில் ஒரு சாதாரண பசுமை வெளி. ஓரிரு மரங்கள். மலை, மலையை ஊடறுத்துக் கொண்டு ஒரு மலையூற்று. அதேபோல இடதுபக்கத்திலும் ஒரு சூரியோதயக் காட்சி. பளீரென்று அறையை ஒளிமயமாக்குவது போல். அதுதான் விஷேசம். பார்வையாளர்களை ஸ்தம்பித்து நிற்கவைக்கும் சக்தி எப்படி வந்தது?

மாகாணப் போட்டியில் முதலிடம் பெற்ற சப்வான் அகில இலங்கை ரீதியில் பங்குபற்றுவதற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

ரபாய்டீனின் வழிகாட்டலில் சப்வான் ஆக்கிய சுவர் ஓவியங்கள் இரண்டையும் பார்த்ததும் அதன் அழகு அல்லது ஏதோவொரு கவர்ச்சி ஏற்படுத்திய கிறக்கம் நீங்குவதற்கு நீண்டநேரம் பிடித்தது ஹாரிசாவுக்கு.

"பேரன் சப்வானின் ஆர்வமும் திறமையும்தான்" ரபாய்டீன் அறிமுகப்படுத்தும் போது, ஹாரிசாவல் நம்ப முடியவில்லை.

நடந்த, நடந்து கொண்டிருக்கிற அவலங்களைப் படைத்து, ஓவியக்கலை காலத்தின் கண்ணாடி என்பதை நிரூபிக்கின்றன!

உதாரணத்திற்கு 1958ம் ஆண்டு கண்டி பெரஹராவில் ஏற்பட்ட யானைக் குழப்பத்தால் மக்கள் சிதறி ஓடிக் கண்டியின் வாவியில் விழுந்து மரணத்தைத் தழுவியதும்... யானை மிதித்து இறந்ததையும் தத்ரூபமாக சித்திரமாகியிருக்கிறான்.

பொதுவாகச் சொல்லப் போனால் பல கோணங்களில் இருந்து பார்க்கும் போது சப்வானின் சித்திரங்களில் அவனை அறியாமலேயே சமகால அவலங்கள் ஓவியங்களாகப் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்து பேயாட்டம் ஆடும் சித்திரமும், மக்கள் கூட்டம் வாழ்வதற்காகச் சிதறி ஓடும் சித்திரமும் மனதைக் கௌவிப் பிடிக்கின்றன!

"ஓவியத்தில் இவ்வளவு விசயங்கள் அடங்கி இருக்கா?" ரிசானாவின் ஆர்வம் பொங்கி எழுந்தது.

ஓவியர்களின் திறமைகளை ஓவியக் கண்காட்சிக்குப் போனால்தான் பார்க்கலாம். சப்வானின் சில படங்கள் கண்காட்சியில் வைக்கக் கூடிய தகுதி இருக்கு. அதற்கு நா ஒழுங்கு செய்வேன்.

பிற்பகலில் சமையல் வேலைகளெல்லாம் முடிந்த பிறகு மீண்டும் நடுகூடத்தில் ஒன்று கூடல்....

சப்வானை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, வாசலில் 'ஆட்டா' வந்து நின்றது. மணி இரண்டுக்கு ஐந்திருக்க.

சப்வான் பாடசாலையிலிருந்து வந்து இறங்கினான்.

"ஓவியரே வருக! வருக" ரபாய்டீன் வரவேற்றார்.

வந்ததும் முகம் கை கால்கள் அலம்பி, உடைமாற்றி வந்து அமர்ந் தான்.

அடுத்து பகலுணவு.

அதற்கு முன் ஹாரிசா தொடங் கினாள். "சப்வான்.... ரபாய்டீன் அப்பா ரூம்ல நீ கீத்திருக்கிற படம் சுப்பரா இருக்கு. அத மாதிரி இந்த ஹோல்ல யும்... சொவர்ல படம் வரைஞ்சா நல்லாருக்கும் சப்வான்... ஊடு பசுந்தா வரும்."

சப்வான் உரக்கச் சிரித்துவிட்டு மௌனம் சாதித்தான். வலது கை முஷ் டியிலுள்ள மாறாத வடுவை பார்த்துக் கொண்டிருந்தான். அது சுவரில் கீறிக் கொண்டிருந்தமைக்காக ரிசானா போட்ட நெருப்புச் சூடு. மனதை விட்டும் நீங்காத ஞாபகச் சின்னம். முதற் தடவையாகக் கிடைத்த ஓவியப் பரிசு.

அப்புறம் நீடித்துக் கொண்டிருந்த அந்த மௌனத்தை உடைத்துக் கொண்டு அவன் கேட்டுவிட்டான் ஒரு கேள்வி.

"என் கீறல்கள் உங்களுக்கு அழகாக இருக்கா? அது எப்படி?"

ஹாரிசா ரபாய்டீனைப் பார்த்துக் கேட்டாள். "என்ன, நீங்களாவது சொல்லுங்க...."

பழைய நினைவுச்சுழியில் மூழ்கி யிருந்த சப்வானின் ஆணித்தரமான குரல் எல்லாரது மனங்களையும் உசுப்பி விட்டது.

"டடா என்ன சும்மா இருக்கார். நா சொவர்ல கை வச்சா கைகளை வெட்டிப் போடுவாரோ!"

"சுவர்ல தொங்கிக் கொண்டிருக்கும் பிரம்பு உம்மாவைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கு. நா திரும்ப சொவர்ல கீறினா.... அடுத்த கை முஷ்டிக்கும் பரிசு கிடைக்குமோ?"

"உம்மம்மாவின் தொண்டை கிழியும் கத்தல்கள் ஓஞ்சி போயிருச்சோ!"

ரபாய்டீன் குறுக்கிட்டார். "சப்வான்... சரி... சரி... எல்லாத்தையும் மறந்துடு... இப்பதான் எல்லாரும் உன் படங்களுக்கு அடிமை ஆயிட்டாங்களே...!"

இன்றைய சமுதாயத்தின் அவலங் களை ஓவியமாக்கி நாளைய சமுதாயத் தின் சிந்தனைக்கு விடவேண்டும்.

அதுக்கு இனித்தான் நா நுண் கலைக் கல்லூரியின் விசாலமான பாட நெறியை முறையாகப் படித்துப் பயிற்சி பெறவேண்டும்!

அவன் திடசங்கற்பம் செய்து கொண்டான்.

முன் ஹாலில் ஹாரிசா அமர்ந் திருந்தாள். பக்கத்தில் ரிசானா சோக மாய்! நேரெதிராக ரபாய்டீனும் சப்வானும்.

மௌனம் நீடித்தது.

"அப்ப முன் ஹோல் டெக்க ரேஷன்?" ஹாரிசாவின் ஆவல்.

சப்வான் தன் வலது கைமுஷ்டியில் பதிந்துள்ள மாறாத அந்த வடுவைத் தடவிக் கொண்டே சொன்னான். "..... மன்னிக்கணும் என்னால முடியாது."

# வெள்ளிக்கால் நண்டு

- ஜே.வஹாப்தீன்

கீறிக் கீறி
அலை கொண்டுபோன படத்தை
இன்னும் காத்திருக்கிறது நண்டு
வந்து தருமா ஆழி?

அலை எழுந்து
அடித்த சத்தியத்தில்
மண்வீடு மண்ணாகிய
ஓர் அவசரத்தில் போனது
வெள்ளிக்கால் நண்டு வரைந்த
வெற்றுப் படம்!

மாலைக் கருக்கலில்
பூக்கள் நெட்டி கொண்டு
துரத்தி அடித்து
சுட்டுத் தின்னும்
வாலிபர் கூட்டம்
வருவதற்குள் விரைந்த நண்டு.

எண்ணம் முழுவதையும்
மண்ணில் வரைந்த கதையை
உப்புநீரில் மறைந்தபடி
பார்த்து ரசித்த நொடிகள்!

உன் வரைதலும்
எங்கள் கனவுகளும்
ஒன்றுதான் என்பதை
வெள்ளிக்கால் நண்டே
இன்னமும் சொல்லணுமோ?




# நயமான வாசிப்பைத் தருகின்றது முதுசம்

-மா.பாலசிங்கம்

**த**மிழ் வாசகருக்குப் புதியவரல்ல த.சிவசுப்பிரமணியம். திறனாய்வு, சிறு கதை, கட்டுரை, சிற்றிதழாசிரியர் என்பவற்றில் சுவடிட்டு, ஓர் சமதர்ம சமுதாயத்தைத் தமிழ் மண்ணில் கட்டியெழுப்பும் இலக்கு விசையோடு தமிழிலக்கிய ஊழியம் செய்பவர். சமகால இலக்கிய மேடைகளிலும் முன்னரங்கப் பேச்சாளராகத் திகழ்பவர். தம்பு சிவா, தேடலோன் ஆகிய புனைபெயர்களிலும் தமிழ் வாசகர் வட்டத்துள் நடமாடுபவர். சந்ததிகள் கடந்தும் வாழக்கூடிய பல அறிவியல் நூல்களை வெளியிட்டுக் கல்விச் சமூகத்தின் பேரபி மானத்தைச் சுகிக்கும் சேமமடு பொத்தகசாலை, தனது நவீன தமிழிலக்கியப் பணி களிலொன்றாகத் த.சிவசுப்பிரமணியத்தின் '**முதுசம்**' என்ற பத்தொன்பது சிறுகதைகளை அடக்கிய தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளது. அதைக் கருத்தூன்றி வாசித்தபோது மனதிலூறிய எண்ணங்களைத் தமிழ் வாசகரோடு பகிர வேண்டுமென்ற இலக்கில் அமைந்ததே இந்த இரசனைக் குறிப்பாகும்.

'எனக்குத் தெரிந்தவற்றைத்தான் நான் எழுதுகின்றேன். எனக்குத் தெரியாதவற்றை நான் ஒருபோதும் எழுதுவதிலலை' என்ற உலகப் புகழ் பெற்ற மார்க்சிம் கோர்க்கியின் உபாசகன் தானெனவும், அம்மேதையின் வழிகாட்டலை அனுசரித்தே இலக்கியம் படைப்பதாகவும் **முதுசம்** நூலாசிரியர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். அதை இத் தொகுப்பின் சிறுகதைகளும் தெறிக்க வைக்கின்றன. தன் முன் நிகழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையை இத்தொகுப்பாசிரியர் கூர்ந்து அவதானித்து, அதன் நெருடலான, இரசித்த பக்கங்களைத் தன் கோட்பாட்டுத் தடங்களோடு உரைத்துப் பார்த்து, இச்சிறுகதைகளைக் கலைத்துவமான நடையில் புனைந்துள்ளார். கதா இரசனை உண்டு. நடையின் பொதுமைத்தன்மை தொகுப்பை அனைத்து வாசகர்களுக்குமானதாக்குகின்றது.

யாழ்ப்பாணம் போர்ச் சூழலில், தான் சாப்பிடப் பாண் வாங்க ஏழு மணித்தியாலங்கள் காத்து நிற்க வேண்டிய பாண் கியூவில் நின்ற மூதாட்டி பறுவதம் ஆச்சி தனது கண்களை நிரந்தரமாகக் மூடிக்கொள்கிறார். ஆச்சியின் கணவரைப் பேரினவாதிகளின் ஷெல் பலி கொண்டு விட்டது. தங்களது உயிர்களைக் காத்துக் கொள்ளப் பயண முகவர்கள் ஒழுங்கில் இத்தாலி சென்ற ஆச்சியின் புத்திரர்களிடமிருந்து எதுவித தகவலுமில்லை! குத்தி, இடித்துத் தான் ஆச்சி தன் சீவியத்தை நடத்தியவர். பாண் துண்டுக்கும் வக்கில்லாமல் மரணித்து விட்டார். அப்பாவியான இந்தப் பறுவதம் ஆச்சி யாரால்? எப்படி? உண்டாக்கப்பட்டார். பேரினவாதம் பதில் கூறுமா? யாழ்ப்பாணம் அநுபவித்த அவலங்கள் தான் எத்தனை? பொருளாதாரத் தடை, வெள்ளைவான் கடத்தல், போக்குவரத்து வசதியீனம் இப்படி எத்தனை? எத்தனை? **யாழ்ப்பாணம்** சொல்லும் அவைகளை.

இத்துயர் சுமந்த வாழ்வில் நெரியுண்ட பெண்களில் சிலர்தான், இவ்வலிகளிலிருந்து கொஞ்சமாவது தமது குடும்பங்களை மீண்டெழச் செய்ய அரபு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகப் புறப்பட்டனர். இதற்குக் குடும்பத் தலைவர்களது பங்களிப்புகளும் இருந்துதான் உள்ளது. இந்த அயோக்கியர்கள் குடும்பத்தைக் கவனிக்காது, மதுவுக்கு அடிமைகளாகி, வீட்டில் கிளிகள் காத்திருக்க அண்டங்காகங்களைத் தேடி அலைந்திருக்கின்றனர். வேற்று மனிதர்கள் சொந்த மனைவிமாரை வல்லுறவுகளுக்கு உட்படுத்த அனுமதித்திருக்கின்றனர். சொந்த மண்ணில்தான் இப்படியென்றால், தொழிலை ஒழுங்கு செய்யும் முகவர்கள் இருக்கும் கொழும்பிலும் இந்த அப்பாவிப் பெண்கள் தாங்கள் கிடுகு வேலிகளுக்குள் கட்டிக் காத்த கற்பை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. இச்சுமைகளோடு அரபு நாடுகளுக்குச் சென்ற பெண்களுக்கு வீட்டெஜமானிகளால் எண்ணற்ற அரியண்டங்கள்! ஒழுங்காகச் சம்பளக் கொடுப்பனவில்லை. காஸ் அடுப்பைப் பற்ற வைத்து, நெருப்பேற்றி, அந்த நெருப்பில் பணிப் பெண்ணின் கையைச் சுடுகின்றனர் பாதகர்கள். அங்குள்ள கீழைத்தேசத்தவர்கள் தான் இரக்கம் காட்டினார்களா? அந்தச் சுடு மண்ணில் ஊறிய தங்களது கட்டுக்கடங்காத காமவெறியை இந்த அப்பாவிப் பெண்கள் மூலமாகத் தணிக்க எத்தனிக்கின்றனர்!

இச்சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சில சிறுகதைகளில் மேற் கண்டவற்றை வாசகரின் மனமுருகச் சித்திரித்திருக்கும் தம்பு சிவா, இந்த மானுட விரோதிகளுக்குத் தக்க தண்டனை கொடுக்க வீராங்கனையான மாலினியையும் படைத்துள்ளார். இக்கொடுமைக்காரருக்கு எதிராக அவள் தன்னகத்தே கொண்டிருக்கும் எயிட்ஸ் தான் அவளுக்கு ஆயுதமாகிற்று. வாழ்க்கைப்பட்ட நெறிகெட்ட கணவனின் நடத்தைகளால் மாலினி அரபு நாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றவள். தன் இரண்டு குழந்தைகளையும் கருணை இல்லத்தில் ஒப்படைத்த பின், கொழும்பு செல்கிறாள். அங்கும் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறாள். அரபு நாட்டுக்குச் சென்றபின் அங்கும் அவள் கற்பை இழக்கிறாள். இதற்கெல்லாம் காரணம் தானல்லவெனத் தெளி

கிறாள். ஆணாதிக்க சமுதாயத்தின் மீது வெறுப்புக் குவிகின்றது. பெண்களைப் போதைப் பொருளாக்குகின்ற ஆண் வர்க்கத்துக்குச் சட்டத்தாலும் தண்டனையாலும் கொடுக்க முடியாத தீர்ப்பை என்னால் கொடுக்க முடி(கின்றது)யும் எனச் சங்கல்பம் செய்து, எயிட்ஸ்சால் அழிந்து போகவுள்ள தன் உடலைத் தான் வெறுக்கும் ஆண் வர்க்கத்துக்குக் கொடுத்து, எயிட்ஸ்ஸை அவர்களுக்கும் வழங்க எத்தனிக்கிறாள். சமுதாய ஈடேற்றத்துக்கான ஒரு போராளி வாசகனின் மனதில் படருகிறான் **தண்டனை** சிறுகதை மூலம்.

தன் எதிரிகளை இனங்கண்டு இப்பிடித் தண்டிக்க வேண்டிய மாலினி இப்படித் தெரு விபச்சாரியாகி அனைவரையும் எயிட்ஸ் நோயாளராக்குவது அநீதியானதெனச் சிலர் கருதலாம். வீட்டில் மனைவியிருக்க, தெரு விபச்சாரிகளை நாடி ஆடவர்கள் ஓடாதிருக்க இச்செயற்பாடு வழிகோலுந்தானே?

மாலினிகள் மீது தம்பு சிவாவுக்கு அலாதிப்பிரியம் போலும்!

**ஆட்கொல்லி எச்.ஐ.வி.**இல் மற்றொரு மானுடநேய மாலினியைக் காட்டிப் பெண்ணியத்துக்குப் பெருமை ஏற்படுத்துகிறார். மதிப்பான மருத்துவ ஆலோசகர் பதவியிலிருப்பவன் நிமல். தொழில்சார் ரீதியாக இந்தியா செல்கிறான். அங்கு ஹோட்டல் பெண்ணோடு உடல் உறவு கொண்டு, ஆட்கொல்லி எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயாளி ஆகிறான். ஊர் வந்ததும் இதை அறிந்த அவன் குடும்பம் அவனை விலத்தி விட்டு ஒதுங்கி விடுகிறது. தான் ஏற்கனவே நேசித்த தன் நண்பன் அமரசேகரவின் தங்கை மாலினியைத் தன் கடைசிப் புகலிடமாக நிமல் நாடுகிறான். பாலுறவு, இரத்த மாற்றம் இவற்றைவிட வேறு எந்த வழியிலும் தொற்றாது. எச்.ஐ.வி. தொற்றியவருக்கு எயிட்ஸ் நோய் வந்து மரணமடைய 10 தொடக்கம் 15 வருடங்கள் வரை ஆகும்! என எயிட்ஸ் வைத்திய விளக்கம் கூறி தாதியான மாலினி நிமலைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறாள். நீ விரும்பும் பெண்ணைக் காட்டிலும் உன்னை விரும்பும் பெண்ணே வாழ்க்கைக்கு ஏற்றவள் என்ற விளக்கத்தைப் பெற்றவனாக நிமல், மாலினியைப் பின் தொடர்கிறான்.

எயிட்ஸ், எச்.ஐ.வி. பற்றிய அறிதலும் இச்சிறுகதையில் கிடைக்கின்றது. சிங்கள இனத்தை மையப்படுத்தி எழுதப்பட்ட கதையாகவே இச்சிறுகதையை கருத முடிகின்றது! கதைஞர் என்ன சொல்வாரோ? இன ஐக்கியத் தொனியை வலுப்படுத்துகிறது.

தமிழக இதழியல் துறையை அதிசயிக்க வைத்த ஈழத்து **சிரித்திரன்** மாசிகையில் வாசகரொருவர் மொழி எப்போ தோற்கும் எனக் கேட்டிருந்தார். அதற்குச் சுந்தர் தாயன்பை விளக்க முயலும்போது தோற்கும்! எனப் பதில் எழுதியிருந்தார். இதை விடப் பொருத்தமான பதில்தான் இருக்க முடியுமா? இத்தாயன்பைத் தொட்டு நிற்கும் சிறுகதை **வாழ வைத்த தெய்வம்.** இளமைப் பருவத்தில் அனாதையாகிக் கற்பகம் அன்னை இல்லத்தில் வளர்ந்தவள். ஊதாரிக் கணவனுக்கு வாழ்க்கைப் பட்டுத் தனது வாழ்வை இழந்தவள். வாழ் வேற்படுத்திய வடுக்களால் வன்மமுற்று குத்தி, இடித்துச் சம்பாதித்து, மகன்

அற்புதனைக் கற்க வைத்து விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியனாக்கியவள். மனைவி வழியாக அற்புதனுக்குக் கனடாப் பயணம் சுவறுகின்றது. வாழ்க்கைப்பட்டவள் நச்சரிக் கிறாள். தன்னை வாழ வைத்த தெய்வம் தாயைத் தனியே விட்டுப் பிரிய முடியாதென மனைவியின் வேண்டுகோளை நிராகரிக் கிறான். தாய் நயமான புத்திமதிகளை எடுத் துக் கூறி, அவன் மனதை மாற்றுகிறாள். பயணம் சொல்லிய மகனுக்கு விடை கொடுத்துவிட்டுத் தாய் கற்பகம் - அவன் பிரிவைத் தாங்க முடியாது பூமியில் சரிந்து உயிர் துறக்கிறாள். வாசகனின் மனம் துக்கத்தால் கனதி கொள்கிறது. தாயன் பின் எல்லையற்ற ஆழம் மற்றுமொரு தரம் பிரபஞ்சத்தில் நிலை கொள்கிறது.

வைத்தியத் தொழில் மனித உயிர் காக்கும் புனிதத் தொழில். அந்தப் புனிதம் காக்க வேண்டிய வைத்திய கலாநிதிகள் இந்தக் கணனி யுகத்தில் தம்மிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளைச் 'சுழட்டவும்' எத்தனிப்பதாக அண்மைக் காலப் பத்திரிகைச் செய்தியொன்றின் மூலமாக அறிய முடிகின்றது. அத்தகைய போலியொன்றை **வீணடித்த வாழ்க்கையின் பலன்** வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. கூவில் கள்ளுக் குடித்தால் உடம்பெல்லாம் விண் கூவும்! என இலக் கியவாதியொருவர் கூவில் பனங்கள்ளின் மான்மியத்தைப் பொச்சடித்துச் சொல்லி யிருக்கிறார். அத்தகைய இடங்களுக்கெல் லாம் சென்று, பெற்றோரின் புத்திமதிகளை யும் கேட்காது, வாழ்க்கையை வீணடித்த வனுக்குப் பாடசாலைப் பருவத்தில் தவறு களை எடுத்துச் சொன்ன நண்பன் வைத் திய கலாநிதியாகி தொழில் பார்க்கையில், தன்னிடம் சிகிச்சைக்கு வந்த ஆத்ம நண் பனின் மனைவியைத் தன் காமக் கிழத்தி யாக்குகிறான். என்னே நட்பு! என்னே வைத்தியத்துறையின் புனிதம்!

**பெண்ணாகப் பிறந்து விட்டால்...!** எனத் தலையில் கையால் குத்திக் கொள் ளும் கதைஞர் ஏன்? எனது சாதிக்காரர் களை உங்கள் வீட்டார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற சாதீயத்தைச் சுட்டும் பேச்சாடலைக் கதைக்குள் ஊடாட விட் டார்? ஒரு பஞ்சம இலக்கியமாக எடுப்பதா கில், ஓடிப்போன பழனியின் தங்கச்சியை யும் ரதியின் அண்ணனையும் முதன்மைப் படுத்தியிருக்க வேண்டும்! பழமைக்குள் ஊறிப்போனவர்களாகவே பழனியும் ரதியும் கவனத்தைப் பெறுகின்றனர்.

சில சிறுகதைகளில் கதைஞர் தம்பு சிவாவால் அட்டவணைப்படுத்தப்பட்டிருக் கும் நெஞ்சை உருக்கும் சொந்த மண் ணின் சோகங்களை வெறும் காலத்துயர் என ஒதுக்கிவிட முடியுமா? இல்லை யெனவே **முதுசம்** நிமிருகின்றது. முதுசம் முருகேசர் போன்ற யாழ்ப்பாணத்து நிலப் பசிகாரரின் அட்டூழியங்களின் பலனையே சொந்த மண் இன்று அநுபவிக்கின்றது என உணர்த்துகின்றது. இறக்கும் போதும் முரு கேசருக்கு அபகரித்த காணிகள் முதுசமாக இருந்தன. ஆனால் மூன்று பெற்ற பிள்ளை களும் பக்கத்திலில்லை. ஊர் சிரிக்கும் நல்ல தண்டனைதான்! சிறுகதையின் பெரும்பகுதி யாழ்ப்பாணப் பேச்சு, வழக்கில் நகர்த்தப்பட்டுள்ளது. சூத்திரக் கிணற்றில் தண்ணீர் இறைப்பு விபரிப்பு இன்றைய சந் ததிக்குப் பெரும் புதினந்தான்! அற்புத மானது!

முதுசம் தொகுப்பில் மனோரதியப் போக்கான சில சிறுகதைகளையும் வாசிக்கலாம். ஆணின் ஒருதலைப்பட்சமான காதலை வெளிப்படுத்தும் கைக்கிளைக் காதல்கள் அரச உத்தியோகப் பேற்றைப் பெற்றுக் கொழும்பு வரும் உத்தியோக இளைஞர்கள் அநேகமாக வேற்றினத்தவர் களது வீடுகளிலேயே விடுதி பெற்றுத் தமது தொழிலை ஆரம்பிப்பர். இவர்கள் கார் வாங்குவதானால் ஓடிப் பார்த்துத்தான் வாங்க வேண்டும் என்ற வாக்கில் தாம் தங்கியிருக்கும் வீடுகளிலும், தொழில் பார்க்கும் பணியகங்களிலும் தங்களது இளமைக் காலச் சேஷ்டைகளுக்குக் குமரிகளைத் தம் வசப்படுத்த எண்ணுவதும் உண்டு. அக்குமரிகளிடம் மாட்டிக்கொள்வதும் உண்டு. ஆனால் இக்கதைகள் ஏமாற்றப்படும் ஆண்களையே மிகுதியாகக் காட்டுகின்றன. இவர்களின் உதவியோடு படித்து முன்னேறிய பெண்கள் கூட அந்தஸ்து மோகத்தில் இவர்களை நிராகரிக்கின்றனர்.

பேராசிரியர் சபா ஜெயராசா இத்தொகுப்புக்குப் பிரமாதமான அணிந்துரையொன்றை வழங்கியுள்ளார். இதைச் சகல தமிழிலக்கியவாதிகளும் படித்துத் தமது இலக்கிய ஊழியத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம்.

கொழும்பு 11, சேமமடு பொத்தக சாலை, மிகப் பிரமாதமாக நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. அச்சுத்தாள், பக்க வடிவமைப்பு என்பன சிலாகிக்கத்தக்கன. ஓவியர் தவம் வரைந்த அட்டைப்படம் தொகுப்பைத் தூக்கலாக்குகின்றது.

படைப்பாளி தம்பு சிவாவின் கலாபூர்வமான பிசிறற்ற எடுத்துரைப்பு - நயப்புரையாக வாசிப்பை இழுத்துச் செல்கின்றது. பெண்ணுக்கு முன்னுரிமை கொடுக்கும் போக்கும் தலைகாட்டுகின்றது. சிறுகதைகள் எதிர்பாராத முடிவுகளைத் தரவேண்டுமென உரத்த திறனாய்வாளர்கள் கருத்துரைப்பதுண்டு. அத்தகைய சிறுகதைகளும் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன. இந்த நெறிப்படுத்தல் யதார்த்த வாதத்துக்குப் பாதகத்தை ஏற்படுத்தாதா? ஆக, **முதுசம்** சிறுகதைத் தொகுப்பு நயமான வாசிப்பைத் தரும் சகலருக்குமான நூலாகும்.

## முக்கியக் குறிப்பு :

நாம் **மல்லிகையையும்**
அத்துடன் **மல்லிகைப் பந்தல்**
நூல்களையும்தான் அச்சிட்டு
வெளியிடுகின்றோமே தவிர,
அதனைச் சந்தாதாரர்களுக்கு
தபாலில் அனுப்பப் பயன்
படுத்தும் தபாற் தலைகளையும்
அச்சிடுவதில்லை. இதனைப்
பல தொடர் சந்தா வாசகர்கள்
புரிந்துகொள்வதேயில்லை
என மன
ஆதங்கப்படுகின்றோம்.

- ஆசிரியர்

குறுங்கதை

# அபிஷேகம்

- வேல் அமுதன்

பிள்ளையார் கோயிலில் பிறைசூடி ஐயாவின் விசேஷ அபிஷேகம்.

பிறைசூடியை 'ஐயா' என மரியாதையாக அறிமுகம் செய்தமைக்குக் காரணம் உண்டு. அவர் சைவ சமய அனுட்டானங்களை ஐயந்திரிபறத் தெரிந்திருந்தமை, அத்தோடு வடமொழியை உயர் பட்டப் படிப்புக்குப் பாடமாக எடுத்துத் திறமைச் சித்தி எய்தியமை. இவற்றுக்கு மேலாகச் சமயப் பற்றும், தான் வாழும் புலம்பெயர் நாட்டில் 'சைவ சித்தாந்த அறிவு வட்டம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தும் - அதன் தலைவராகப் பணிபுரி கின்றமையுமாம்.

பிறைசூடி ஐயாவின் அன்பு மனைவிக்குப் புற்றுக்கழலை (Tumour) என அண்மையிற் சந்தேகிக்கப்பட்டு, எம்.ஆர்.ஐ. (MRI) ஸ்கானிங் (Scanning) செய்வதற்கு நாள் நேரம் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஆனால்,

ஐயாவுக்கு இறை நம்பிக்கையோ ஜாஸ்தி. தும்பிக்கையான் தனது மனைவியைத் தூக்கி விடுவார் எனப் பாரிய நம்பிக்கை. அதனால், அவர் அன்று அவ்வபிஷேகத்தைப் பக்தி சிரத்தையோடு நடத்திக் கொண்டிருந் தார்.

கையடக்கத் தொலைபேசி ஒன்று சிணுங்கியது. என்ன அபசாரம்! அபிஷேக புரோகிதரே கையடக்கத் தொலைபேசி ஒன்றினை தனது மடியிலிருந்து இழுத்தெடுத்து, "ஹா... லோ" என உரத்த குரலில் உரை யாடத் தொடங்கினார்.

பிறைசூடி ஐயாவிற்கு கங்குகரையற்ற கடுங் கோபம். தன்னை முழுமை யாக மறந்த நிலையில், புரோகிதரின் விலையுயர்ந்த கையடக்கத் தொலை பேசியை அவரிடமிருந்து புடுங்கி, அது தொலைந்து போகப் பலம் முழு வதையும் பயன்படுத்தி, சுழற்றி எறிந்தார்.

தொலைபேசி சுக்குநூறு!

அந்தச் சிறுவன் விறுவிறென நடந்துகொண்டிருந்தான். அவனது நடையிலொரு நிமிர்வு. ஓர் உத்வேகம். சாதனையொன்றை நிகழ்த்தவிருக்கும் பெருமிதம்.

அந்த வீதியில் பயணித்துக் கொண்டிருந்த அத்தனை பேர்களின் நடுவே அப்பையன் தனித்துவமானவனாக எனக்குத் தோன்றினான். நானும் உடலோடு இருந்திருந்தால் இந்தத் தனித்துவம் எனக்குப் பிடிபட்டிருக்காது. உடலை விட்டுப் பறந்தோடி வந்துவிட்டதனால் அவனது உடலுடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருந்த வெடி மருந்துக் குவியலை என்னால் துல்லியமாகக் காணக்கூடியதாக இருந்தது. இந்த இளம் நெஞ்சத்தில் மரணத்தைத் தானே தேடிக்கொள்ளும் மன வைராக்கியம் பலநூறு பேரைக் கொன்று சாறாக்க வேண்டுமென்னும் வெறியும் எப்படிக் குடியேறின?

படார்...

# இறைவன் சிரிக்கிறார்!

## சிரிப்பு - 5

- யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

செயற்பட இயலாது சிந்தித்துக் கொண்டு நானிருக்கையில் அந்த மனித வெடிகுண்டு வெடித்துச் சிதறிப் பேரழிவை ஏற்படுத்திவிட்டது.

மனதைப் பதைபதைக்க வைக்கும் கோரக்காட்சி.

அதைப் பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அதனைக் காணும் பொருட்டு என்னருகே மேலும் பலர் கூடினார்கள்.

கீழே தாக்குதல் நடந்த இடத்தை அணுக விடாது காவல்துறையினர் கட்டுப் படுத்தினர். உடலுடனிருப்பவர்கள் அங்கே சென்று வேடிக்கை பார்க்க முடியவில்லை.

என் பேன்ற உடலற்றோர் எந்தத் தடையுமில்லாததால் சூழ்ந்து கொண்டனர்.

"ஒரு பாவமுமறியாத சனங்களை வீணாய்க் கொன்று போட்டுட்டான். இதாலை என்ன பிரயோசனம்?" நான் முணுமுணுத்தேன்.

"ஆனால், இவையின்ரை ஆக்கள் செய்த அநியாயங்களைச் சொல்லத் தொடங்கினால் மாதக் கணக்கிலை சொல்லிக் கொண்டிருக்கலாம். என்ரை குடும்பத்துக்குத் தொடர்ச்சியான எவ்வளவு கெடுதியலைச் செய்தவங்களெண்டு தெரியுமே. ஒவ்வொண்டாய்ப் பார்த்துப் பார்த்து துன்பத்தை அனுபவிச்சு அனுபவிச்சு என்னுடைய மனம் பாறாங்கல்லாய்ப் போச்சு. இப்பிடி நாலிடத்திலை நடந்தால்தான் ஆட்டம் போடுறவையின்ரை கொக்கரிப்பு கொஞ்சம் குறையும். என்ரை குடும்பம் பட்ட கஷ்டத்துக்கு சரியாய் பழிவாங்கிப் போட்டன். இப்பதான் எனக்குத் திருப்தி."

எனது கேள்விக்குப் பதில் பக்கத்திலிருந்து வந்ததும் நான் திகைத்துத் திரும்பினேன். அந்த வெடிகுண்டுச் சிறுவன் எனதருகே நின்றுகொண்டிருந்தான்.

ஓ! அவனுடைய உடல் வெடித்துச் சிதறிவிட்டதல்லவா?

"எதிரியைத்தான் பழி தீர்க்க வேண்டும். நாங்களும் உங்களைப் போன்றவர்கள். எங்களைக் கொன்றதால் உனக்கு என்ன பிரயோசனம் கிடைச்சது? உன்னுடைய எதிரி சந்தோஷமாயிருக்கிறான். எங்களுடைய குடும்பங்கள்தான் வேதனைப்படுகினம்."

எதிர்க்குரல் கொடுக்கும் இவன் யார்?

"நீங்கள் யார்?" அவனிடமே என் சந்தேகத்திற்குப் பதிலைக் கோரினேன்.

"இந்தக் குண்டு வெடிப்பில் பலியாகி அதோ அடையாளமே தெரியாமல் சிதைந்துபோய்க் கிடக்கிறதே ஒரு சடலம். அது என்னுடையதுதான். நாங்களும் இவர்களைப் போல் பல பாதிப்புகளுக்கு ஆளானவர்கள். இவர்களுடன் சேர்ந்து போராடப் போகாதவர்கள். இனி எங்கள் வீட்டிலிருந்து யாராவது போராடப் போவதென்றால் யாரை எதிர்ப்பது? இவர்களாலும் பாதிக்கப் பட்டு விட்டோம்."

அவன் தனது பதிலை விரக்தியோடு கூடிய வினாவில் முடித்தான்.

"எங்கடை பஸ் குண்டுவெடிப்பிலை சிக்கிவிட்டதெண்டு அப்பா, அம்மாவுக்குத் தெரிஞ்சுட்டுது. அந்த பாடசாலை சேவை பஸ்ஸிலை வாற எல்லாப் பிள்ளைகளின்ரை அப்பா அம்மாமாரும் சேர்ந்து அழுதுகொண்டு வருகினம்."

"என்ரை அப்பா அம்மாவுக்கு பத்து வருஷங்களாய் பிள்ளைகள் இல்லை. எவ்வளவோ வைத்தியம் செய்துதான் நான் பிறந்தனான். என்னை விட வேறை பிள்ளையளுமில்லை. இப்ப நானும் கொல்லபட்டிட்டன் எண்டதும் எவ்வளவு கவலைப்படுவினம். பாருங்கோ ஓடியோடி எல்லாரிட்டையும் விசாரிச்சு எவ்வளவு அந்தரப்படுகினம் எண்டு."

அந்தக் குண்டுவெடிப்பில் பாடசாலைச் சேவை சிற்றுந்து ஒன்றும் மாணவர்களுடன் வரும்போது அகப் பட்டுச் சிதறியிருந்தது. அதில் பயணித்த மாணவர்கள்தான் மாறி மாறி தத்தம்

கவலைகளைக் கூறிக்கொண்டிருந் தார்கள். வெடிகுண்டுச் சிறுவனும் அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"நான் இவர்களைக் குறிவைக்க வில்லை. எனது இலக்கு எனக்குக் கிட்டியபோது இவர்களும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்."

"இப்படிச் சொல்லித் தப்ப முய லாதே. பிழை பிழைதான். குற்றம் குற் றந்தான்." ஒருவன் ஆவேசத்தோடு அவனை நோக்கிக் கத்தினான்.

"துன்பப்படுவோரின் துயரம் தீர்ப்ப தற்காக, நசுக்கப்பட்டோரின் தலை நிமிர்ந்து வாழ்வதற்காக நாம் செய்யும் தியாகங்கள் தூய்மையானவை. நல்ல நோக்கங் கொண்டவை."

"இப்படி அப்பாவிகளைக் கொன்று குருதி பெருக்கெடுத்தோட வைக்கும் செயலுக்கு இதில் எந்த அடைமொழியும் பொருத்தமில்லை. உன் எதிரியை இலக்கு வை. அவனைக் கொல். அதுகூடத் தவறு. அவனைத் திருத்து."

"அது இயலாதபோதுதான் நாங்கள் இப்படியான போராட்டத்தை முன் னெடுக்க வேண்டியுள்ளது."

"அப்படியென்றால் இந்த விபரீதத் திற்குப் பொறுப்பு நீயல்ல. அநீதி செய்பவர்கள்தான் என்கிறாயா?"

"நிச்சயமாக. வீட்டிலே குடும்பத்தி னருடன் கூடியிருந்து குதூகலித்து வாழ வேண்டிய நான் இப்படிக் குண்டாக மாறிச் சிதற எனக்கு மட்டுமென்ன விருப்பமா? என் மனம் இவ்வளவு வெறி கொள்ளக் காரணம் அவர்கள் தானே?"

"அந்த அவர்களையும் இங்கு கொண்டுவந்தால் பேசியே பிரச்சினை தீர்ந்து விடுமோ? அட அங்கே தீர்க்க முடியாதது, இங்கே எப்படித் தீரும்?" எனது சிந்தனையை நானே எள்ளி நகை யாடிக்கொள்கிறேன்.

"வலியோர் மெலியோரை வருத் தும் நிலை உலகிலிருந்து அகலாது. அதற்கு உதவியாக இந்த ஆயுதங்களை உருவாக்க இறைவன் உதவுகிறான்."

"ஒரு ஆயுதம் ஒருவரைத் தாக்கி னால் பரவாயில்லை. ஆயிரம் ஆயிரம் பேரை அழிப்பதுதான் அநியாயம்."

"மனிதன் உலகையே அழிக்கும் ஆயுதத்தை உருவாக்க வேணுமென்டு ஆசைப்படுகிறானே. தடியும் கல்லும் போய் கத்தி உருவாகி அது வாளாகி இன்று ஏவுகணைக்கு மேலும் மேலும் சக்தியை எப்படிக் கூட்டுவதென்று ஆய்வு செய்கிறார்கள்."

பலர் கூடிவிட்டதால் ஒவ்வொரு வரும் ஒவ்வொன்று கூறினார்கள்.

"இறைவன் எந்த ஆயுதத்தையும் படைக்கவில்லை. மனிதர்கள்தான் இப் படி ஆயுதங்களை உருவாக்கி உரு வாக்கி தன்னை அழிக்க வழிதேடு கிறான்." ஞானி போல் ஒருவன் கூறினான். நான் அதைக் கேட்டதும் இறைவனைத் தேடினேன். அந்தக் கூட்டத்தினிடையே நின்ற அவர் வேதனை பொய்க்கச் சிரிக்கிறார்.





ஏப்ரல் 24-ந் திகதி ஜெயகாந்தன் அவர்களின் பிறந்த தினம் அன்று எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவரைச் சந்தித்து, வாழ்த்து தெரிவிப்பதையும், மார்ச் மல்லிகை இதழை ஜெயகாந்தன் அவர்கள் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.

தகவல் : கே.பொன்னுத்துரை

# உலகமயமாதல் சூழலில் மலையக இலக்கியத்தின் செல்நெறி : சிவனு மனோஹரனின் 'கோடாங்கி' சிறுகதைத் தொகுப்பை முன்னிறுத்தி...!

– லெனின் மதிவானம்

**திரு.** சிவனு மனோஹரனின் சிறு கதைகளை அவ்வப்போது பத்திரிகை யிலும் சஞ்சிகைகளிலும் வாசித்திருக்கின் றேன். நிகழ்வுகளை அவர் பார்க்கின்ற கோணமும் அதனை அவர் வெளிப் படுத்தும் மொழியும் சற்றே மாறுபட்ட தாய் இருந்தன. இன்று மலையக இலக்கி யத்தில் புதிய வரவாக உள்ள பிரமிளா பிரதீபன் மற்றும் இவர் போன்ற படைப் பாளிகளின் வரிசையில் அவரது கதை களை வைத்து இனங்காணக் கூடியதாக இருந்தது. அவரது முக்கிய கதைகள் சிலவற்றைத் தொகுப்பாக நோக்குகின்ற போது சில அம்சங்கள் தெளிவாகத் தெரி கின்றன. அவ்வகையில் இக்கட்டுரையின் வாயிலாக சிவனு மனோஹரனின் கதை கள் பற்றிய விமர்சனத்தை விட மலை யக இலக்கியத்தில் இன்று முனைப்புற்று வருகின்றதோர் போக்கை விமர்சனத்திற் குட்படுத்தவே முனைகின்றேன்.

இவ்விடத்தில் முக்கிய விடயம் ஒன்றும் அழுத்திக் கூறவேண்டியுள்ளது. அதாவது மலையக இலக்கியத் தொகுதி இரு வகைப்பட்டோரால் எழுதப்பட்டு வந்துள்ளது. அவை வருமாறு:

1. மலையகத்தை வாழ்விடமாகக் கொண்டவர்கள். அந்தப் பண்பாட்டுக்குள்ளிருந்து தோன்றிய படைப்பாளிகள் - மலையக மண்ணின் மைந்தர்கள்.

2. மலையகத்தோடு தொடர்பு கொண்ட அதேசமயம் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத படைப்பாளிகள்.

இவ்விரு வகைப்பட்ட எழுத்தாளர்களினாலும் மலையக இலக்கியம் செழுமைப் படுத்தப்பட்டு வந்துள்ளது என்ற போதினும், இவ்விரு பகுதி எழுத்தாளர்களுக்கி டேயேயும் சிற்சில வேறுபாடுகள் கண்டு கொள்ளத்தக்கதாய் உள்ளது என்பது பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மலையக வரலாற்றினையும் அதன் அபிவிருத்தி குன்றிய நிலையினையும் நோக்கும்போது இந்நிலை ஒருவகையில் தவிர்க்க முடியாதது என்பார் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

மலையகப் பெருந்தோட்டப் பண்பாட்டுக்குள் நின்று அம்மக்கள் பற்றிய இலக் கியம் படைத்தவர்கள் மலையக வாழ்வியலை உள்நின்று சிந்திக்க முனைவதைக்

காணலாம். (இவ்வகைப்பாட்டினுள் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைத்து எழுத்தாளர்களையும் கொள்ள முடியாது) யதார்த்த நோக்கு, சமூக அசைவியக்கம், வர்க்க முரண்பாடு என்பவற்றைச் சித்திரிப்பதில் இவர்களிடையே நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறானதோர் சூழலில் மலையக மக்களின் பிரச்சினைகளை உள்நின்று சிறுகதை எழுத முனைந்த படைப்பாளிகளில் சிவனு மனோகரனுக்கு முக்கிய இடமுண்டு.

உலகமயத்தின் பின்னணியில் இன்று உலகில் இடம்பெற்றுவரும் அட்டூழியங்கள், மனித அழிப்புக்கள், வதைகள், மரண ஓலங்கள் - பிள்ளைகளின் கதறல்கள் இவை ஒருபுறமிருக்க இவற்றையெல்லாம் மூடி மறைத்து சந்தைப் பொருளாதாரத்தின் ஊடாக அவற்றை சமன் செய்து விடலாம் என நம்ப வைத்து கூத்துக்களை முன்நின்று நடாத்தும் கோமாளிகள், இவையெல்லாம் மலையகச் சமூகத்திற்கு அந்நியமான தொன்றல்ல.

இந்த வகையில் உலகமயமாதலும் நவீன முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் என்றுமில்லாதவாறு சுரண்டலின் தளத்தையும் விரிவுபடுத்தியிருக்கின்றன. இதன் பின்னணியில் முனைப்புற்றிருக்கின்ற பின் நவீனத்துவம், அமைப்பியலியம், இருத்தலியம் முதலிய கோட்பாடுகள் உலகமயத்தை நியாயப்படுத்தி அதற்குச் சாதகமான கோட்பாட்டுத் தளத்தை நிலை நிறுத்தி வருகின்றன. குறிப்பாக, இருத்தலியக் கோட்பாட்டைத் தமிழில் முன் வைத்தவர்கள் பொரும்பாலும் இயற்பண்பு வாதத்தையே இலக்கியத்தில் நிலை நிறுத்த முயன்றனர். வரலாற்று அடிப்படையில் இயற்பண்புவாதம் யதார்த்த வாதத்திற்கு முற்பட்டது என்ற போதிலும் இன்றைய உலகமயமாதல் சூழலில் அதன் தேவை, சுரண்டும் வர்க்கத்தின் நலனையொட்டி அக்கோட்பாடு மறுகண்டு பிடிப்புச் செய்யப்படுகின்றது.

சமுதாயத்தில் கீழ்த்தட்டிலிருக்கும் மாந்தரைச் சித்திரிக்கும் எழுத்துக்கள் யாவும் 'யாதார்த்தம்', 'முற்போக்கு' என்ற அடைகளைப் பெற்றாலும் கூர்ந்து நோக்கின் அவை யாவும் அத்தகைய பண்புகளைப் பெற்றிருக்காது என்பதை நாம் அறியலாம். யதார்த்தவாதம், இயற்பண்பு வாதம் என்பன பற்றிய தெளிவின்மையே இத்தகைய குழப்பங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. சில நேரங்களில் இவ்விரண்டு கோட்பாடுகளையும் ஒன்றெனக் கருதி மயங்குகின்ற நிலையும் காணப்படுகின்றது. இயற்பண்புவாதம் என்பது உள்ளதை உள்ளவாறே எடுத்துக்காட்டும் கோட்பாடாகும். இது புறச்சூழலை விட அகமன உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது. நம்பிக்கை வரட்சி, முடிவற்ற சோகம் என்பன இயற்பண்புவாதத்தின் அடிப்படைகளாகும். இதன் காரணமாக இயற்பண்பு வாதம் தோன்றிய காலம் முதலாகப் புறவுலகினின்றும் வரலாற்று உணர்விலிருந்தும் அந்நியப்பட்டே வந்துள்ளது.

இதற்கு மாறாக யதார்த்தவாதம், நிகழ்வுகளின் காரணத்தையும் அதற்குரிய வரலாற்றுப் பின்புலத்தையும் சித்திரிக்கின்றது. வகைமாதிரியான சூழலில் வகைமாதிரியான பாத்திரங்களைப் படைக்கின்றது. மனித நேயம், மனித துயரம், அனுதாபம், மனித விடுதலை போன்ற

அம்சங்கள் யதார்த்தவாதத்தால் வெளிக் கொணரப்படுகின்றது. பாத்திரப் படைப்பு களின் பொதுத்தன்மையும் தனித் தன்மை யும் படைப்பாக்கப்படுகின்றன. யதார்த்த வாதமானது சோகத்தை இசைத்தாலும் அவைகூடச் சமூக அசைவியக்கத்தை முன்னெடுப்பதாகவே அமைந்திருக்கின்றன.

யதார்த்தவாதத்தின் தர்க்க ரீதியான வளர்ச்சியே 'சோஷலிச யதார்த்தவாத மாகும்'. சோஷலிசத்தைத் தோற்றுவித்த நாடுகளிலேயே இக்கோட்பாடு தோன்றி யது. யதார்த்தவாதத்தில் வகைமாதிரியான பாத்திரப் படைப்புகள் வெளிக்கொணரப் பட்ட போதிலும் அவை படைப்பில் ஓரங் கட்டப்பட்ட நிலையிலே பாத்திரமாக்கப் பட்டுள்ளன. யதார்த்தவாதம் சமுதாயப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் சித்திரித்து நிற்க, சோஷலிச யதார்த்த வாதம் அவற்றினை வர்க்கப் போராட்டத் தின் அடிப்படையில் நோக்கி, அப்போராட் டத்தில் முகிழக்கூடிய பாத்திரங்களையே சித்திரிக்கின்றது. அந்த வகையில் சோஷ லிச யதார்த்தவாதம் என்பது சோஷலிச நாடுகளிலே தோன்றி வளரக் கூடியதாகும். இலங்கை போன்ற நாடுகளுக்கு அக்கோட் பாடு பொருத்தமற்றதாகக் காணப்பட்டது. தேசிய இலக்கியம், மண்வாசனை இலக் கியம் போன்ற கோட்பாடுகளே பொருத்த மானதாக அமைந்திருந்தன. இச்சந்தர்ப்பத் தில் மலையக இலக்கியத்தின் செல்நெறி என்ன? அதன் பயன்பாடு என்ன? போன்ற வினாக்கள் எழுவது இயல்பே.

'ஒவ்வொரு உண்மையான கலைப் படைப்பும், வாழ்க்கை பற்றிய ஒரு புதிய அனுபவத்தையும் உணர்வையும் நமக்குத் தருகின்றது. நாம் கண்ட, கேட்ட, அனுப வித்த வாழ்க்கையை நமக்குப் புதிய பரி மாணத்தில் காட்டுகின்றது. வாழ்க்கையின் உண்மைகளை நம்மை உணர்வுப்பூர்வ மாகக் காணச் செய்கிறது. வாழ்க்கையை முழுமையாக விளங்கிக் கொள்ள நமக்கு உதவுகிறது. இந்த வகையில், நமது அனு பவத்தையும் உணர்வையும் அறிவையும் அது கூர்மைப்படுத்துகிறது. நமது ஆளு மையில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க் கிறது. ஒரு நல்ல கலை, ஒரு ரசிகனிடம் இவ்வாறுதான் செயற்படுகிறது, இவ்வாறு அது அவனுக்குச் செயற்படுவதன் மூலம், அவனையும் செயற்படத் தூண்டுகிறது.' ( நு.்.மான் எம்.ஏ, 'மார்க்சியமும் இலக்கி யத் திறனாய்வும்', அன்னம் வெளியீடு, சென்னை, பக். 62-63). அந்த வகையில் சமூகம் பற்றிய அறிவும் அவை தோற்று விக்கும் வாழ்க்கைப் போக்குகளும் அதனை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற உருவமும் தான் ஒரு கலைப்படைப்பாக உருவாகின்றது. கலைப்படைப்பில் உள்ள டக்கம் உயிர் என்றால் அதன் உடல் அதன் வடிவமாகும். இவ்விரு அம்சங் களும் இசைவுபட்டே கலைப்படைப்பு தோற்றம் பெறுகின்றது. இதற்கு அப்பால் உள்ளடக்கத்தை மட்டுமோ அல்லது உருவத்தை மட்டுமோ முதன்மைப்படுத்தி வெளிவருகின்ற கலைப்படைப்புகள் தோற்றுப் போய் பின்வாங்குகின்றன.

இந்தப் பின்னணியில் நின்று சிவனு மனோஹரனின் கதைகளை நோக்குகின்ற போது அவர் தமது கதைகளில் சமூகம் சார்ந்த - ஆக்கபூர்வமான வளர்ச்சிக் கூறு களை எவ்வாறு கையாண்டுள்ளார்? அவ ரது புரிந்து கொள்ளலின் அடிப்படை யாது? போன்ற விடயங்கள் பற்றி நோக்க வேண்டியுள்ளது.

இச்சிறுகதையாசிரியர் தமது சிறு கதைகளினூடாகச் சமுதாயப் பிரச்சினை

களையும் ஓரளவிற்கு நோக்கியுள்ளார். அவற்றினைக் கோட்பாடாக விபரிக்காமல் பாத்திரப் படைப்புக்களின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளமை இத்தொகுப் பின் . தனிச்சிறப்புகளில் ஒன்றாகும்.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள கதை களில் மிக முக்கியமான கதையாக **'நிமிர்வு'** அமைந்துள்ளது. இன்றைய சூழ லில் இனவாதம் என்பது புதிய பரிணா மத்தை எட்டியுள்ளது. அதற்கு மத்தி யிலும் ஆங்காங்கே மனிதம் நிலை கொண்டிருப்பதனை யதார்த்தமாகச் சித் திரிக்கும் கதையிது. இந்தச் சிறுகதை யில் சிந்தனையும் உணர்ச்சியும் அள வாக உள்ளன. அதாவது வாசகனில் உணர்ச்சிகளைத் தூண்டும், பயன்படுத் தும் அம்சம் நிறைவாகவுள்ளது .

'பாப்பா புள்ள' என்ற கதை தொழி லுக்காக வெளிநாடு செல்லும் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றிக் கூறு கின்றது. சமூகம் பற்றிய அறிவும் அவை தோற்றுவிக்கும் உணர்ச்சிகளும் உள்ள டக்கமாகக் கொண்ட படைப்பாகக் காணப்படுகின்றமையினால் உள்ளடக்கத் திற்குப் பொருத்தமான வடிவம் அமைந்து சிறப்பாக அமைந்துள்ளது.

இச்சிறுகதையாசிரியரின் பெரும்பா லான கதைகளில் சோகவுணர்வு இழை யோடியிருப்பதைக் காணலாம். துன்ப இயற்கைக் கோட்பாடு பெரும்பாலான கதைகளுக்கு ஓர் ஒருமைப்பாட்டை அளித்திருக்கிறது. படர் (தா)மரை, கூட்டாஞ் சோறு, லயத்துக் குருவிகள், தவளைகள் உலகம் முதலிய கதை களில் சோக உணர்ச்சியே அடிநாதமாய் விளங்குகின்றது. சோக உணரச்சி இக் கதைகளில் முனைப்பாக இடம்பெறு வதன் காரணமாக இவற்றில் உளவியல் சார்பு சற்று மேம்பட்டுக் காணப்படு கின்றது. இன்னொரு விதத்தில் இவற்றில் வெளிப்பட்டுள்ள கதாபாத்திரங்கள் புற உலகிலும் பார்க்க வாழும் அக உலகை மட்டுமே சித்திரிப்பனவாக அமைந்துள்ள மையினால் சோர்வு வாதத்தையே பிரதி பலித்து நிற்கின்றன.

எடுத்துக்காட்டாக இத்தொகுப்பின் தலைப்பாக அமைந்துள்ள **'கோடாங்கி'** கதையை நோக்குகின்றபோது உழைப்பி லிருந்து அல்லற்படுகின்ற மலையகத் தொழிலாளர்களின் சமூகத்தின் கூட்டுச் செயற்பாடாகப் பிறந்த தங்களது கலை யையும் இசையையும் காலங் காலமாகப் போற்றிப் பாதுக்காத்தே வந்துள்ளனர். எழுத்திலக்கியம் அல்லது தங்களது கல்வியுரிமைகள் மறுக்கப்பட்டுக் கல்லாத வர்கள் என்ற அடையாளத்துடன் வாழ்ந்த அவர்கள் தங்களது கலையையும் இலக்கி யத்தையும் பாதுக்காத்தே வந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் போற்றிய இசைக் கருவிகளில் ஒன்றுதான் கோடங்கியாகும். அத்தகைய இசைக்கருவியும் அதனை வைத்திருக்கும் பூசாரியும் இக்கதையாசிரி யருக்கு இழிவாகவும் ஏமாற்று வித்தை யாகவுமே தென்படுகின்றது. நகர பெரும் கோயில்களில் கோடான கோடி பணத்தைக் கொள்ளையடித்துச் சமூகக் காவலர்களாகவும் சமாதான நீதவான் களாகவும் உலா வருவோர் இக்கதை யாசிரியரின் கண்ணுக்குப் புலப்படாமல் போனமை துரதிர்ஸ்டமான ஒன்றே. அவ்வாறே இவரது **ச(க்)தி கரகம** என்ற கதையில் கரகமாடும் பெண்ணின் துயர

மான வாழ்வு: அப்பெண்ணுக்கு எதிரான பாலியல் பலாத்காரம் வெளிக்கொணரப் படுகின்றது என்ற போதினும் மக்கள் அனைவரையும் காம வெறியர்களாகக் காட்ட முனைவது பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது. மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து அதன் ஆன்மாவாகவுள்ள சக்தி கரகம் சில நேரங்களில் இக்கதையாசிரியருக்குச் சதி கரகமாகத் தென்படுவதும் தற்செயல் நிகழ்வல்ல.

'மட்டத்துக்கத்தி' என்ற கதையின் அடிநாதமாக அமைவது மனித நேசிப் பாகும். நேயம் என்பது மனிதர்கள்பால் மட்டுமன்றி எம்மோடு தொடர்புள்ள கருவிகள், ஆயுதங்கள் மீதும் இரங்குதல் ஆகும். இன்றைய காலச்சூழலில், மட்டத் துக்கத்தி பற்றிய உணர்வு புதிய தலை முறையினரிடம் எந்தளவு செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றது என்பது கேள்வி யாகும். கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிலுனரான மலர் தமது நண்பியின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது பேத்டே கேக் வெட்டும் கத்தி கிடைக்காத நிலையில் 'அந்த மட்டத்துக்கத்தி எங்கடி' எனச் சக நண்பிகளிடம் கேட்க, அவள் அவமானத்திற்குட்படுவதுடன், அன்று முதல் மட்டத்துக்கத்தி மலர் என்றே அழைக்கப்படுகின்றாள். இது இன்றைய சூழலில் நடக்கக்கூடிய ஒன்றா? என்பது முதலாவது வினா. அப்படியே நடந்திருந் தாலும் கூட வகைமாதிரியான பாத்திரப் படைப்பாக அமையவில்லை.

'ஒரு அந்தப்புரத்தின் அந்தகாரம்' என்ற கதையில் சாதியத்தை விமர்சிக்க முற்படுகின்ற ஆசிரியர் பெண்ணை பால் கவர்ச்சியாகவும் காமக்கிழத்தியாகவும் காட்ட முனைவது ஓர் இலக்கியப் பழி வாங்கலாகவே படுகின்றது. இக்கதையில் மேகலா என்ற பெண்ணை அவள் மீது கொண்டுள்ள கவர்ச்சியில், காமத்தில் காதலிக்கின்ற விஸ்வா, அவள் வீட்டைச் சுற்றித் தெருநாய்கள் கொடுக்கின்ற தொல்லைகள் பற்றி வினவிய போது அதற்கு மேகலாவின் பதில் கதையில் இவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றது:

"மேகலா இந்த நாய்கள் கூட்டம் தேவைதானா? இதுகள கொண்டு நடத்த எடுக்கிற ரிஸ்க் அநாவசியமா படலையா?'' இருவர் மத்தியிலும் மௌனம்! அவளோ உடைக்கிறாள். "நோ விஸ்வா, பறபல்லாஸ் பத்தி உங் களுக்கு தெரியாது! எப்பவுமே இதுகள கொஞ்சம் தள்ளி வைக்கணும். அதிக மாக எடம் கொடுத்தா மடம் பிடிக்கும். இந்த நாய்கள் நம்மோட செக்கியுரிட்டிக்கு மட்டும் வச்சிக்கலாம். விஸ்வா நீங்கள் ஒன்ன தெளிவா புரிஞ்சிக்கணும். என் னோட பார்வையில் உயர்ரகமான நாய் களைவிட இந்த தெருநாய்கள் எப்பவுமே பெட்டராகத்தான் படும். ஏன் தெரியுமா? நம்மோடு ஐக்கியப்படும் உயர்ரக நாய் களைவிட ஒருபடி தள்ளி நிற்கும் இந்த பறபல்லாவுக்குத்தான் எசமானியின் உயர்வு புரியும்'' என்று உதிர்க்கும் புன்னகை அவனுள் ஒருவிதமான அதிர்வை ஏற்படுத்தியது.

காம வேட்டையிலும் சதைப் பசி யினாலும் அடிமையாகியுள்ள பெண் ணாகச் சித்திரிக்கப்படுகின்ற மேகலாவின் சாதிய உணர்வு காரணமாக அவள் மீது வெறுப்புக் கொண்ட விஸ்வா அவள்

பலருடன் பாலுறவு கொள்வதையிட்டு வெறுப்படைந்து அந்நியப்படுகின்றான். கதையில் வில்லியாக்கப்பட்ட மேகலா 'ரத்தக் கண்ணீர்' படத்தில் வரும் காந்தா வாகச் சித்திரிக்கப்படுகிறாள். ச(க்)தி கரகம் கதையில் வருகின்ற கரகாட்டக் காரி பஞ்சா தோட்டத்து இளைஞர்களால் பாலியல் சேட்டைகளுக்குட்படுகின்ற போது அவளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் காட்டப்படுகின்றதா? அல் லது அவள் பால் கவர்ச்சியாகக் காட்டப் படுகிறாளா? என்பதும் சுவாரசியமான வினாக்கள்தான். நந்தினி சேவியர் தமது நேர்காணலொன்றில் குறிப்பிடுகின்ற விடயத்தினை இங்கொருமுறை குறித்துக் காட்டுவது அவசியமானதொன்றாகின்றது.

ஆபிரிக்க எழுத்தாளர் ஒருவர் வெள்ளையர்களின் மீது கொண்ட வெறுப் புணர்வின் காரணமாக வெள்ளைப் பெண் கள் அனைவரையுமே சோரம் போகின்ற வர்களாகக் காட்டியுள்ளார். அவ்வாறே ஈழத்து எழுத்தாளர்களில் ஒருவராகிய கே.டானியலின் படைப்புகளிலும் மேல் சாதி ஆடவர்கள் தாழ்த்தப்பட்ட பெண் களை வைப்பாக வைத்திருந்ததற்கு மாறாகப் பழிவாங்கலாக உயர்சாதிப் பெண்கள் அனைவருமே நெறிபிறழ்ந்தவர் களாக, சோரம் போகின்றவர்களாகக் காட்டியிருக்கின்றார். சமுதாய மாற்றத்தை விரும்பும் புரட்சிகரமான எழுத்தாளனுக்கு உகந்த பண்பல்ல. அது அப்போராட்டங் களை பலவீனப்படுத்துவதாகவும் அமையும்.

சமீப காலமாக இளைஞர்களிடையே குறிப்பாக மலையகத்தில் வாழும் எழுத் தாளர்களிடையே பிரச்சினைகளை இன் னும் நுணுக்கமாக ஆராய்ந்து பரிகாரம் கூறும் இலக்கிய படைப்புக்கள் வெளிவர வேண்டும் எனும் கருத்து வேகம் பெற்று வருகின்றது. இதற்குத் தர்க்க ரீதியிலான காரணங்கள் இல்லாமலும் இல்லை. மனி தாபிமான முறையில் பிரச்சினைகளைச் சித்திரிப்பது என்ற கருத்து கால வழக்க மான பின் அடுத்து என்ன? எனும் வினா எழுவது இயல்பானதே. அதன் தர்க்க ரீதியான வளர்ச்சியாக மரபுமீறல் - எதிர் மரபுக் குரல் எனும் சிந்தனைகள் தோன்றுவது இயல்பு. வாழ்வின் யதார்த் தத்தை உணர்ந்து அதனுள் இருண்ட பகுதிகளாகவும் கண்ணுக்குப் புலனாகா மலும் காணப்படும் கூறுகளையும் வெளிக் கொணர்வதே படைப்பாளியொருவரின் ஆளுமையாகும். கலையென்பது சமூக வாழ்வை உணர்ந்து அதன் புதிய போக்குகளை உணர்ந்து அதனைப் பொதுமைப்படுத்தும் திறனே ஆகும்.

இவ்வகையில் நோக்குகின்ற போது, போராடிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களின் உள்ளத்தை உணர்ந்து அவர் களின் துன்ப துயரங்களை வெவ்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் எதிர்த்துக் குரல் எழுப்பி வந்துள்ள எதிர்மரபு ஒன்று உலகின் பல மொழிகளிலும் இருப்பதை யும் போல மலையகப் பாரம்பரியத்திலும் அத்தகைய மரபு ஒன்று வளர்ந்து வந் துள்ளதை அவதானிக்கலாம். எதிர் - மரபு என்று நான் கூறிப்பிடுவது மரபை எதிர்க்கும் ஒன்றையல்ல: மாறாக எதிர்த்து இயங்கும் மரபு ஒன்றினையே யாகும். இருநூற்றாண்டு காலமாக அடக்கியொடுக்கப்பட்டு அடிமை நிலைக் குத் தள்ளப்பட்டிருந்த மலையகத் தொழி

லாளர்கள் அவ்வப்போது செய்த கலகங்கள், எழுச்சிகள் என்பவற்றுடன் இவ்வெதிர்ப்புணர்வை இணைக்கத் தவறி விட்டதைத் தோழமையுடன் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். சிவனு மனோ ஹரன் போன்ற இளம் படைப்பாளிகள் சமுதாய விடயங்களைச் சற்று ஆழமாக நுண்ணயத்துடன் நோக்குவார்களாயின் மலையக மக்களின் வாழ்வை அதன் சமுதாயத் தளத்திலிருந்து படைப்பாக்கித் தர முடியும். அவை வெளிவெளியாக அரசியல் சார்ந்த எழுத்தாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்தல்ல. ஆனால் அத்தகைய படைப்புகள் மூல மாக அவர் இலக்கு வைக்கும் வாசகர் களிடம் வலுவான கேள்விகளை எழுப்ப முடியும்.

சிவனு மனோஹரன் கதைகளில் மிக முக்கியமாக சிலாகித்துப் பேசப்படு கின்ற அம்சம் மலையக மக்களின் மண் மணம் கமழும் பேச்சு வழக்கைத் தமது படைப்புகளில் கையாண்டமையாகும். அவரது எல்லாக் கதைகளிலுமே இப் பண்பு முனைப்புற்றிருக்கின்றது. 'நகரை உருவாக்குவது சுவர்கள் அல்ல, மனிதர் கள்' என்பார் டெமாதனிஸ். அவ்வாறு மொழியை உருவாக்குவதும் மனிதர் களே. ஒரே மொழியைப் பேசும் மக்கள் சமுதாயத்தினர் கூட தமது பிரதேச வாழ்க்கை, தொழில், வர்க்கநிலை போன்றவற்றுக்கேற்ப மொழியின் சொல் வழக்கையும், நடையையும் கொண்டிருப் பது தவிர்க்க முடியாத சமூக நியதி யாகும். இச்சிறுகதையாசிரியர் தமது படைப்பில் இத்தகைய போக்கை அனு சரித்திருப்பினும் சில இடங்களில் தொழி லாளர்களை எவ்வாறு அறியாமை மிக்க வர்களாகவும், நாகரிகமற்றவர்களாகவும் கருதுகின்றாரோ அவ்வாறே அவர்கள் பேசும் மொழியையும் இழிவாகப் பார்க் கின்ற மனநிலையும் இவரிடம் காணப்படு கின்றது. அவரது 'ச(க்)தி கரகம்' என்ற கதையில் ஒலிபெருக்கியின் அறிவித்த லொன்று பற்றிக் கதையாசிரியரின் உணர் வுகள் இவ்வாறு பிரவாகம் கொண்டிருக் கின்றது:

"இன்னும் சற்று நேரத்தில் அம்மா ஆலயத்தில் இருந்து புறப்பட்டு விடுவாள். பக்த அடியார்களை ஆலயத்திற்கு அழைக்கின்றோம்" என்ற செந்தமிழைப் புணரத் துடிக்கும் கொச்சைத் தமிழ் கலந்து அலறிக் கொண்டிருந்தது.

மலையகத்தில் இத்தகைய திரு விழாக்களின் போதோ அல்லது ஏனைய சமய நிகழ்வுகளின் போதோ சாதாரண தோட்டத் தொழிலாளர்கள் ஒலிபெருக்கி யில் கதைக்கின்ற போது அவர்களின் பேச்சுத் தமிழை உபயோகித்தாலும் அவை எல்லாவற்றையும் அநாகரிகமான தாகவோ, உச்சரிக்கத் தகாத விடயமா கவோ அவர்கள் உபயோகிப்பதில்லை என்பதை அவ்வாழ்க்கையை நுண்ணிய மாக நோக்குபர்களுக்குப் புரியும். இந்த மரபினை மலையக எழுத்தாளர்கள் சிறப் பாகத் தமது படைப்பில் வெளிக்கொணர்ந் துள்ள அதேசமயம் அதில் வெற்றியும் பெற்றுள்ளனர் என்றே கூறவேண்டும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றியும் சற்று அழுத்திக் கூற வேண்டி யுள்ளது. அதாவது இலக்கியத்தில் உள் ளடக்கம் எவ்வாறு கால, தேச வர்த்த மானங்களுக்குக் கட்டுப்பட்டும் அதனை மீறியும் இயங்குகின்றதோ அவ்வாறே

அதன் வடிவமும் அத்தகைய தாக்கங்களுக்கு உட்பட்டே இயங்குகின்றது என்பதை இலக்கிய வரலாறு எண்பித்திருக்கின்றது. உள்ளடக்க ரீதியாக மட்டுமன்று வாசிக்கின்ற முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. முற்போக்கு இலக்கியத்திற்கும் அழகியல் பிரச்சனைகள் உண்டு. 'ஒவ்வொரு காலமும் புதிய சிந்தனைகளை மட்டுமல்ல, புதிய கலை உருவங்களையும் தோற்றுவிக்கின்றது' என ரஷிய தத்தவ ஆசிரியர் பெலின்ஸ்கி குறிப்பிடுகின்றார். எனவே காலத்திற்கு ஏற்ற வடிவத்தை மக்களின் நலனிலிருந்து அந்நியமுறாமல் படைப்பாக்கித் தர வேண்டியது முற்போக்கு - மார்க்சியப் படைப்பாளியின் கடமையாகும். இன்றைய சிறுகதை வளர்ச்சியில் முக்கிய கணிப்பைப் பெற்றுள்ள ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகள் இந்தச் சீரியப் பணியினை செய்திருக்கின்றது. இதற்கு **'கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக் கூடும்'** என்ற கதை தக்க எடுத்துக்காட்டாகும். இந்திய அரசியல் பின்புலத்தில் நின்று கொண்டு மெஜிக்கல் ரியலிச பாணியில் எழுதப்பட்ட கதையாகும். இந்திய சமூகத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது. இக்கதை சொல்லும் பாணியில் பவனி வருகின்ற பாத்திரங்கள் யாவும் இன்றைய விடுதலையை நாடும் அதே நிலைக்குரிய பாத்திரங்களை மறுவாசிப்புச் செய்ய ஏதுவாக உள்ள புனைகதை ஏற்பும் சமூக மாற்றத்திற்கான உந்தலும் முற்போக்கு இலக்கியத்திற்கு மாத்திரமன்று முழுத் தமிழ் இலக்கியத்திற்கும் வழங்கிய மகத்தான பங்களிப்பாக அமைந்துள்ளது.

சிவனு மனோஹரனின் சிறுகதைகளை வாசிக்கின்றபோது அவர் வடிவ அமைப்பில்-கதை சொல்லுகின்ற முறையில் இத்தகைய உத்திகளைக் கையாண்டிருக்கலாமே என்று எனக்குத் தோன்றுவதுண்டு. எனினும் அவ்வகையான புதிய திசை வழியைக் கைக்கொள்ளாது பாரம்பரிய முறையில் தமது கதைகளைப் படைத்திருப்பது அவரது கதை சொல்லும் பாணியின் ஓர் அம்சம் என்று நாம் அமைதி காணலாம். அவ்வாறே இவரது சில சிறுகதைகளில் சிறுகதைக்கான வடிவம் இயல்பாக வார்க்கப்படாத நிலையும் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக இத்தொகுப்பில் அடங்கியுள்ள **'இந்திரலோகத்தில் தோட்டக்காட்டான்'** என்ற கதையில் வருகின்ற சம்பவம், நிகழ்வுகள், உணர்ச்சிகள் கலவையாகக் காணப்படுகின்றமையினால் சிறுகதைக்குரிய பண்பினை இழந்து நிற்கின்றது. கதைப் பின்னல், கதையின் முடிவு தொய்வை ஏற்படுத்துகின்றது. கதையின் நடுவில் இங்கே கதை முடிந்திருக்கலாமே என்ற நினைவு வாசகனுக்கு ஏற்படுகின்றது. இசைவு, கதைப்பின்னல் என்பன கதையின் அடிப்படைக் கூறுகளாகும்.

இவற்றுக்கு அப்பால் சிவனு மனோஹரனிடம் படைப்பாளுமை உள்ளது. அவர் தமது சமூகம் சார்ந்த அரசியல் சமூக உணர்வுகளை மேம்படுத்திக் கொள்கின்ற போது ஆற்றல் வாய்ந்த படைப்பாளராகத் திகழ்வார். எமது எதிர்பார்ப்பு ஈழத்து இலக்கிய அரங்கில் சான்றோனாக அவர் வளர வேண்டும் என்பதாகும்.

வெளியீடு: டிசைன் லெப், கொழும்பு, விலை: ரூ. 250 (இலங்கை)

# *Meals Ready* எனும் குறுந்திரைப்படமும், 'நத்தார் தாத்தா' எனும் சிறுகதையும்

- மேமன்கவி

கலை என்பது ஏதோ ஒரு வகையான தொழில் நுட்பத்திலேயே தங்கி இருக்கிறது. ஆனால் இயந்திர யுகத்தின் வருகைக்குப் பின், அறிவியல் தொழில் நுட்பத்தின் ஊடாகத் தோன்றிய கலை உருவங்கள், கலை படைப்புகளுக்குரிய அந்தஸ்தினைப் பெற்று கொள்வதிலே பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தன. அன்று தோன்றிய சினிமா முதற்கொண்டு, இன்று கணனியில் உருவாக்கும் இசை வரையிலான கலைகளை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

இதில் சினிமாவைப் பொறுத்தவரை அது தோன்றிய காலந் தொடக்கம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு கலை வடிவமாக வெளிப்பட்டது. அசையாத் தன்மை கொண்டிருந்த ஓவியத்தையும், புகைப்படத்தையும் அசைய வைத்ததன் மூலம் சினிமா, கலை வரலாற்றில் ஒரு பெரும் பாய்ச்சல் எனலாம். அதேவேளை அக்கலையின் வெளிப்பாடு என்பது அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்தது என்பதனால், அதன் இயந்திரத் தனத்துக்கு அப்பால், ஏலவே கையாளப்பட்டுக் கொண்டிருந்த கலை உருவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தை விட அதிக அளவான தாக்கத்தைச் சினிமா ஏற்படுத்துவதற்கு, அதன் கூறுகளாகப் பயன்படுத்தப்படும் கலை உருவங்களில் (இசை, நடிப்பு என்ற மாதிரியான) குறிப்பிட்ட ஏதேனும் கலை உருவம்தான் காரணம் என்று சொல்ல முடியாது. பல்வேறு கலை வடிவங்களின் கூட்டில் உருவாக்கும் சினிமா கலையின் Visual தன்மைதான் அத்தாக்கத்திற்கு காரணமாகிறது.




சினிமாவின் ஆரம்பக் கட்டமான பேசாப் படமாக இருந்த காலகட்டத்திலும் சரி, பேசும் படமாக மாறிய காலகட்டதிலும் சரி, அது ஏற்படுத்திய தாக்கத்தில் மாற்றம் இருக்கவில்லை. பேசா பட யுகத்தில் வெளிவந்த சார்லி சாப்ளின் படங்கள் முதற்கொண்டு, இன்று பேசும் பட யுகத்தில் சார்லியின் படங்கள் வெளிப்படுத்திய தாக்கபூர்வமான செய்திகளை சொல்லா விட்டாலும் நகைச்சுவை உணர்வை ஏற்படுத்தும் **Mr. Bean** படங்களையும் தமிழில் கமல் நடித்த வசனமே இல்லாமலே வெளிவந்து நகைச்சுவை உணர்வை ஏற்படுத்திய பேசும் படம்

என்ற திரைப்படம் வரை உதாரணங்களாகச் சொல்லலாம். அத்தோடு குறைந்த நிலையில் வசனங்கள் இடம்பெற்ற அதேவேளை நடிப்பு, படத்தொகுப்பு ஆகிய மொழியைத் தவிர்த்த சினிமாவின் கூறுகளின் வண்ணத்தால் உருவான கவனத்திற்குரிய பல படங்களையும் உதாரணங்களாக எடுத்துக் காட்டலாம்.

இதை நாம் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம் ஒரு சினிமா படைப்பு தாக்கபூர்வமான படைப்பாக வெளிப்படுவதற்கு (அதன் உருவாக்கத்திற்குப் பின்னணியாக ஒரு மொழி பயன்படுதல் என்பது வேறு விடயம். அதாவது திரைக்கதை என்ற மாதிரியான வடிவங்களுக்கு) ஒரு மொழியின் தேவை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதை எடுத்துக் காட்டத்தான்.



அந்த வகையில் சமீபத்தில் காணக் கிடைத்த **Nithuna Nevil Dinesh** என்ற மலையாள இளம் பெண்மணி இயக்கிய Meals Ready என்ற குறும்படம் ஒரு சினிமாப் படைப்புக்கு ஒரு மொழியின் அவசியம் இரண்டாம் பட்சமானது என்பதை எடுத்துக் காட்டியது. இப்படம் இளம் இயக்குநர் ஒருவரின் படம் என்பதை விட ஒரு தேர்ந்த இயக்குநரின் கைவண்ணத்தில் உருவான குறுந்திரைப்படமாக வெளிப்படுகிறது. இக்குறுந்திரைப்படம் கேரளாவில் நடந்தேறிய international short-film festival in Kochi, Script 2012 விழாவில் சிறந்த குறுந்திரைப்படத்திற்கான விருதினை அவருக்குப் பெற்று தந்தது. 12 நிமிடங்கள் அளவில் ஓடும் இக்குறுந்திரைப் படம் வசனம் என்பதின் தேவையே இல்லாத நிலையில் அது சொல்ல முயற்சித்த விடயத்தை மிக ஆழமாக எம்மில் பதித்துச் செல்கிறது.

இதைத்தான் நாம் மேலே குறிப்பிட்ட வசனமே இல்லாமல் பெரும் தாக்கத்தை சினிமா எனும் கலையால் ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபிக்கிறது. இதனையே இப்படத்தை பற்றிய ஒரு பேட்டியின் பொழுது Nithuna Nevil Dinesh பின்வருமாறு கூறியுள்ளார்.

"இப்படத்தில் பார்வையாளர்களுக்குச் சொல்ல நினைக்கும் செய்தியினை நான் முழு அளவில் Visualsஐயே பயன்படுத்தி இருக்கிறேன். அதன் மூலம் அப்படத்தில் நான் சொல்ல நினைக்கும் செய்தி வசனத்தைப் பயன் படுத்திச் சொல்வதை விட அதிக அளவான தாக்கத்துடன் பார்வையாளர்களுக்குப் போய்ச் சேரும்."

இந்திய பெரும் நகரம் ஒன்றையொட்டி விமான நிலையத்தை நோக்கிச் சொல்லும் கனரக மற்றும் சொகுசு வாகனங்கள் போகும் நெடுஞ்சாலையின் ஓரத்தில், பெட்டி கடை வடிவத்திலான ஒரு ஹோட்டல். அதில் பிற்பகல் 12.00 மணி அளவில் சாப்பாடு தயாரகி விட்டது என்பதை அறிவிக்கும் முகமாக Meals Ready என்ற ஆங்கில வாசகம் கொண்ட அறிவிப்புப் பலகையுடன் ஒரு முதியவர் அந்த ஹோட்டல் அமைந்திருக்கும் வீதியின் கரையில் நிறுத்தப் படுகிறார். அதுதான் அந்த முதியவரின்

அன்றாடப் பணி. மெலிந்த உருவம் கொண்ட அந்த முதியவர் இப்பொழுது உச்சி வெயிலில் McDonalds - KFC போன்ற உலக உணவகங்களின் சேவை யாளர்கள் அணியும் பருத்த துணியி லான அவரது உடலுக்குப் பொருந்தாத உடையுடன் அந்த அறிவிப்பு பலகை யுடன் நிறுத்தப்படுகிறார்.

கால்களில் செருப்பு இல்லை. நெடுஞ்சாலை தார் பாதையின் உஷ்ணம். அவரது பாதங்கள் எரிகிறது. வற்றிக் கொண்டிருக்கும் தொண்டை யுடன் வியர்வை வழியும் உடலுடன் பல மணியத்தியாலங்கள் அப்படியே நிற்க வேண்டிய நிர்பந்தம் அந்த முதிய வருக்கு. கொஞ்சம் கவனம் பிசகினாலும் முறைக்கும் குட்டிக் ஹோட்டலின் கொழுத்த முதலாளி.

முதியவர் ஏந்தி நிற்கும் அந்த அறி விப்பு பலகை பார்த்து சாப்பாட்டுக்காக ஒரு வாகனம் நிறுத்தப்படுகிறது. அதிலி ருந்து நடக்க முடியாத ஒரு முதியவர் ஒருவரை மிக பவித்தரமாக அவரது குடுத்தினர் ஊன்று கோலுடன் சாப்பிடு வதற்கு இறக்குகிறார்கள். இப்பொழுது Camera செருப்பு இல்லாமல் தரையின் சூடு தாங்காது கால்களை மாற்றிக் கொள்ளும் அந்த முதியவரைக் காட்டு கிறது.

அடுத்தாக, நான்கு இளைஞர்கள் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சாப்பாட்டுக்காக இறங்குகிறார்கள். அவர்கள் சாப்பிட்டு முடிய, தண்ணீர் போத்தல்களில் (Mineral Water Bottle) நீரை ஒருவர் மீது ஒருவர் வீசி விளை யாடிக் கொண்டும், தலையில் ஊற்றிக் கொள்வதுமாக அங்கிருந்து புறப்பட, இறுதியாகக் கொஞ்சம் தண்ணீர் மிஞ் சிய போத்தலை அந்த முதியவர் காலடி யில் வீசிச் செல்ல, அப்போத்தலி லிருந்து சிந்தும் நீர் அந்த முதியவரின் பாதங்களைக் குளிர வைத்தாலும், வற்றிப் போன தொண்டையை ஈரமாக்க அந்தப் போத்தலை முதியவர் பொறுக்கி எடுத்து அதில் மிஞ்சி இருக்கும் இரு துளி நீரால் தொண்டையை ஈரமாக்கிக் கொள்கிறார். அந்த இளைஞர்கள் கூச்ச லிட்டவாறே (அக்கூச்சல் ஆங்கிலத்தில் ஒலிக்கிறது) செல்கின்றனர்.

இறுதியாக ஒரு வாகனம் நிறுத்தப் படுகிறது. அதிலிருந்து ஒரு சிறுமியுடன் ஒரு தம்பதிகள் சாப்பிட இறங்குகிறார் கள். பொருந்தாத உடையுடன் கையில் அறிப்பு பலகையுடன் நிற்கும் அந்த முதியவர், அச்சிறுமிக்கு வினோதமாகத் தெரிகிறது. அவரைப் பார்த்து ரசித்துச் சிரிக்கிறது. சாப்பிட்டுத் திரும்பும் பொழுது அந்தக் குழந்தை "தாத்தா" என்று அழைத்து, அந்த முதியவருக்குச் சாக்லெட் ஒன்றினை கொடுத்து டாட்டா காட்டிச் செல்கிறது. அந்த சிறுமி கொடுத்துச் சென்ற சாக்லெட்டைப் பத்திரமாக கையில் பொத்திப் பத்திர மாக வைத்துக் கொள்கிறார்.

இப்பொழுது நேரம் நான்கு மணியை நெருங்கிக் கொண்டிருக்கப் பெரியவரின் பணி நேரம் முடிக்கிறது. அந்த கடை முதலாளியினால் அவரது அப்பணிக்குச் சம்பளமாக மிஞ்சிய சோறு பொட்டலமாகக் கொடுக்கப்படு கிறது. முதியவர் உடைகளை மாற்றி அந்தப் பொட்டலத்துடன் தனது வீட்டுக் குத் திரும்பி தனது வயது முதிர்ந்த மனைவியுடன் அவர்களின் செல்லப்

பிராணியான பூனை சகிதம் அந்த உணவை பகல் சாப்பாடாகச் சாப்பிடு கிறார்கள். சாப்பிட்டு முடிந்தவுடன் தனது மனைவிக்கு ஹோட்டல் வாசலில் அந் தச் சிறுமி வழங்கிச் சென்ற சாக் லெட்டை அன்புடன் நீட்டுகிறார். அவர் மனைவியோ அதைத் தன் பொக்கை வாயினால் இரண்டு துண்டாக்கி சாக் லெட்டின் ஒரு துண்டை அந்த முதிய வருக்கு அன்பு கலந்த பார்வையுடன் ஊட்டுகிறாள். அத்தோடு அந்தக் குறுந் திரைப்படம் நிறைவு பெறுகின்றது.

சிறந்த படத்தொகுப்பு. தேர்ந்த இசை எந்தவொரு வசனமும் பேசாது, முழுக்கத் தனது உடல் மொழியினால் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்திய முதியவராக நடித்த அந்த நடிகரின் நடிப்பு உச்சம் எனலாம். அதேவேளை ஒரே ஒரு காட்சியில் வந்தாலும் முதிய வரின் மனைவியாக வரும் அந்த முதிய பெண்மணி முகபாவம் மூலம் மிக யதார்த்தமாகவும் சிறப்பாகவும் தன் பாத் திரத்தை வெளிப்படுத்தி இருப்பது சிறப் பாக இருக்கிறது. மேலும் கடை முத லாளி மற்றும் சாப்பிட வரும் வாடிக்கை யாளர்கள் அவரவர் பாத்திரத்தை மிக யதார்த்தமாக நடிப்பின் மூலம் வெளிப் படுத்திப் போகிறார்கள்.

அந்த முதியவரின் நடிப்பை மிகச் சரியாக வெளிப்படுத்திய, அதேவேளை அந்த படத்திற்கான கதை நடக்கும் சூழலை மிக உணர்வுப்பூர்வமாக நாம் உள்வாங்கும் வகையில் Camera மிகச் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. அந்த முதியவரின் உடல் கடும் வெயிலில் படும் அவஸ்தையை, வலியைக் காட்டிய Cameraவின் கோணங்கள் மூலம் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டப் படுகிறது. அந்த வகையில் அப்படத்தின் Camera man ஆகப் பணியாற்றி இருக் கும் Reju Kodunganoo பாராட்டுக்குரிவர்.

இக்குறுந்திரைப்படம் பார்த்துப் பல நாட்கள் ஆகி இருந்த சூழலில் இப் படத்தை மீண்டும் தீவிரமாக நினைவுப் படுத்தலுக்கு மல்லிகை 47ஆம் ஆண்டு மலரில் வெளிவந்த, திக்குவல்லை கமால் மொழிபெயர்த்த சுனில் கே.சாந்த வின் 'நத்தார் தாத்தா' எனும் சிறுகதை காரணமாக அமைந்தது. அதற்குக் கார ணம் Meals Readyயும் நத்தார் தாத்தா வும் பல இடங்களில் ஒன்றிணைகின்ற ஓர் அனுபவத்தை ஏற்படுத்துகிறது.

நத்தார் தாத்தா சிறுகதையின் கதை இதுதான். மனைவிக்கும் தன் பிள்ளை களுக்கும் நல்ல ருசியான சாப்பாடும், கிறிஸ்மஸ் தினத்திற்காக விளையாட்டுப் பொருட்கள் வாங்குவற்கும் வழி இல்லா மல், ஒரு வேலை தேடி அலைகிறான் பேதிரிக் எனும் அந்த மனிதன். மேலைத் தேய சந்தைக் கலாசாரத்தின் தாக்கமாக மூன்றாம் உலக நாடுகளில் பெருகி வரும் Super Market - Food City போன்ற மாதிரியான ஒரு விற்பனை நிலையம் அது. அந்த நிலையத்தில் அங்கு பணி புரியும் முகாமையாளரால் அவனுக்கு ஒரு வேலை கிடைக்கிறது. அந்த வேலையோ இவனுக்கு முன்பின் பழக்கம் இல்லாதது. ஆனால் அவ் வேலை செய்து முடித்து, வீடு திரும்பும் பொழுது கிடைக்கப் போகும் சம்பளப் பணத்திற்காக அந்த வேலையை ஏற்றுக் கொள்கிறான். அந்தப் பிரமாண்டமான விற்பனை நிலைய வாசலில் நத்தார் தாத்தா வேஷமிட்டு, வாடிக்கையாளர்

களை விற்பனை நிலையதிற்குள் அனுப்ப வேண்டும். அதுதான் அவனுக்கு கொடுக்கப்பட்ட பணி. முதலில் சற்றுத் தயக்கம் காட்டினாலும், மாலையில் கிடைக்கப்படும் கூலி, மனைவி மக்கள் முகங்கள் நினவுக்கு வர, அப்பணியை ஏற்றுக்கொள்கிறான்.

கிடைக்கப் போகும் சம்பளத்திற்குத் தன் உடலுக்குப் பொருந்தாத நத்தார் தாத்தா உடை அணிந்து, கால்களுக்குப் பொருந்தாத சப்பாத்துக்கள் தரும் வலியை, காயங்களைப் பொறுத்துக் கொண்டு, கொழுத்தும் வெயிலில் பெரும் விற்பனை நிலைய வாசலில் பல மணத்தியாலங்களாக நின்று சம்பளமாகக் கொஞ்சம் பணமும் சில விளையாட்டுப் பொருட்களையும் கூலியாகப் பெற்றுக் கொள்கிறான் அவன். பொருந்தாத உடையுடன் கூடிய, கால்களுக்கு வலி தரும் சப்பாத்துக்கள், கடும்வெயில் தாகம், இப்படியாக அக்கதையின் பல நிகழ்வுகள் நமக்கு உடனடியாக Meals Ready எனும் அக்குறுந்திரைப்படத்தை உடனடியாக நினைவுப்படுத்தி விடுகிறது.

Meals Ready முதியவரின் நோக்கமும் நத்தார் தாத்தா சிறுகதை நாயகனின் நோக்கமும் ஒரே மாதிரியாக இருப்பினும், அதாவது தம் மனைவி - பிள்ளைகள் வயிராறப் சாப்பிடுவதைக் காண, சகல வலிகளையும் பொறுத்துக் கொள்வதாகும். ஆனால் நத்தார் தாத்தாவில் நாயகன் தான் பெற்ற வலிகளையும் வேதனைகளையும் மனைவியுடன் பகிர்ந்து கொண்டு வலிக்கான ஒத்தடத்தை பெற, Meals Ready தான் பெற்ற வலியை வேதனையை எந்த வழியிலும் வெளிப்படுத்தாது சிரித்த முகத்துடன் தன் மனைவியுடன் உணவு அருந்துவதாக அமைகிறது.

ஆனால் Meals Ready குறுந்திரைப் படத்தின் முடிவும், நத்தார் தாத்தர் கதையின் முடிவும் ஒரே மாதிரியான உணர்வை ஏற்படுத்தினாலும் Meals Ready படத்தின் முடிவில் தரும் உணர்வலை அளவான உணர்வலையை ஏற்படுத்த வேண்டும் என்பது நத்தார் தாத்தா கதை தந்த சுனில்.கே. சாந்தவின் நோக்கமாக இருந்தாலும், ஏனோ அது வீச்சாக அமையவில்லை. அதற்குக் காரணம், அக்கதையின் பிற்பகுதி அந்த வீச்சை (அதாவது நத்தார் தாத்தாவின் நாயகன் தான் கண்ட வலியை, வேதனையை விபரிப்பதும், அதற்கான ஒத்தடத்தை பெற்று கொள்ளுவதுமாக) குறைத்து விடுகிறது. இது வாசகனுக்கு தெரிந்த சேதி மீண்டும் தெரிவிப்பதாக இருக்கிறது.

அதேவேளை Meals Ready படத்தில் கடும் தொண்டை வற்றிய நிலையில் உணவு தயார் என்ற அறிவிப்பு பலகையுடன் நிற்கும் முதியவருக்கு தண்ணீர் அருந்தக் கூடச் சந்தர்ப்பம் வழங்காத முதலாளியிலிருந்து, 'நத்தார் தாத்தா' கதையில் நத்தார் தாத்தா வேடமிட்டுச் சிரமத்துடன் நிற்கும் அவனை சிறுநீர் கழிக்க அனுமதிக்கும் அவனை கண்காணிக்க நியமிக்கபட்டிருக்கும் சக சேவகன் வேறுபட்டு நிற்கிறான். இதற்கான காரணம் ரொம்பவும் சாதாரணமானது. Meals Ready அந்த முதியவரைக் கண்காணிப்பது முதலாளியாக இருக்க, 'நத்தார் தாத்தா'விலோ சக சேவகனாக இருப்பதானால், சக

உழைப்பாளியின் கஷ்டத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இவ்விரு படைப்புகளும் வறுமைப் பட்ட, தம் தேவையைத் தீர்க்க பொருளாதார சமூக கட்டமைப்பில் மனிதர்கள் படும் துயரைச் சித்திரிக்கின்றன. ஆனாலும் இரண்டு படைப்புகளும், மூன்றாம் உலக நாடுகளில் உலகமயமாக்கல் ஏற்படுத்தி இருக்கும் தாக்கத்தை மிக நுண்ணியமாகப் பேசுகின்ற, சித்திரிக்கின்ற படைப்புகளாக வெளிப்பட்டு இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அதாவது இன்று உலகமயமாக்கலின் வழியாகப் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம், செல்வாக்கு இந்திய - இலங்கை போன்ற மூன்றாம் உலக மக்களின் வாழ்வியல் நடத்தையில் ஏற்படுத்தி வரும் மாற்றங்கள் -விளைவுகளை அவ்விரு படைப்புகளும் சித்திரித்து இருக்கின்றன என்றே சொல்ல வேண்டும்.

Meals Readyயை பொறுத்தவரை, அந்த நெடுஞ்சாலையும் அதில் நடப்பட்டிருக்கும் விமான நிலையம் பற்றிய அறிவிப்புப் பலகையும், பன்னாட்டு துரித உணவக சேவையாளர்கள் போன்று அணிவிக்கப்படும் உடையும், சொகுசுக் கார்களும், தண்ணீர் போத்தல்கள், (Mineral Water Bottle), அங்கு வாடிக்கையாளர்களாக வரும் இளைஞர்கள், பேச்சாக அல்ல மெல்லிய கூச்சலாக சிந்தி சொல்லும் ஆங்கிலம், உச்சமாக உணவு தயார் என்பதை அறிவிக்கும் அறிப்பு பலகை ஆங்கிலத்தில் மட்டுமே இருப்பது என்பதாக அமைய, நத்தார் தாத்தா கதையிலும் உலகமயமாக்கலின் தாக்கத்தை காணலாம். Super Market-Food City Culture என்ற வகையிலான கலாசாரம் உடலுக்கு பொருந்தாத உடை, அத்தகைய நிறுவனங்கள் தங்கள் பொருட்களை விற்கக் கையாளும் உத்திகளின் மேலைத்தேய தாக்கம் இப்படியாக பலவற்றைக் கூறலாம்.

இவ்விரு படைப்புகளிலும் பிரஸ்தாபிக்கப்படும் அவ்விரு மனிதர்களின் உடல்களுக்கு பொருத்தா பொழுதும் பண வருவாய் ஒன்றுக்காக மட்டுமே அத் தகைய வேடத்தை தரிப்பது என்பது, உலகமயமாக்கல் வழியான கலாசாரம் என்பது நம் மீது திணிக்கப் படும் ஒன்று என்பதை குறியீடாக அவ்விரு படைப்புகள் முன் வைக்கின்றன எனலாம்.

அத்தோடு உலகமயமாக்கலின் முக்கிய விளைவுகளின் ஒன்றான போட்டிச் சந்தை உழைக்கும் வர்க்கத்தின் உடல் வெளியின் மீது செலுத்தும் மறைமுகமான அதிகாரம், வன்முறை என்பதையும் இவ்விரு படைப்புகள் நமக்கு நுண்ணிய முறையில் எடுத்துக் காட்டுகின்றன.

ஆக மொத்தில் வெவ்வறான காலத்தில் ஆக்கப்பட்ட, இரு வேறு உருவங்களாக வெளிப்பட்டு, அதே நேரத்தில் ஒரே வகையான செய்தியினை அவ்விரு படைப்புக்களை படைத்தளித்த படைப்பாளிகளின் ஆளுமைகளுக்கு ஏற்ப, சிறந்த படைப்புகளாக நமக்கு கிடைத்து இருக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.

# சுயதொழில் வாய்ப்பின்றி தவிக்கும் போர்க்கால விதவைப் பெண்கள்

- சந்திரகாந்தா முருகானந்தன்

**போ**ர்க்காலத்தில் ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் ஒருபுறமிருக்க, போருக்குப் பிந்திய காலகட்டத்தில் ஈழத்தமிழர்கள் அனுபவிக்கும் நெருக்கடிகள் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை. பொருளாதார அத்திவாரமின்றி, தொழில் வாய்ப்பும், வசதிகளுமின்றி மக்கள் படும் சிரமங்கள் பல. அதிலும் குறிப்பாகப் போர்க்கால விதவைப் பெண்களும் முன்னாள் போராளிகளான பெண்களும் பெரும் சிரமங்களுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாகியுள்ளனர். வாழ்வாதாரத்திற்கு வழியின்றிக் குடும்பத் தலைமைப் பொறுப்பிலிருக்கும் விதவைப் பெண்களை அழுத்தும் சுமை ஒருபுறம், பாதுகாப்பற்ற நிலையில் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகள் மறுபுறமென நாட்டு நிலை கொடூரமாக உள்ளது.

போர்க்காலத்தில் இருந்ததை விட, தற்போது பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றமையைப் பத்திரிகைச் செய்திகளில் வரும் பாலியல் வன்முறைகளின் பட்டியல் தரிசனமாக்குகிறது. இவ்வாறு கட்டுக்கடங்காமல் தொடர்கின்ற பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறை வெட்கித் தலைகுனிய வைப்பதுடன் பேரவலத்தையும் ஏற்படுத்துகிறது.

கடந்து போன மூன்று தசாப்த்தமாக நிலவிய கொடுநாச யுத்தத்தின் பேரழிவை எவ்வாறு எளிதில் மறக்க முடியும்? யுத்த இழப்புக்கள் மூடி மறைக்க முடியாமல் உலகெங்கும் தெரிந்த விடயம்தான்! இந்த அழிவுகளால் பல்லாயிரக் கணக்கான பெண்கள் இளவயதிலேயே வாழ்க்கைத் துணையை இழந்து தனிமரமாகத் தவிப்பதுடன் குழந்தைகளை வளர்க்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். தந்தையரை இழந்த பிள்ளைகள் ஒருபுறம், பெற்றோர் இருவரையும் பறிகொடுத்த பிள்ளைகள் இன்னொருபுறம் என அநாதரவான நிலையில் வாழ்வாதாரமின்றித் தவிக்கும் இவர்களுக்கு வகை சொல்லவோ வழிகாட்டவோ எவரும் இல்லை. மீள் குடியேற்றம் என்ற பெயரில் மீளக் கொண்டு வந்து விட்டதுடன், மீள்குடியேற்றி விட்டதாகத் தம்பட்டம் அடிப்பதோடு இவர்கள் பழைய நிலைக்கு மீண்டு விடுவார்களா என்ன? வாழ வழியில்லை; வதிவிடம் சீராக இல்லை. வாழ்வாதாரமாக தொழில்துறை எதுவுமில்லை. இத்தனைக்

கும் மேலாக பாதுகாப்பு எதுவும் இல்லை. இந்த நிலையில் எதிர்காலமே கேள்விக் குறியாகி இருப்பதுடன் பாதுகாப்பற்ற சூழ் நிலையில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் அதிகரித்துச் செல்கிறது. மதுப் பாவனையும், போதைவஸ்தும் பெரும் கலாசார சீரழிவுக்கு வித்திடுகிறது. பெண் கள் வன்முறைகளால் பாதிப்புக்குள்ளாவ துடன் ஆசை காட்டி மோசம் செய்யப்படும் சம்பவங்களும் அதிகரித்துச் செல்கிறது. இன்னொருபுறம் வேலை பெற்றுத் தருவதா கக் கூறிப் பெண்களை ஏமாற்றி வன்முறை களில் ஈடுபடும் சம்பவங்களும் தலைதூக்கி யுள்ளன. இந்த நிலையில் இளம்பெண் களும், விதவைப் பெண்களும் மிகவும் கவனமாகவும், புத்திசாதுரியத்துடனும் இருக்க வேண்டும். இன்று பொருளா தாரத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி, கலாசார விழுமியங்களைப் பேணுவதும் முக்கியமாகும்.

வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் உழன்று மீதமாய்த் தப்பிப் பிழைத்தவர்கள் இன்று வாழ்க்கைப் பயணத்தைத் தொடர முடியாமல் சிதைவுற்றிருக்கிறார்கள். உளச் சோர்வும், துயரும் வாட்டி எடுக்கின்ற பொழுது வாழ்வதற்கும் வழி தெரியாமல் தவிக்கும் விதவைப் பெண்களுக்கு யார் கை கொடுப்பார்? அரச உதவிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் போதுமானதாக இல்லை. எனினும் வாழ்ந் தேயாக வேண்டும். வாழ்வை வளமாக்கும் வழிகள் வான்வெளிகளிலல்ல. எம் உறுதி யான மனதில்தான் இருக்கிறது என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். உன்னால் முடியும் பெண்ணே என்ற உள் ளொளிதான் உய்வதற்கான முதற்படி.

போர்க்கால விதவைப் பெண்களில் கணிசமானோர் இன்று மன உறுதியுடன் குடும்பப் பொறுப்பைக் கையில் எடுத்துக் கொண்டு வாழ்வாதாரப் பிரச்சினைகளுக் குத் தீர்வு காண விளைந்துள்ளார்கள். இவர் களது முயற்சிக்குக் கைகொடுக்க அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அப்பால் தனவந்தர்களும், கொடையாளிகளும் முன் வரவேண்டும். போரினால் சிதைவுற்றுப் போன எமது இனம் முன்னேற இதுவே வழி!



**மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் பிறந்த தினம் 27.06.2012**

**அவரை அனைத்து இலக்கிய நெஞ்சங்கள் சார்பாக மனமார வாழ்த்தி மகிழ்கின்றோம்.**

**சென்ற மே மாத இதழில் இரு புத்தகங்களின் பார்வையில் என்ற கட்டுரையை எழுதியவர் மேமன் கவி.**

தவறுக்கு வருந்துகின்றோம்.

# மூவின படைப்பாளிகள் கௌரவிக்கப்பட்ட விழா.










ஐக்கியத்திற்காகப் பணியாற்றிய சிங்கள, தமிழ், முஸ்லிம் எழுத்தாளர் மூவரை கௌரவிக்கும் முகமாக எழுத்தாளர்களான **திரு. தெனகம சிறிவர்தன, திருமதி. பத்மா சோமகாந்தன், ஜனாப். திக்குவல்லை கமால்** ஆகியோர் தெரிவு செய்யப் பட்டு அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழா 26.05.2012 அன்று மாலை **3.00 மணிக்கு தேசிய நூலக சேவைகள் ஆவணமாக்கல் சபை கேட்போர் கூடத்தில்** நடைபெற்றது. சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும், கொடகே நிறுவனத்தின் அனுசரணையுடனும் நடைபெற்ற இவ்விழாவில் இணைத் தலைவர்களாகத் திரு.எஸ்.ஜீ.புஞ்சிஹேவா அவர்களும், பேராசிரியர் சபா ஜெய ராஜா அவர்களும், கலாநிதி.எம்.எஸ்.எம்.அனஸ் அவர்களும் பங்கேற்று, கௌரவிக் கப்பட்ட படைப்பாளிகளைப் பற்றிய சிறப்புரைகள் ஆற்றினார்கள். சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலளார் கமல் பெரேராவும் இணைச்செயலாளர் மேமன்கவியும் சிங்களத்திலும் தமிழிலும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வில் சிங்கள - தமிழ் மொழியிலான 'தீபம்' சஞ்சிகை சிறப்பு மலரும் வெளியிட்டப்பட்டது.

இந்த விழாவின் சிறப்பு அம்சமாகக் கௌரவிக்கப்பட்ட திரு.தெனகம சிறிவர் தன அவர்களின் நூல் ஒன்று, முஹம்மது ராசூக் அவர்களின் மொழிபெயர்ப்பில் **எல்லோரும் தலைவர்கள** என்ற தலைப்பில் தமிழிலும், திருமதி. பத்மா சோம காந்தன் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் உபாலி லீலாரட்ன அவர் களின் மொழிபெயர்ப்பில் **கடவுளின் பூக்கள்** என்ற தலைப்பில் சிங்களத்திலும், ஜனாப். திக்குவல்லை கமாலின் தேர்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் ஹேமசந்திர பத்திரன அவர்களின் மொழிபெயர்ப்பில் **கண்ணீரும் கதை சொல்லும்** எனும் தலைப்பில் சிங்களத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டன.

இவ்விழாவில் பாராளுமன்ற உறப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் கலந்து கொண்டு மூவின படைப்பாளிகள் மூலம் ஏற்பட வேண்டிய ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பற்றிய ஒரு சிறப்பான உரையினை நிகழ்த்தினார்.

கௌரவிக்கப்பட்ட படைப்பாளிகளுக்கு நினவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் திரு.அமரசிங்க குடகலஆர அவர்கள் சிங்களத்திலும், இணைத்தலைவர் அந்தனிஜீவா அவர்களும் நன்றியுரை நிகழ்த்தினார்கள்.

மூவின படைப்பாளிகளும் அறிவுஜீவிகளும் கலந்து கொண்ட இவ்விழா இன்றைய நமது தேசிய சூழலுக்குத் தேவையான, அதேவேளை ஒரு முக்கியமான விழாவாக அமைந்து எனலாம்.

படங்களும் தகவலும்
**- கே. பொன்னுத்துரை**

# கொழும்புத் தமிழ்ச்சங்கம் பொறுப்பேற்று நடத்திய உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு!

விழாத் தொடங்கிய ஆரம்ப நாட்களில் இருந்தே நான் வெள்ளவத்தையில் மூன்று நாட்கள் நடைபெற்ற உலகத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் கலந்துகொண்டு, வெகு கூர் குறிப்பாகவும் அவதானமாகவும் சகல நிகழ்ச்சிகளிலும் கலந்து, நிகழ்ச்சிகளைக் கணிப்பீடு செய்து வந்தேன்.

விழா நடைபெற்ற சகல நாட்களுமே நான் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற மன உறுதியுடனேயே ஊரில் இருந்து பல சிரமங்களைத் தாங்கிக் கொண்டு பயணம் செய்து வந்திறங்கினேன்.

எழுத்தாளர் மாநாட்டில் நான் கலந்துகொள்வது இதுதான் முதற்தடவை. எனது கால மினைக்கேட்டுக்கும் தொடர் பிரயாண அலுப்புக்கும் மத்தியில் வெகுநிதானமாகவே இந்தக் கடிதத்தில் பதிய வைக்கின்றேன். தெளிவாக ஒன்றைச் சொல்லுகின்றேன். இந்த மகாநாட்டில் கலந்துகொண்டு, நான் முன்பின் பார்த்தறியாத பல இலக்கிய முகங்களைப் பார்த்துச் சிரித்துப் பேசி, ஒன்றாக இருந்து விருந்துண்டு களித்ததை எனது வாழ்க்கையில் மறக்க மாட்டேன்.

நேரில் பார்த்தறியாத உங்களையும், உங்கள் மல்லிகையையும் நான் முன்னரே கேள்விப் பட்டிருக்கிறேன். மல்லிகையின் ஒரு சில இதழ்களையும் பார்த்திருக்கின்றேன். ஆனால் நேருக்கு நேர் முகம் பார்த்துப் பேசிக்கொள்ளச் சந்தர்ப்பம் தந்த இந்த சர்வதேச மகாநாட்டுக்கு நான் நன்றி சொல்லத்தான் வேண்டும். முதல்நாள் மாநாட்டு மத்தியான இடைவேளையில் நான் வெளியே வந்திருந்த சமயம் மண்டபத்தின் வெளிப்புறப் பகுதியில் நீள்வரிசையில் இருந்த சீமெந்துக் கட்டில் நீங்கள் கையில் ஒரு பையுடன் இருந்தீர்கள். தமிழகப் பிரபலங்களிடம் இந்த எளிமையை எதிர்பார்க்கவே முடியாது. உங்களுடன் பேச மெய்யாகவே எனக்கு மனப் பயம். இருந்தாலும் உங்களது எழுத்தின் மூலம் உங்களை ஓரளவு புரிந்து வைத்திருந்ததினால் மெல்ல மெல்ல நெருங்கி வந்து என்னை நானே உங்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டேன். இதுவும் இவ்விழா எனக்குத் தந்துதவிய இலக்கியப் பரிசாகும் எனக் கருதுகின்றேன்.

பத்திரிகைகளிலும் வெளியுலகிலும் இந்த மூன்றுநாள் விழாவைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் வந்துள்ளன என்பது என்னமோ உண்மைதான். இந்தச் சாதக - பாதகமான விமர்சனங்களும் கண்டனங்களும்தான் இவ்விழா வெற்றிகரமாக நடந்து முடிந்து விட்டதற் கான அத்தாட்சியாகும்.

விழா வெற்றியா? - தோல்வியா? என்பது இருக்கட்டும். என் மனசில் பசுமையாக நிறகப் போவது ஒன்றே ஒன்றுதான். இத்தனை எழுத்தாளர்களும், இலக்கிய அபிமானிகளும் வரிசை யில் நின்று தத்தமது மதிய போசனத்தைப் பெற்று, ஒன்றாக இருந்து உண்டு களித்தார்களே, இந்த மனநிறைவான காட்சியை நாம் வேறெங்கு காணப் போகின்றோம். மூன்று நாள் விழா வின் நிறைவுக்கும் இது ஒன்றே போதும் என என்னுடைய மனம் சொல்லிக் கொண்டிருக் கின்றது.

**கே.மதனன்**

**பூண்டுலோயா**

# எல்.வஸீம் அக்ரம் கவிதைகள்

## இளநரை

பின் பாதியிரவொன்றில்
இருள் வீங்கிப் புடைத்த அறைக்குள்
கனவுகளுக்குக் கருத்தடையை
அனுமதித்துக்கொண்டு
தனிமையைக் கட்டியணைத்தபடி
உறங்கும்
இளநரைப் பெண்களின்
இதிகாசங்களில்
தேன்நிலவுக் கவிதைகள் கலந்தவண்ணம்.

## பசியடங்காக் காற்று

விருட்சங்களால் புதைந்த நிலமொன்றின்
வனப்பை வருடுகின்ற தோகைகளையும்
அதன் ஸ்பரிச சுரங்களையும்
இன்னும் பறவைகளின் இசை ஒலங்களையும்
வேட்கையுடன் தேடி அலைகின்ற இந்த
மனிதனிடம்
மரம் வெட்டாதே என்று
எத்தனை முறைதான்
முறையிடுகின்றது
பசியடங்கா காற்று.

## மரணம்

ஒரு புள்ளியில் நிறைகின்ற
மூச்சுத் துணிக்கைகளை
அப்படியே அள்ளியெடுத்து
பகிர்ந்தளிக்கின்ற தருணம்

உடல் ஊசி
உலக வர்ணங்கள் அனைத்திடமும்
இறைஞ்சி
பின் அனைத்துச் சக்திகளும்
இறுதிச் சுரங்கள் பாடுகின்ற நேரம்.

## விகாரத்தின் பிடி

புதர் ஒன்றின் வாயில்
மலைப்பாம்புகளின் விஷப் பரீட்சகங்கள்
விசர் நாய்களின் இரவுக் காவல்
பழைய பிணங்களின் வாசம்
குண்டுகளின் எச்சக் கோதுகள்
இருப்பிடமற்ற துயில் நிலக்காதல்
குளிர் அரும்பும் காற்று
அச்சத்தால் அலறுகின்ற குழந்தை
போர்வைகளற்ற படுக்கை
இன்னும் சகிக்க இயலாத பலவற்றின்
கோரங்களை அருந்திக் கொண்டிருக்கின்றது
யுத்தத்தின் பின்னரான இருப்பிடம்.

# நண்பனே... எனது உயிர் நண்பனே!

- மூதூர் மொகமட் ராபி

எனக்கு நீண்டகால நண்பன் ஒருவன் இருந்தான்.

ஒரு நிமிஷம் இருங்கள்! 'இருந்தான்' என்றா சொன்னேன்? அப்படிக் கூறினால் அவன் இப்போது எனக்கு நண்பன் இல்லை என்றாகி விடும் என்பதால் உங்களின் அனுமதியுடன் அதிலேயுள்ள 'ந்தான்' என்ற விகுதியை மாற்றி விடுகின்றேன். இருக்கின்றான்!

அவன் ஒரு பாடசாலை ஆசிரியன். பெரிய புத்திசாலியென்று ஒன்றும் கிடையாது. ஆனால் யாரைப் பார்த்தாலும் சுவாரசியமாகப் பேசக்கூடியவன். அது மட்டுமல்ல இடம், பொருள், ஏவல் அறிந்து நடந்து கொள்ளுவதிலே பெரிய சாமர்த்தியசாலி அவன். ஆங்கில மொழியறிவும் ஏறக்குறைய ஒரு கனவான் போன்ற தோற்றமும் இருப்பதால் கேட்கவும் வேண்டுமா? எதையும் யாரிடமும் சாதித்துக் கொள்ளக் கூடியவனாக இருந்தான் - அழகான வயசுப் பெண்கள் உட்பட. அவன் எதைச் செய்தாலும் அதற்கு உள்ளூர ஏதாவது காரணம் இல்லாமலிருக்காது.

அவனிடமுள்ள படுசுவாரசியமான விடயம், எப்படியான தகிடுதத்தங்கள் சுழியோட்டங்களிலே ஈடுபட்டாலும் வேளை தவறாது இறைவணக்கத்தில் ஈடுபட்டு விடுவான் என்பதுதான். அந்த வழக்கத்தை மட்டும் அவன் என்றைக்கும் கைவிட்ட தில்லை. நான் கூட, "செய்வதையெல்லாம் செய்துவிட்டு தொழுது தப்பிவிடலாம் என்ட நப்பாசையாடா உனக்கு...? நம்மையெல்லாம் படைச்சவன் என்ன அவ்வளவு ஏமாந்தவனாடா?" என்று அவனை வேடிக்கையாகக் கலாய்ப்பதுண்டு. தான் தொழுவது மட்டுமல்லாது "ஒழுங்காகத் தொழுகிறாயாடா நீ?" என்று தொடங்கி எனக்கும் மற்றவர்களுக்கும் சேர்த்து அவ்வப்போது "மினி பயான்" (சிறு ஆன் மீகச் சொற் பொழிவு) வைப்பான், அவன்.

எனக்கும் அவனுக்குமிடையிலே உயரம் மற்றும் நிறம் அடங்கலாக தோற் றத்தில் மட்டுமல்லாது மனோபாவங் களிலும் நிறைய வேறுபாடுகள் இருந் தன. எதையுமே நேர்வழியில் மட்டுமே சிந்திக்கவும் அணுகவும் விரும்புபவ னாகிய எனக்கு அவனது சாமர்த்தியப் போக்கு வியப்பையும் ஒருவித ஆர்வ மதிப்பையும் ஏற்படுத்துவதுண்டு. அவனைப் போல சாமர்த்தியமாக நடந்து கொள்ள மட்டும் எனக்குத் தெரிந்திருந்

தால் இன்று இருப்பதை விடவும் வசதியான காத்திரமானதொரு வாழ்வை நான் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடும். ஆனால் அது நிச்சயம் எனக்குப் பிடித்தமான வாழ்வாக இருந்திருக்காது என்பதெல்லாம் வேறு விடயம்.

எங்களுக்கிடையே இத்தனை வேறுபாடுகள் இருந்தபோதிலும் இருவரும் வெகுகாலமாக நல்ல நண்பர்களாகத்தான் இருந்து வந்தோம். மன்னிக்கவும், இருக்கின்றோம். அதற்குரிய காரணங்களில் ஒன்று நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொள்ள முடியாதளவு தூரத்தில் வசிப்பது. எங்களது மனோபாவ வேறுபாடுகளை மோதவிடாமல் கவனமாகத் தவிர்த்துக் கொள்வது மற்றையது.

ஆனால் இப்போது நான் சொல்லப் போகும் விடயம் எங்களுக்கிடையே இருக்கும் அந்த எழுதாதச் சட்டம் பற்றியல்ல. மாறாக, அத்தனை கவனமாக இருந்தும் கூட நாங்கள் இருவரும் மோத வேண்டிய சூழ்நிலை எப்படி உருவானது என்பதைச் சொல்வதற்காகத்தான் இதை எழுதிக்கொண்டிருக்கின்றேன்.

அதை நீங்கள் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு முன்பு நானும் இப்போது ஓர் ஆசிரியராகி ஒரு பாடசாலையிலே கற்பித்துக் கொண்டிருப்பது, அதே பாடசாலையில் சில காலத்துக்கு முன்னர் அதிபராகக் கடமையேற்ற ஒரு ஊழல் மோசடிப் பேர்வழியின் அட்டகாசங்கள், அவரின் நேர்மை தவறிய நடவடிக்கைகளால் எனது சமூகத்தைச் சேர்ந்த ஏழைக் குடும்பங்களின் கல்வியில் ஏற்பட்டு வந்த பாதிப்புக்கள் எல்லாவற்றையும் விலாவரியாகச் சொல்லியாக வேண்டும்.

ஆனால் அதையெல்லாம் ஒன்றும் விடாமல் நான் விபரிக்கப் போனால் நீங்கள் ஒன்றிரண்டு கொட்டாவிகளுக்குப் பிறகு இந்தக் கதையை மூடிவைத்து விட்டு தொலைக்காட்சியில் ஐபிஎல் கிரிக்கட் மறு ஒளிபரப்புகளைப் பார்க்கப் போய்விடுவீர்கள் என்பதால் விட்டு விடுகின்றேன். (பிழைத்துப் போங்கள்!)

△ △ △ △

ஊழல் பேர்வழியின் அட்டூழியங்களுக்கு எதிரான மும்முரமான போராட்டத்தின் உச்சத்தில் நானிருந்த நேரம் அது.

அதே காலப்பகுதியில்தான் எங்களது உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் அந்தரங்கச் செயலாளராக அந்த நெடு நாள் நண்பன் நியமிக்கப்பட்டான். அந்த விடயம்கூட ஒருநாள் வீட்டுக்குப் போவதற்காக நான் பிரதான வீதியைக் கடந்து கொண்டிருந்தபோது என்னைக் கண்டுவிட்டு காரை நிறுத்தி அவன் பேசியதால்தான் தெரிய வந்தது.

பின்பு ஒருநாள் எங்கள் பாடசாலையின் வருடாந்த கொண்டாட்ட நிகழ்ச்சி ஒன்றுக்குப் பொலீஸ் காவலுடன் அவனது அரசியல்வாதி சகிதம் வந்திருந்தான்.

178 சென்ரிமீற்றர் உயரத்தில், ஆகாய வெளிர் நீல நிற சேர்ட், ரத்தச் சிவப்பு நிற டை, கறுப்புக் கோட் குளிர்க்

கண்ணாடியுடன் அழகான கறுப்பு நிறத்தில் பளபளக்கும் ஹையுண்டாய் காரில் ஸ்மார்ட்டாக வந்து இறங்கிய அவன்மீது உண்மையான நேசமுள்ள எனக்கே லேசான பொறாமை வந்துவிடுமோ என்று பயந்திருக்கின்றேன். அவனது தோற்றத்துக்கும் குணாம்சங்களுக்கும் அந்தப் பதவி வெகு கச்சிதமாய் இருந்தது.

அங்கும் கூட என்னிடம், "டேய்! மச்சான், தவறாமல் அஞ்சு நேரமும் தொழுகிறாயாடா?" என்றுதான் கேட்டான். சரி இறைபக்தியில் பற்றி இவ்வளவு அக்கறைப்படுபவன் நிச்சயம் நமது சமூகத்தின் பிரச்சினையிலும் அக்கறை காண்பிப்பான் என்று நம்பி எனது அதிபரின் துவேசம், ஊழல் மோசடி நடவடிக்கைகள், அவருக்கெதிரான எங்களது போராட்டங்கள் பற்றியெல்லாம் அவன் காதிலே போட்டு வைத்தேன். அவரால் சுற்றயல் பிரதேசத்தில் இருக்கும் எங்கள் சமூகம் எவ்வளவு மோசமாகப் பாதிப்புக்குள்ளாகின்றது என்பதையும் விளக்கமாக விபரித்து அந்த ஊழல் பேர்வழியை இந்த இடத்திலிருந்து அகற்றுவதற்குச் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியல் ரீதியாக உதவுமாறு அவனிடம் கேட்டிருந்தேன்.

ஆனால் அதுதான் நான் செய்த மிகப்பெரும் தவறு!

அதைவிடத் தனிப்பட்ட வகையில் எனக்கு ஏதாவது பாரிய உதவி ஒன்றைக் கேட்டிருந்தால் கூட எங்கள் இருவருக்குமிடையில் எந்த மனஸ்தாபமும் இன்றுவரை வந்திருந்திருக்காது என்பது இப்போதுதான் தோன்றுகின்றது எனக்கு.

அரசியல்வாதிகளின் இருப்பே அவர்களை நம்பி வாக்களிக்கும் நமது அப்பாவிப் பொதுமக்களின் முட்டாள்தனத்திலும் மறதியிலும்தான் உள்ளது. அரசியலில் இறங்கிவிட்டால் அவர்களே நினைத்தாலும் கூட தாங்கள் பிடித்திருக்கும் அசிங்கம் பிடித்த வஞ்சகப் புலி வால்களை கைவிட்டு விடமுடியாது. அரசியல் சதுரங்க விளையாட்டில் நேர்மையான மனிதர்கள் என்று யாராவது இருந்தால் அவர்கள் மார்க்கட் மவுசு குறைந்த தமிழ் சினிமா நடிகைகள் போலத்தான் இருந்தாக வேண்டும். மனசாட்சியில்லாத மிருகங்கள் மட்டுமே ஆயுள்வரை கதாநாயகர்களாக உலாவரும் சர்க்கஸ் கூடாரம்தான் அரசியல்துறை. ஒரு திருடனுக்கு எப்படிப் பார்த்தாலும் மற்றொரு திருடன்தானே உபத்திரவமில்லாதவனாக இருக்க முடியும்.

இதையெல்லாம் எப்படி நேரடியாக என்னிடம் சொல்வது என்று தெரியாமலோ என்னவோ சிறிது காலம் என்னை அவனது அலுவலகத்துக்கும் வீட்டுக்குமாக அலையச் செய்தான் எனது நேசத்துக்குரிய அந்த நீண்டநாள் நண்பன்.

இறந்த மகனை உயிர்ப்பித்துத் தருமாறு கேட்ட தாயிடம், "சாவு விழாத ஒரு வீட்டிலிருந்து பிடிச்சாம்பல் எடுத்து வா." என்று கேட்டாராமே புத்த பெருமான். அந்தப் போதிமரத்து மாதவனைப் போலவே, "என்னால் செய்ய முடியாது" என்று அவனுக்கே நிச்சயமாகத் தெரிந்த சில ஏற்பாடுகளைக் குறிப்பிட்டு "அதையெல்லாம் செய்து கொண்டுவா ஆளைத் தூக்கி விடலாம்'' என்று என்னை

அலைக்கழித்தான் அந்த சாமர்த்திய சாலி.

மரணமே நிகழாத வீட்டிலிருந்து பிடிச்சாம்பல் கொண்டு வரப்போன பெண்ணின் நிலைமைதான் அப்போது எனக்கும் இருந்தது. ஆனாலும் நான் புத்தபெருமானின் துணையில்லாமலே என்னுடைய 'இறந்த குழந்தையை' உயிர்ப்பித்தேன். இன்னமும் சொல்லப் போனால் அந்த புத்தபெருமானின் எஜமானர்களின் மறைமுக இடைஞ்சலையும் மீறித்தான் 'மரித்த குழந்தையை' உயிரூட்டியெடுத்தேன்.

ஆம்! எனது நோக்கத்திலிருந்த யோக்கியம் தந்த மனோபலத்தினாலும் தளராத விடாமுயற்சியினாலும் பொது மக்களின் ஒத்தாசையுடன் எங்கள் குழந்தைகளின் கல்வியை நாசம் செய்துகொண்டிருந்த ஊழல் பிசாசை அந்த இடத்திலிருந்து துரத்தியடித்தேன்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு வெகு நாட்களாக நண்பர்கள் நாங்கள் இருவரும் பேசிக்கொள்ளவில்லை. சிறிது காலம் இருவருக்குமிடையில் கைத்தொலைபேசி குறுஞ்செய்திச் சேவையில் மெல்லிய பனிப்போர் நிகழ்ந்து வந்தது. அதன் பின்பு அதுவும் கூட நின்று போனது.

நீண்ட காலமாய்த் தொடர்பே கிடையாது.

ஏறத்தாழ அவனை நானும் என்னை அவனும் மறந்துபோய்விட்டிருந்த நிலையில் இரண்டொரு நாட்களுக்கு முன்பு நகரிலிருக்கும் பிரபலமான மருந்துக் கடையொன்றிலே மருந்தை வாங்கிக் கொண்டு திரும்பிய போது எனக்குப் பின்னால் நின்றிருந்தான் அவன்.

"மச்சான் நீயாடா? அஸ்ஸலாமு அலைக்கும்!"

அந்த வெளிர் நீலநிற சேர்ட்... சிவப்பு டை... கறுப்புக்கோட்... கார்... எதையுமே காணவில்லை. சாயம் போன ரீசேர்ட் ஜீன்ஸில் முகவாயில் லேசாய் நரைத்த மூன்றுநாள் ஷேவ் செய்யப் படாத தாடியுடன் 'அவனா நீ' என்பது போல நின்றிருந்தான்.

"அலைக்கும் ஸலாம்! என்னடா எப்படியிருக்கிறாய்...? இப்ப உன்னைத் திரும்பவும் ஸ்கூலுக்கு ரிலீஸ் பண்ணிட்டாங்களா?"

"ம்ம்! தட் ஈஸ் நொட் ரிலீஸ் மச்சான், இட்ஸ் ரியலி எ பிக் ரிலீப்.'. டா!" என்றான் தோள்களைக் குலுக்கிக் கொண்டு. அதன் பிறகு தெருவோரமாக நின்று வெகுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தோம்.

"கொஞ்சம் இருடா, ஒரு நிமிஷம் நானும் மருந்தை வாங்கிட்டு..." என்று மீண்டும் பாமசிக்குள்ளே நுழைந்தவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

இத்தனை நடந்தும் அவன் மீது எனக்குத் துளியளவு கூட வருத்தமில்லை என்றால் நம்புவீர்களா நீங்கள்?

ஆம்! அவன் மீது பரிதாபம்தான் ஏற்பட்டது. அதுகூட, அவனது காரையும் வசதிகளையும் பறித்துக் கொண்டு மீண்டும் 20ஆம் திகதியைக் காத்திருக்

கும் சாதாரண ஓர் ஆசிரியர் வாழ்க்கைக் குள்ளே தள்ளிவிட்டார்களே என்பதனால் அல்ல! அவன் சாமர்த்தியத்துக்கு ஒரு பீ.எம்.டபிள்யூ காரோடு நாளைக்கே நடு வீதியில் என்னை மறித்து, "மச்சான் இப்ப நான்..." என்று வேறு ஒரு புதிய தகவலை அவன் சொல்லக்கூடும்.

ஆனால், எனது கவலையெல்லாம், 'எப்போது பார்த்தாலும் என்னைப் போன்ற நண்பர்களுக்குத் தொழுகையை வலியுறுத்தும் அந்த பிராண்டட் 'மார்க்க பக்தி' நண்பனுக்கு அந்த எல்லாம் வல்ல அல்லாஹ் சுபஹ்ஹானஹுதாலா, அன்றாடம் கூலிவேலை செய்து விறகு வெட்டி, இறைவனைப் பயந்து ஐந்து வேளை தொழுது களவு-பொய்யின்றி நேர்மையாக வாழும் ஏழைப் பெற்றோர் களின் பிள்ளைகளுக்கு உதவும் பாக் கியத்தை ஏன் இல்லாமல் செய்தான்?' என்பதுதான்!

மருந்துகளோடு அவன் திரும்பி வந்ததும், "மச்சான், நான் கொஞ்சம் அவசரமா போக வேணும்டா... நீ வேலைய முடிச்சிட்டு போகிற வழியில வீட்டுக்கு வந்திட்டுப் போ!" என்று புறப் பட ஆயத்தமானேன்.

"சரிடா, வரப்பாக்கிறேன்... நீ போயிட்டு வா!" என்று விடை தந்தவன் சற்று யோசித்து விட்டு என்னை மீண்டும் அழைத்து,

"அதுசரி, தொழுகையெல்லாம் ஒழுங்காகச் செய்யுறியா?" என்று கேட்டான்.


A. R. R. HAIR DRESSERS

89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219

முற்றிலும் குளிரூட்டப் பெற்ற சலூன்

# தூண்டில்

**- டொமினிக் ஜீவா**

☒ *பல்கலைக்கழகத்தை யாழ் மண்ணில் ஸ்தாபிக்க வேண்டும்! எனப் போராடிப் பெற்றவர்களில் நீங்களும் ஒருவர். வெற்றியும் பெற்றீர்கள். ஆனால், அப்பல்கலைக்கழகத்தைத் திருகோணமலையில் உருவாக்க வேண்டும் எனத் தமிழ்க் கட்சிகள் கடைசி வரையும் கோரிக்கை விடுத்து வந்துள்ளன. இந்த விவகாரத்தில் நீங்கள் உங்களது பிரதேசத்து வாதத்திற்கு ஒப்பவே அந்தக் கோரிக்கையை முன்வைத்து முடிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை உங்களது வடபிரதேசத்து மண்ணில் ஸ்தாபித்துக் கொண்டுள்ளீர்களே, இந்த எனது கணிப்புச் சரிதானா, என்ன?*

**வெள்ளவத்தை** **எஸ்.ஆர்.பாலசந்திரன்**

✍ இப்பொழுதும் தெளிவாக நமது பக்கத்தை விளங்கப்படுத்துகின்றேன். எந்த வகையான பிரதேசவாதக் கருத்துகளுக்கும் உட்பட்டு, எனது அரசியல் வாழ்வை நான் ஆரம்பித்தவனேயல்ல. இலங்கையில் பிறந்திருந்தாலும் மனிதன் எனச் சிந்திக்கப் பழக்கப்பட்டவன், நான். சின்ன வயதிலிருந்தே மானுட நேசிப்பை முன் ஆதரமாகக் கொண்டு, ஒழுகி வருபவன். தமிழ், தமிழன் என்ற செப்புக்குள் அடைத்துக் கொள்ள அப்பவேயிருந்து மறுதலித்து வாழப் பழகிக் கொண்டவன், என் தலைவர்களால் பயிற்றப்பட்டவன். உலகத்து மாந்தரையே எனது உறவு முறையாகக் கருதிச் செயற்பட்டு வருபவன். முதலில் நான் மனிதன். அதன் பின்னரே, நான் தமிழன்!

எனது பல்கலைக்கழகக் கோரிக்கைக்குப் பின்னால் ஓர் அடிப்படை உண்மை தெளிவாக இருந்தது. வட பிரதேசத்தில் கல்லூரிகள் அதிகம். அதிலும் இலவசக் கல்வித் திட்டம் அமுலாக்கியதன் பின்னர் ஒடுக்கப்பட்ட எமது சமூகத்துப் பெரும் பான்மையான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானார்கள்.

அவர்களுக்குப் பேராதனையும் ஒன்று தான். திருகோணமலையும் ஒரே தூரம் தான். யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் தோன்றியதன் பின்னர் எமது ஒடுக்கப்பட்ட சமூக மாணவ - மாணவியர் வீட்டிலிருந்து நேரே சைக்கிளில் சென்று பல்கலைக்கழகப் படிப்பை நிறைவு செய் தவர்கள் பலரை ஏற்கனவே எனக்கு நன்கு தெரியும்.

குறிப்பாக ஒன்றைச் சொல்லி வைக் கின்றேன். யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஆரம்பித்ததன் பின்னர் ஏறக் குறைய 34 ஆண்களும் பெண்களும் - எனது சமூகத்தைச் சார்ந்தவர்கள் பல் கலைக்கழகப் பட்டதாரிகளாக வெளி வந்துள்ளது வரலாற்று உண்மைகளில் ஒன்றாகும்.

இப்பொழுது சொல்லுங்கள். எமது கோரிக்கைக்குப் பின்புலமாகத் திகழ்ந் தது, பிரதேச வாதமா, என்ன?

ஒன்றை உறுதியாக நம்புங்கள். உயர் கல்வி நிறுவனங்கள் தூரத் தூரப் போகப் போக, வசதி படைத்தவர்களுக்கே வாய்ப்புக்கள் அதிகம். அவை அவர்களது வசிப்பிடங்களுக்குக் கிட்டக் கிட்ட நெருங்கி வரவர, உழைப்பாளி வர்க்கப் புத்திரர் களுக்கே சமூகலாபங்கள் அதிகம்.

● ● ●

☒ *சிறுபான்மைச் சமூகங்கள் மீது, அவ்வப்போது இனவாத அணுகு முறைகளை சில சக்திகள் வெளிப் படுத்துவது தொடர்பாக...*

**கற்பிட்டி.** **ஷ.ஷாருக்**

✍ இது இயல்பானதே. இலங்கையைப் போன்றதொரு நாட்டில் பேரினவாத சக்திகள் இதைத்தான் செய்யும்.

● ● ●

☒ *மல்லிகையில் ஆரம்பகாலங் களில் புனைகதைகளுக்கும், கவிதை களுக்கும் பொருத்தமான ஓவியங் கள் பிரசுரமாயின. ஆனால் தற்போது அது அருகிவிட்டதேன்?*

**கலாவ்வ.** **ஏ.ஏ.பர்சான்**

✍ முன்னர் சில நல்ல ஓவியர்கள் பக்கம் பக்கமாக இருந்து உதவி வந் தனர். ஆனால் இன்று அவர்களில் சிலர் மறைந்து விட்டனர். சிலர் தூரத் தூரப் போய் விட்டனர்.

● ● ●

☒ *செவ்வித்தாக்கம் சிற்றிதழ்களுக் குப் பொருந்துமா? மல்லிகை ஆசிரியர் என்ற ரீதியில் உங்கள் அநுபவம் என்ன?*

**அநுராதபுரம்.** **ஜமீல்**

✍ எது பொருந்தும், பொருந்தாது என் பதைத் தீர்மானிப்பது பொதுமக்களே!

● ● ●

☒ *உங்களது இனிய நண்பர் ஏ.ஜே. கனகரட்னாவைப் பற்றி, இடை யிடையே நீங்கள் நினைத்துப் பார்ப்ப துண்டா?*

**நல்லூர்.** **ஆர்.சிவநேசன்**

✍ மறக்க முடியாத இலக்கிய நண்பன் ஏ.ஜே. என்னால் இன்று வரைக்கும் மறக்க முடியாத இலக்கிய நண்பராகத் திகழ்ந்து வருபவர் அவர்தான்.

● ● ●

☒ *சமீபத்தில் நீங்கள் யாழ்ப்பாணப் பக்கம் வந்து போகவில்லையே, என்ன காரணம்?*

**சுன்னாகம். எஸ்.சிவவேலன்**

✍ முன்னர் போல, அடிக்கடி பிரயாணம் செய்ய முடியவில்லை. இருந்தாலும் என்னுடைய உணர்வுகளும் நினைவுகளும் உங்களைப் பற்றியே சதா நினைத்துக்கொண்டேயிருக்கிறது.

● ● ●

☒ *மல்லிகையின் இன்றைய வளர்ச்சி எந்தக் கட்டத்தில் உள்ளது?*

**கண்டி. ஆர்.கண்ணன்**

✍ நவீன வெளியீட்டுச் சாதனங்களைப் பயன்படுத்துவதால், அதன் பரவல் சர்வ தேசமெங்கும் பரவிப் படர்ந்துள்ளது.

● ● ●

☒ *முன்னர் ஒருகாலம் யாழ்ப் பாணத்தில் இருந்து மல்லிகை இதழ்கள் வெளிவந்ததற்கும், இன்றைய காலகட்டத்தில் கொழும்பில் இருந்து அது வெளிவருவதற்கும் உள்ள சாதக - பாதக நிலை பற்றிக் கூற முடியுமா?*

**மருதானை. எஸ்.பரஞ்சோதி**

✍ அன்றைய மல்லிகையின் வரவு ஒரு மாகாணத்தின் தலைப்பட்டினத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தது. இன்றைய மல்லிகையோ நாட்டினது தலைநகரத்தில் இருந்தல்லவா வெளி வந்து கொண்டிருக்கின்றது.

● ● ●

☒ *உங்களை இன்றுவரைக்கும் வழி நடத்தி வரும் சக்தி எது?*

**சரசாலை. ஆர்.குமணன்**

✍ அசராத தன்னம்பிக்கை. தளராத மன உறுதி!

● ● ●

☒ *நீங்கள் இதுவரையும் நாவலொன்றும் எழுதவில்லையே! புதிய நாவலொன்றை எழுதினால், என்ன?*

**கரம்பன். ம.மதுசூதனன்**

✍ பல காலமாக மனசளவில் நாவலொன்று எழுதத் திட்டமிட்டு இயங்கி வருகின்றேன். வேலை நெருக்கடி. கூடிய சீக்கிரம் அந்த நாவல் நூலாகவே வெளி வரும். கொஞ்சக் காலம் பொறுத் திருங்கள்.

● ● ●

☒ *உண்மையை மனந்திறந்து சொல்லுங்கள். யார் மீதாவது மனவிரோதம் உண்டா?*

**சுன்னாகம். ஏ.கருணாகரன்**

✍ தனிப்பட்ட ரீதியில் ஒரு சிலரிடம்

எனக்கு அபிப்பிராய பேதம் உண்டு. ஆனால் துவேஷம் சிறிது கூடக் கிடையவே கிடையாது. மற்றும்படி மல்லிகையாளன் என்கின்ற ரீதியில் நம்பினால் நம்புங்கள். இல்லாது போனால் விட்டு விடுங்கள். யார் மீதும் எனக்கு இன்று வரையும் பகையோ விரோதமோ கிடையவே கிடையாது. நம்புங்கள். இது பொய்யல்ல!

● ● ●

☒ மல்லிகைப் பந்தல் மூலம் பல நூல்களைக் கடந்த காலங்களில் தொடராக வெளியிட்டு வந்துள்ளீர்களே, அதன் பிரதிபலிப்பு என்ன?

**நீர்வேலி. எஸ்.சபேசன்**

✍ மல்லிகை யாழ்ப்பாணத்தில் வேர் பரப்பி வளர்ந்து வந்த அந்தக் காலகட்டத்திலேயே மல்லிகைப் பந்தலின் வெளியீடுகளாகப் பல நூல்களை வெளியிட்டு வந்துள்ளோம்.

இன்றுங்கூட, நம்மவர்கள் வெளிநாட்டிலிருந்து கொழும்பு வந்து திரும்பிச் செல்லும் தருணங்களில் மல்லிகையைத் தேடி வந்து, தமக்கு விருப்பமான நமது வெளியீடுகளை வாங்கிச் செல்கின்றனர்.

● ● ●

☒ உங்களுக்குப் பிறந்த மண் மீது பாசம் உண்டா?

**நல்லூர் ஆர்.மகாதேவன்**

✍ ஓர் உண்மையான மக்கள் கலைஞன் பிறந்த மண்ணின் மீதுள்ள அதீத பாசத்தினாலும் அபிமானத்தினாலுமே கலைஞனாகக் கடைசியில் முதிர்ச்சி அடைவான். பிறந்த மண்ணின் மீது ஆறாத பாசமும் பற்றும் கொண்டவர்கள் தான், இன்று நாம் பாராட்டும் பல சர்வ தேசக் கலைஞர்கள்.

● ● ●

☒ உங்களுடைய சுய வரலாறு கொண்ட நூல்கள் இரண்டை ஏற்கனவே எழுதி வெளியிட்டுள்ளீர்கள். மூன்றாவது தொகுதியை கூடிய சீக்கிரம் எழுதி, நூலுருவில் வெளியிட்டால், என்ன?

**பதுளை. எல்.சுமணன்**

✍ ஏற்கனவே எனது சுய வரலாற்று நூல்கள் இரண்டை நூலுருவில் வெளியிட்டிருந்தேன். அதிலும் முதற் பாகத்தை ஆங்கில மொழியிலும் நண்பர் ஒருவரைக் கொண்டு மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தேன். கொஞ்சக் காலம் அவகாசம் தாருங்களேன்! நிச்சயமாக எனது சுய வரலாற்று நூல் மூன்றாம் பாகம் வெளிவரும்.

- ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். இன்று உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் டொமினிக் ஜீவாவின் சுய வரலாற்று நூல்கள், ஜீவா மறைந்ததின் பின்தான் புதுப் புகழும், புதுப் பொலிவும் பெறும்.

---

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும், மல்லிகை ஆசிரியரும், வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு விவேகானந்த மேடு, 103A, இலக்கத்திலுள்ள Lakshmi Printers அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# தற்போது விற்பனையில்

- திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு
  - திருமலை நவம் 650.00
- ஈழத்து நவீன ஓவியம்
  - சு. சிவரெத்தினம் 350.00
- பேராசிரியர் க. கைலாசபதி
  - லெனின் மதிவானம் 300.00
- இலங்கைத் தமிழியல்: சில பதிவுகள்
  - கலாநிதி ச. மனோன்மணி 675.00
- யாழ்ப்பாண இராச்சியம்
  - பேரா. சி . பத்மநாதன் 490.00
- நூல் தேட்டம் - 7
  - என். செல்வராஜா 1450.00
- பிற்கால இலக்கண மாற்றங்கள்
  - க. வீரகத்தி 600.00
- சிறுவர் இலக்கியம்
  - பேரா. சபா. ஜெயராசா 350.00
- இலங்கையின் இனவர்க்க முரண்பாடு
  - குமாரி ஜயவர்த்தன 400.00
- தமிழ்க் கவிதைப் பாரம்பரியம்
  - பேரா. கா. சிவத்தம்பி 600.00

**குமரன் புத்தக இல்லம்**
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6
தொலைபேசி: 011 2364550, 011 3097608
E-mail: kumbhlk@gmail.com


We Become Part Of The Romance
On Your Special Day
131 Devi
Jewellers (Pvt) Ltd
22 KT Gold Jewellery
Devi Jewellers (Pvt) Ltd. 131, Sea Street, Colombo - 11.
Sri Lanka Tel: +94 112 395001-5, Fax: +94 112 327101,
E-mail: info@devijewellers.lk